
க்ரம்

அக்னி புத்திரன் என்கிற இந்திய ராக்கெட் எதிரிகளால் கடத்தப் படுகிறது. கடத்தப்பட்ட அந்த அக்னி புத்திரனை மீட்பதற்காக உளவுத்துறை இளைஞன் விக்ரம் களமிறங்குகிறான். கம்ப்யூட்டர் பெண் இஞ்சினியர் ப்ரீத்தி என்பவளுடன் சலாமியா என்கிற விநோத ராஜ்ஜியத்துக்கு பயணமாகிறான். ஏராளமாக ஒரு ராஜா, தாராளமாக ஒரு ராஜகுமாரி, வில்லன் ராஜகுரு என்று சலாமி யாவில் பயணிக்கும் ஆக்ஷன் நிரம்பிய சாகச ஜிலு ஜிலு கதை. 'விக்ரம்' என்ற பெயரில் கமல்ஹாசன் நடிப்பில் உருவான சினிமாவுக்காகவென்றே எழுதப்பட்ட இந்தக் கதை திரைப்படமாக உருவாகும்போதே ஷூட்டிங் புகைப்படங்களுடன் குமுதத்தில் தொடர்கதையாகவும் வந்து ஹிட் ஆனது.



ரூ.75

ISBN 978-81-8493-461-8

Fiction / Novel

For free SMS alerts
on our new titles, send

## கிழக்கு பதிப்பக வெளியீடுகளாக சுஜாதாவின் புத்தகங்கள்

- மீண்டும் ஜீனோ
- நிறமற்ற வானவில்
- நில்லுங்கள் ராஜாவே
- தீண்டும் இன்பம்
- ஆஸ்டின் இல்லம்
- அனிதாவின் காதல்கள்
- நைலான் கயிறு
- 24 ரூபாய் தீவு
- அனிதா இளம் மனைவி
- கொலை அரங்கம்
- கமிஷனருக்கு கடிதம்
- அப்ஸரா
- பாரதி இருந்த வீடு
- மெரீனா
- ஆர்யபட்டா
- காயத்ரி
- ப்ரியா
- ஒரு பிரயாணம் ஒரு கொலை
- தங்க முடிச்சு
- எதையும் ஒருமுறை
- ஊஞ்சல்
- மாயா
- ஓரிரு எண்ணங்கள்
- விக்ரம்
- விழுந்த நட்சத்திரம்
- 6961
- ஓடாதே
- மலை மாளிகை
- விடிவதற்குள் வா
- மூன்று நாள் சொர்க்கம்
- பத்து செகண்ட் முத்தம்
- கம்ப்யூட்டர் கிராமம்
- இளமையில் கொல்
- தோரணத்து மாவிலைகள்
- மேகத்தைத் துரத்தியவன்
- நகரம்
- இதன் பெயரும் கொலை
- மிஸ் தமிழ்த்தாயே நமஸ்காரம்
- வாய்மையே சில சமயம் வெல்லும்
- இந்நூற்றாண்டின் இறுதியில் சில சிந்தனைகள்

# விக்ரம்

சுஜாதா

கிழக்கு

விக்ரம்
Vikram
by Sujatha
Sujatha Rangarajan ©
First Edition: May 2010
152 Pages, Price Rs. 75
Printed in India.

ISBN 978-81-8493-461-8
Kizhakku - 500

Kizhakku Pathippagam
No.33/15, Eldams Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone : 044 - 42009601/03/04
Fax : 044 - 43009701

Email : support@nhm.in
Website : www.nhm.in

Kizhakku, An imprint of New Horizon Media Pvt. Ltd.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.

Cover Image : Shutterstock ©

Backcover Image : Srihari

PRODN / 08 / 12-10

*Publisher*
Badri Seshadri
*Chief Editor*
Pa. Raghavan
*Editors*
Uma Sampath
Marudhan
*Copy Editors*
Mugil
Sa.Na. Kannan
R. Muthukumar
Balu Sathya
*Chief Designer*
T. Kumaran
*Designers*
S. Kathiravan
Muthu Ganesan
E. Anandan

'அக்னி புத்திரனா நீ! உன்னை வெச்சுக்கிட்டு என்னவெல்லாம் ஆட்டம் காட்டப் போறேன். பார்த்துக்கிட்டே இரு! பாத்தியா சோமு! அக்னி புத்திரன்! இட்ஸ் மைன்! என் புத்திரன்! என்னுது!' என்று அதை வாஞ்சையுடன் தடவிக் கொடுக்க, படபடவென்று வானத்தில் சப்தம் கேட்க, அவர்கள் மேலே பார்க்க, ஓர் அலுமினியப் பறவை போல ஹெலிகாப்டர் ஒன்று மெல்ல அவர்களை நோக்கி இறங்கியது.



# அக்னி புத்திரனை நீங்கள் சந்திக்குமுன்...

இந்தக் கதைக்கு ஆதாரமான, மிக ஆதாரமான சம்பவம் ஒரு செப்டம்பர் மாத மழை நாளில், சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் ஒரு பிற்பகலில் நடந்தது. விவரம் தினத்தந்தி பேப்பரில் வந்திருந்ததை நீங்கள் கவனித்திருக்கலாம். அன்றைய தினம் மூன்று பேருக்கு கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது. இருபத்தைந்து வருஷம் சிறைத் தண்டனை! அம் மூவரும் அந்தத் தண்டனையின் தீவிரத்தைப் பற்றி எதுவும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. புராதனமான, காவி வண்ண கோர்ட்டுக் கட்டடத்தில், உயர மேட்டிலிருந்து, கோட்டை விடப் புராதனமாகத் தோன்றிய நீதிபதி, மந்திரம்போல் உச்சரித்த அந்தத் தீர்ப்பை அம்மூவரும் வாயில் ஏதோ மென்றுகொண்டு கவனித்ததில் இருந்த அலட்சியம், அவர்கள் கெட்ட காரியர்கள், எந்தத் தேசத்தின் எந்தச் சட்டத்துக்கும் யோக்கியமாகக் கட்டுப்படாதவர்கள் என்பதைக் காட்டியது.

...இ.பி.கோ. பிரிவின்படியும், ஸீ கஸ்டம்ஸ் ஆக்ட் காஃபி போஸா, ஃபெரா, என்று பற்பல தரப்பட்ட சட்டப் பிரிவுகளையும் எடுத்துக்காட்டி நீதிபதியவர்கள், 'குற்றவாளிகள் அஷ்ராஃப் ஹுஸேன், பாபு என்கிற கமலாகர், பெர்னாண்டஸ் ஆகிய மூவருக்கும் தூதரக அதிகாரியைக் கடத்திச் சென்றதற்கும், கள்ளக்கடத்தல், போதைப் பொருள்கள் வியாபாரம் இன்னபிற குற்றங்களுக்கும் தலா இருபத்தைந்து வருஷம் கடுங்காவல் சிறைத் தண்டனையும் நாற்பத்தைந்தாயிரம் ரூபாய் அபராதமும், அதைக் கட்டாத பட்சத்திலும் மேலும் மூன்று வருஷங்கள் அதிகப்படியாகச் சிறைத் தண்டனையும்...'

'தூத்' என்று பாபு துப்பினதை நீதிபதி நிமிர்ந்து பார்த்து முகம் கடுமையாகிச் சற்று அவசரமாகவே படித்தார். மூவரும் ஒருவரை



ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். மூவரும் முப்பதைத் தாண்டாத வயது. பெர்னாண்டஸ் என்பவன் இந்தியனா என்று சந்தேகமாக இருந்தது. (ஒரு மாதிரி செம்பட்டை தாடி.) மூவரும் விருது கிடைத்ததுபோல் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

கோர்ட்டுக்கு வெளியே இடி இடித்து மழை பெய்து கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாமல் நிருபர்களும் கேமராக்காரர்களும் காத்துக் கொண்டிருந்தார்கள். டி.வி. கேமரா மேல் குடை பிடித்துப் போர்த்தியிருந்தது. ஓர் ஆசாமி ஓடிவந்து, 'இருபத்தஞ்சு வருஷம்' என்று சொல்ல அந்த இடம் சற்றுப் பரபரப்பாகியது. 'வராங்க! வராங்க!' என்று ஒரு நிருபர் கட்டியம் கூற, கைதிகள் மூவரும் முகத்தில் விரோதம் பொங்க, ஒருவருடன் ஒருவர் விலங்குகளால் இணைக்கப்பட்டு சூயிங்கமோ என்னமோ மெல்வதை நிறுத்தாமல் விறுவிறுவென்று போலீஸ் வண்டியை நோக்கி நடக்க, நிருபர்கள் பளிச் பளிச்சென்று கேமராக்கள் கண் சிமிட்டலை விரும்பாமல் அவர்கள் முகத்தை மறைத்துக் கொண்டனர்.

'அஷ்ராஃப், ஹெள டு யூ ஃபீல்?' என்றது இண்டியா டுடே.

'ஹாப்பி! வெரி ஹாப்பி!' என்று 'ச' என்று பற்களை ஹாஸ்யமின்றி விரித்தான் அஷ்ராஃப் என்பவன்.

'பாபு! தூதரக அதிகாரியைக் கொன்றது நீதானே?'

பாபு 'ப்ர்ர்ர்' என்று சப்தமிட்டுக் கண் கலங்கச் சிரித்தான்.

'இருபத்தைந்து வருஷம் சிறைக்குப் போகுமுன் ஏதாவது சொல்ல விரும்புகிறாயா பெர்னாண்டஸ்?'

பெர்னாண்டஸ் தன் விலங்கை உயர்த்தி, 'இருபத்தைந்து நாட்கள்! ஜஸ்ட் ட்வெண்ட்டி ஃபைவ் டேஸ்!' என்றான்.

'இருபத்தைந்து நாளில் என்ன?'

'வில் கம் பேக்! விடுவிக்கப்படுவோம். இருபத்தைந்து நாட்கள் போதும்! வில் கம் பேக்!'

'தடங்' என்று அவர்களை மறைத்து மூடி போலீஸின் கூண்டு வண்டி புறப்பட்டுச் செல்ல அதன் வட்டச் சன்னலில் பெர்னாண்டஸின் முகம் புன்னகையுடன் தெரிந்தது.

# 1

சிங்க இலச்சினையுடன் பல மாரிக் காலங்களைப் பார்த்திருந்தது அந்தப் பெயர் பலகை. அதில் 'பாரத் சர்க்கார் பாதுகாப்பு மந்திரி சபை ப்ராஜெக்ட் அக்னி புத்திரன்' என்று ஆங்கிலத்திலும் இந்தியிலும் மற்ற மொழிகளிலும் எழுதியிருக்க, 'இந்த எல்லையை மீறிச் செல்பவர்கள் கைது செய்யப்படுவார்கள்' என்று எச்சரிக்கையும் தனிப்பட்டு எழுதியிருந்தது. இதைப் படிக்கத் தெரியாத, இதைப் பற்றி எந்தவிதப் பயமும் இல்லாமல் ஒரு கருங்குருவி அதன் மேல் உட்கார்ந்துகொண்டிருக்க, தூரத்தில் ஒரு பெரிய லாரி 'ஏதோ ஒன்றை' மெல்ல இழுத்துக் கொண்டு வருவது தெரிந்தது. ஏதோ ஒன்று என்றுதான் அதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. கான்வாஸ் துணி மூடி இறுகக் கட்டியிருந்தது. அதன் முன்புறம் ஒரு காவல் ஜீப்பும் பின்புறம் ஒரு காவல் ஜீப்பும் அது ஏதோ அலட்டிக்கொள்ளவேண்டிய சமாசாரம் என்பதைத் தெளிவாக்க, ஜீப்புகளில் வந்த ராணுவ ஜவான்களும் தீவிர முகத்துடன் வர, அந்த வண்டித் தொடர், வேலியை நெருங்கியபோது தடுப்பில் நிறுத்தப்பட்டது. ஒரு ஜவான் குதித்து இறங்கி அங்கு வந்த ராணுவ அதிகாரிக்கு சல்யூட் அடித்துவிட்டுக் காகிதங்களைக் காட்ட அவர் அதைப் பரிசீலித்து விட்டு 'எல்லாம் சரியா இருக்குதில்லை?'

'எஸ் சார்!'

கான்வாஸின் ஒரு முனையைச் சரியாக இழுத்து, 'ரெண்டு மணிக்குள்ள ஸ்ரீஹரிகோட்டா போயிரணும். எங்கயும் நிக்காதிங்க. வழில ஏதாவது தடங்கல்னா உடனே மெஸேஜ் கொடுத்துரு. ரேடியோ செக் பண்ணிட்டில்ல?'

'எல்லாம் சரியா இருக்கு சார்.'

'ஓ.கே. ஆல் த பெஸ்ட்!' அவர் கட்டை விரலை உயர்த்திக் காட்ட, தடை விலக்கப்பட்ட வண்டித் தொடர் கம்பீரமாகப் புறப்பட்டது.

மலைப் பாதையில், பாம்பு போல் நெளிந்து செல்லும் வழியில், அந்தத் தொடர் மெல்ல ஊர்ந்து செல்ல, அந்த இடத்திலிருந்து பத்து கிலோமீட்டர் தூரத்தில் சற்று மேடான பகுதியில் பைனாகுலர் மூலம் அந்த வட்டாரத்தை வருடிக்கொண்டிருந்த ஒருவன் சட்டென்று நிறுத்தி, 'வந்தாச்சு' என்று சிரித்தான். அவனருகே சின்னதாக வாக்கி டாக்கி இருந்தது. அதை எடுத்து, 'ஹலோ சார், வண்டி கிளம்பிருச்சு' என்றான்.

ரேடியோ குரல் பதிலாக, 'கிளம்பிருச்சா? நீ அங்க போயிடு! உடனே நான் முகூர்த்தத்துக்கு வந்தர்றேன்.'

ரேடியோ கரகரப்பில்கூட இந்தக் குரலில் இருந்த அலட்சியமும் தன்னம்பிக்கையும் தெளிவாகத் தெரிய பைனாக்குலர் இளைஞன் அருகே இருந்த ஒரு மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டு அதை உதைத்துக் கிளப்பிக் குதித்துச் சென்றான்.

அங்கிருந்து இன்னும் மூன்று கிலோமீட்டர் தள்ளி மலைப்பாதை வளைவில் இருவர் காத்திருந்தார்கள். அவசரமே படாமல் உட்கார்ந்த வாக்கில் சுதாரித்த நிலையில் இருக்க, மோட்டார் சைக்கிள் வருவதை ஆர்வமின்றிப் பார்த்துக் கொண்டிருந் தார்கள். மோட்டார் சைக்கிள்காரன் நிறுத்தி, 'வருது' என்றான்.

இருவரில் ஒருவன் நிதானமாக எழுந்து அருகே வைத்திருந்த ஒரு பஸூக்கா வகைத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டான். மற்ற வன் காதில் வைத்துக் கேட்டுக்கொண்டிருந்த டிரான்ஸிஸ்டரைப் பிடுங்கி தூர எறிந்து, 'வாடா, வேலை செய்யலாம்' என்றான்.

இருவரும் சாலையின் மத்தியில் போய் நின்றுகொண்டு எதிரே வரப்போகும் குறியை நோக்கித் தத்தம் துப்பாக்கிகளை அமைத்து இரண்டு கைகளாலும் அழுத்தி, தயாராகக் கால்கள் பரப்பிப் பதற்றமே இல்லாமல் காத்திருந்தார்கள்.

மிக மௌனமாக இருந்தது. லேசாகப் பட்சிகளின் சப்தம் கேட்க, துல்லிய நீல வானம். ஒரு கிலோமீட்டர் தூரத்தில் அந்த ஜீப், லாரி



ட்ரெய்லர் வரும் ஓசை தெளிவாகக் கேட்டது. இவர்கள் இருவரும் சிலைபோலக் குறி விலகாமல் காத்திருக்க, மோட்டார் சைக்கிள் இளைஞன் ஒரு வாரப் பத்திரிகை எடுத்து நிழலில் உட்கார்ந்தபடி படித்துக்கொண்டிருந்தான்.

வரிசையின் முன் பகுதியில் ஜீப்பில் வந்துகொண்டிருந்த காவ லாளி தன் சக டிரைவருடன் சிரித்துப் பேசிக்கொண்டிருக்க, அந்தத்திருப்பத்தில் திரும்பியதும் முதன் முதலாகச் சாலை மத்தியில் காத்திருந்த அவ்விருவரையும் பார்த்தபோது எதும் தோன்றாமல் ஆரன் அடித்தான்.

சட்டென்று அவர்கள் கைகளில் வைத்திருந்த துப்பாக்கிகள் உறைக்க, 'மை காட்! லுக் அவுட்!' என்று கத்தினான்.

அவர்கள் இருவரும் வெளியே பாய்வதற்குள் 'டிச்சாங்! டிச்சாங்!' என்று ஜீப்பின் கண்ணாடி வெடித்து ஒருவன் முகம் ரத்தக்களறி ஆயிற்று. பஸூக்காவின் அடுத்த தாக்குதலில் ஜீப் உருண்டது. பின்னால் காபினிலிருந்து மற்றொரு காவலாளி வெளிப்பட்டு, ஓட முடியாமல் வெளிப்படும் நிலையில் குண்டடி பட்டு விழுந்தான். பின் ஜீப்காரர்கள் ஒருவன் குறுக்கே ஓட, தடுக்கி முழங்கால் சில்லுப் பெயர, அடுத்த குண்டு தோளில், அடுத்த குண்டு மார்பில் என்று தொடர்ந்து வெடிக்க, சுருண்டு நின்று போனான். ஒரே ஒரு காவலாளி மட்டும் தப்பித்து தீவிரமாக மலைச்சரிவில் ஓட, நிதானமாக, மிக நிதானமாக குறிபார்க்கப் பட்டு அவன் பின் மண்டையில் சட்டென்று ஒரு ரத்தப் பொந்து ஏற்பட, சரிந்து சரிந்து விழுந்தான். அடித்தவன் சிரித்தான்.

கீழே கிடந்தவனின் முதுகில் பெட்ரோல் பட்டு எரிந்தது. ஜீப் அனாதையாக நின்றது. உடல்கள் சாலையில் இங்குமங்கும் கிடக்க, மொத்தம் மூன்று நிமிஷம்தான். இப்போது மறுபடியும் அந்த இடம் அமைதியாகிவிட்டது. மெல்லிய பட்சிக் குரல்கள் கேட்க, அம்மூவரும் கம் மென்றுகொண்டே அந்த உடல்களின் அருகே வந்தனர். ஏதோ ஒரு ரகசியம் போல ஒரு பென்ஸ் கார் உறுத்தாமல் அருகே வந்து நின்றது. அதன் கதவை அவர்களில் ஒருவன் திறக்க, கதிர்ராஜா வெளிப்பட்டான்.

கதிர்ராஜாவுக்கு முப்பது முப்பத்தைந்து வயதிருக்கலாம். நல்ல உயரமான முகத்தில் பாதியை வெயில் கண்ணாடி மறைத்திருந் தாலும் அவனது காலர் இல்லாத கோட்டையும் துல்லியமான உடைகளையும் கவனித்தால் ஏதோ ஒரு மத்திய மந்திரி போலத்

தான் இருந்தான். சிவந்த உதடுகள். ஒரு புல்லைப் பிடுங்கி அதைக் கடித்துக்கொண்டே சுற்றும் முற்றும் பார்த்து, குழந்தை ஆர்வத்துடன், 'காரியம் ஆச்சா?' என்றான்.

'சுத்தமா முடிச்சாச்சு அய்யா.'

சுகியின் கவனம் பின்னால் அனாதையாக நின்றுகொண்டிருந்த ட்ரெய்லரில் கான்வாஸ் போட்டு மூடியிருந்த பொருளின் மேல் தான் இருந்தது. இடைப்பட்ட ஒரு பிணத்தை மிதித்துத் தாண்டிக் கொண்டு, அதை நோக்கிச் சென்று சரக்கென்று அதை மூடியிருக் கும் கான்வாஸ் மறைப்பை ஒரு சொடுக்கில் விலக்கினான்.

காலையில் அருமையான வெளிச்சத்தில் பளபளவென்று சுமார் முப்பதடி நீளமிருந்த ஏவுகணை ராக்கெட் அது. முகம் சற்றுத் தட்டையாக, வால் பகுதியில் செதில்களாக, ஏதோ ஓர் எலக்ட் ரானிக் அம்புபோல, வானை நோக்கிக்கொண்டிருந்தது. 'எப்போதும் புறப்படுவேன். எங்கேயும் போவேன். எதையும் அழிப்பேன்' என்பது போல ஒரு விஞ்ஞான ஆணவத்துடன்.

சுகிர்தராஜா அதைப் பார்த்ததும் ஒரு சிறு குழந்தைபோல சந்தோஷம் முகத்தில் தெரிய, 'இதப் பார்றா!' என்றான். ராக் கெட்டின் உடலில் ஆங்கிலத்திலும் இந்தியிலும் 'அக்னி புத்திரன்' என்று எழுதியிருந்தது.

'அக்னி புத்திரனா நீ! உன்னை வெச்சுக்கிட்டு என்னவெல்லாம் ஆட்டம் காட்டப் போறேன், பார்த்துக்கிட்டே இரு! பாத்தியா சோமு! அக்னிபுத்திரன்! இட்ஸ் மைன்! என் புத்திரன்! என்னுது!' என்று அதை வாஞ்சையுடன் தடவிக் கொடுக்க படபடவென்று வானத்தில் சப்தம் கேட்க, அவர்கள் மேலே பார்க்க, ஓர் அலுமினியப் பறவை போல ஹெலிகாப்டர் ஒன்று மெல்ல அவர்களை நோக்கி இறங்கியது. சுகிர்தராஜா மகிழ்ச்சியுடன், 'வந்துட்டான்யா! வா! வா! சரியான சமயம்! எல்லாம் சொன்ன வேளைக்கு நடக்குது!'

அவர்கள் யாவரும் வானத்தில் பார்த்துக்கொண்டிருக்க, கீழே கிடந்தவனில் ஒருவனுக்கு லேசாக உயிர் இருப்பதைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள். அந்த ஜவான் சிரமப்பட்டுக் கண் விழித்து, தன் துப்பாக்கியை நோக்கி மெல்ல ஊர்ந்தான்.

ஹெலிகாப்டர் புழுதி கிளப்பிக்கொண்டு சற்றுத்தள்ளி வந்து இறங்குவதை சுகிர்தராஜா ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருக்



கும்போது ஜவான் சிரமப்பட்டு எழுந்து துப்பாக்கியை எடுத்துக் குறிபார்த்து சுகிர்தராஜாவை நோக்கி நடுங்கும் கைகளுடன், 'நிறுத்து எல்லாத்தையும்!' என்றான். 'பொசுக்கிடுவேன்' என்றான். 'சுட்டுப் பொசுக்கிடுவேன்.'

சுகிர்தராஜா பதட்டப்படாமல், புல்லைக் கடித்துக்கொண்டே திரும்பிப் பார்த்துச் சிரித்தான்.

'சிரிக்காதே! தீர்த்துருவேன்! பொசுக்கிடுவேன்!'

'ஏண்டா, ஒழுங்காக் கொல்ல மாட்டீங்களா? அரைகுறைப் பசங்கப்பா... இரு, இரு என்ன செய்யணும்? கையைத் தூக் கணுமா? ஹாண்ட்ஸ் அப்! அவ்வளவ்தானே? இதோ.' சுகி அவனருகில் சென்றான்.

குற்றுயிர் ஜவான் தன்னை நோக்கிக் காட்டிய துப்பாக்கி முனையைப் புன்னகையுடன் பார்த்துக்கொண்டிருந்த சுகிர்த ராஜா, 'இருப்பா, இருப்பா! டேய். எல்லாரும் போட்டுருங்கடா. எக்குத் தப்பாச் சுட்டு வெக்கப் போறான்!' என்று அவனை மேலும் நெருங்க, அவன் பதற்றத்தில், 'கிட்ட வராதே, கிட்ட வராதே, சுட்றப் போறேன், சுட்றப் போறேன்,' என்றான். கைகள் நடுங்கின. சுகிர்தராஜா மெல்லத் தன் கைகளை மேலே உயர்த்த அவன் அணிந்திருந்த கோட்டுக்குள் ஒளித்து வைத்திருந்த சிறிய துப்பாக்கி 'ட்டுய்' என்று வெடித்தது. அதைச் சற்றும் எதிர் பாக்காத ஜவான் மார்பில் அடிபட்டு அப்படியே சரிய, அவன் விரல் அவசரமாக அழுத்திய துப்பாக்கிக் குண்டு இலக்கில்லா மல் எங்கோ பறந்தது.

சுகி, 'எல்லாம் நானே செய்யவேண்டியிருக்கு! ஞாபகப்படுத்துங் கடா. இவனுக்கு ஒரு நிமிஷம் மௌனம் அனுஷ்டிக்கணும். கடுமையான தேச சேவை' என்று கீழே கிடந்தவனைக் காலால் நிரடினான்.

இதற்குள் ஹெலிகாப்டர் சற்று அஜாக்கிரதையாக, மண்டைச் சக்கரம் சுற்ற கூட்டுக்கு இரை கொண்டுவந்திருக்கும் பறவை போல அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்க அதன் வயிற்றி லிருந்து இரண்டு கொக்கிகள் ஏவுகணைமேல் மாட்டப்பட்டு மெல்ல அது தூக்கப்பட்டது. சுகிர்தராஜா வலது கைக் கட்டை விரலை உயர்த்திக் காட்டி பென்ஸ் காரில் ஏறிக் கொள்ள, காப்டர் சாய்ந்து மடக்கி ராக்கெட் பயணியுடன் பறந்து சென்று

மறைந்தது. மோபைக்கில் இருவர் தொடர மற்றவர்கள் காரின் பின் சீட்டில் நெருக்கி உட்கார்ந்துகொள்ள, கார் புறப்பட்டுச் சென்றது. இந்த இடத்தில் சற்று நேரத்துக்குமுன் இத்தனை ரத்த சேதம் நேர்ந்ததா என்று வியக்கும்படி அமைதி கவிழ்ந்து கொள்ள, கீழே கிடந்த உடல்கள் அசையாமலிருக்க, ஓர் உடல் மட்டும் முதுகில் பெட்ரோல் எரித்ததற்கு ஏற்ப ஏதோ ஒரு ரத்தச் சூடு ஏற்பட்டுக் கொஞ்சம் புரண்டு நின்று போனது.

கதிர்தாஜாவின் கார் சற்று நேரம் கழித்து எதிரே சென்ற போலீஸ் ஜீப்பையும் சைரன் அலறலையும் பார்த்து, 'வழக்கம் போல வேட்டு. போங்க போங்க.' என்றான்.



# 2

ப்ரா என்றால், உங்களில் பலருக்கு மென்மையான கன்னிப் பெண்கள் நெஞ்சத்தில் அணிந்த கச்சணிகள் நினைவுக்கு வரலாம். ஆனால் இந்தக் கதையைப் பொருத்தவரையில் ப்ரா என்பது பெண்களின் மார்பகத்துக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லாத 'பீரோ ஆஃப் ரிஸர்ச் அண்ட் அனாலிஸிஸ்' என்கிற அரசாங்க அலுவலகம்.

இதன் சற்றே நவீனமான உறுத்தாத கட்டடத்தை நீங்கள் நந்தம் பாக்கம் போகிற வழியில் பார்த்திருக்கலாம். பார்த்து இங்கே என்ன செய்கிறார்கள் என்று வியந்திருக்கலாம். அதன் பித்தளைப் பிரகாச பெயர்ப் பலகை அத்தனை சொல்லவில்லைதான். கட்டடம் மிக அமைதியாக இருக்க, உள்ளே போகேன்வில்லா கொடிகள் அணைத்திருக்கும் போர்ட்டிகோ வரவேற்பு அறையில், திட்டப்பட்ட நகங்களுடன் பெமினா படித்துக்கொண்டிருக்கும் பெண்ணோ அந்தக் கட்டடத்தின் எட்டாவது மாடியில் நடக்கும் மிகத் தீவிரமான, நம் நாட்டின் பாதுகாப்புக்கு மிக முக்கியமான ஒரு சமாசாரத்தைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்று - எங்கே இந்த வாக்கியத்தை ஆரம்பித்தேன்? ஞாபகமில்லை. முடித்துக் கொள்ளவும். அவசரம்!

ஒரு நீண்ட முட்டை வடிவ மேசையின் தலைமாட்டில் ஜீவி ராவ் உட்கார்ந்திருந்தார். சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கலாம். டக்காக சூட் அணிந்து பைப் பிடித்துக்கொண்டு நல்ல நாட்களில் இவரிடம் ஃபிலாசஃபி, கெமிஸ்ட்ரி, லா என்று எது வேண்டுமானாலும் பேசலாம்போல இருந்தார். இன்று மிகவும் பதற்றத்

தில் இருந்தார். எதிரே மேசையின் மற்ற நாற்காலிகளில் ராணுவ, கடற்படை, விமானப்படை, போலீஸ் பெரிய அதிகாரிகள் வீற்றிருக்க, ஒரு நாற்காலி காலியாக இருந்தது. மௌன புகைமண்டலம் படிந்திருக்க எதிரே ஒரு வீடியோ திரையில் ஹிரோஷிமா வகை அணுகுண்டு வெடித்ததின் தாய்க்குடை விளைவுகள் மௌனமாக சலனித்துக் கொண்டிருக்க, ராவ் வீடியோவை அணைத்துவிட்டு, 'ஜென்டில்மன், நீங்க பார்த்தது முதல் அணு ஆயுதம். இன்னிக்குக் காலையில, பத்து பத்துக்கு ஸ்ரீஹரிகோட்டா போற பாதையில் 135-வது கிலோமீட்டரில், அரசாங்கத்தைச் சார்ந்த ரகசிய மிஸ்ஸைல் கடத்தப்பட்டது. பெயர் அக்னிபுத்திரன்.'

ராணுவம், 'ஜீவி! ஹௌ டிட் திஸ் ஹாப்பன்?' என்றார்.

'எஸ்கார்ட் ஜீப் தாக்கப்பட்டது. அப்புறம் ஒரு ஹெலிகாப்டர், ஒரு கார், மோபைக், நாலைஞ்சு ஆளுங்க, சரியா நாலு நிமிஷத்திலே கடத்திக்கிட்டுப் போயிட்டாங்க. ப்ரொஃபஷனல்! எ பர்ஃபெக்ட் ஜாப்! இது என்ன இண்டியாவா, அமெரிக்காவா?'

'மிலிட்டரி போலீஸ் ஜவான்கள் அஞ்சுபேர் இறந்து போயிருக்காங்க.'

'ஜீவி! யார் அதைச் செய்திருப்பாங்க? ஏதாவது க்ளூ?'

'இல்லை. இன்னம் இல்லை.'

'கண்டுபிடிச்சுரலாம்' என்றார் போலீஸ் கமிஷனர்.

'முதல்ல எங்க ஆபீஸ் சைக்கிள் ஒண்ணு காணாமப் போயிருக்கு. அதைக் கண்டுபிடிங்க. இது அத்தனை சுலபமில்லை. பெரிய இண்டர்நேஷனல் டெர்ரரிஸ்ட்டுங்க...'

'சர்தாரா?' என்றார் ராணுவ அதிகாரி. அவரே சர்தார்தான்.

'ஒண்ணுமே தெரியலை.'

'காணாமல் போனது ராக்கெட்டா, வெடிகுண்டா?'

ஜீவி ராவ் சற்று ஆயாசத்துடன், 'விஞ்ஞானிகள் பாஷையில இண்டர்மீடியட் ரேஞ்ச் டாக்டிகல் மிஸ்ஸைல். அதன் மூக்கில்



ஒரு அணு ஆயுதம் இருக்கு. வீடியோ காட்டினேனே, அதைப் போலப் பத்து மடங்கு சக்தி!'

'ஓ மை காட்!'

'மேலிடத்தில் இப்பத்தான் போன் பண்ணியிருந்தாங்க. வெளியே தெரியவேண்டாம்; ஒரு வாரத்துக்குள்ளே மீட்டாகணும்னு.'

அப்போது டக் டக் என்று அந்தக் கதவு தட்டப்பட, ராவ் தன் உதவியாளரை விளித்து, 'தங்கராஜ், யார் பாரு' என்றார்.

தங்கராஜ் திறந்த கதவை அகற்றிக்கொண்டு, வேட்டி, சட்டை துண்டுடன் ஒருவர் உள்ளே வர-

'வாங்க மிஸ்டர் இளவழகன். ஜென்டில்மன், யூ நோ மிஸ்டர் இளவழகன், மினிஸ்டர்!'

'என்ன விசயம் ராவு?' என்றார் இளவழகன். 'என்னவோ பேசிக்கிட்டாங்க. ஏதோ காணாமப் போயிருச்சாம். லாரி கொஞ்சம் லேட்டாயிருச்சு. வண்ணார்பேட்டைல ஒரு தண்ணித் தொட்டி திறந்து வைச்சுட்டு வர லேட்டாயிருச்சு. என்ன காணம்?'

ஜீவி ராவ் பொறுமையுடன் 'மிஸ்ஸைல்ங்க!'

'தமிழ்ல சொல்லுங்க.'

'ஏவுகணை பாணம்!'

'அதாவது இங்க பத்தவெச்சா அங்க தள்ளிப்போய் விழும்?'

'ஆமாம்.'

'சிவகாசி சமாசாரம்!'

'இல்லைங்க. கொஞ்சம் பெரிசு. ஆயிரம் மைல் கூடத் தள்ளிப் போய் விழும். மேலும் அதன் முனையிலே - ஒரு அணு ஆயுதம்! அணு குண்டு மாதிரி இருக்கு.'

இளவழகன் யோசித்து, 'அதாவது சப்பான்காரன் வெடிச்சானே அது மாதிரியா? சனங்க செத்துப் போயிருமில்ல? அய்யய்யோ!

ராவு. அதைக் கொணாந்துருய்யா. எங்காவது நம்மூர் ஆம்பூர் பக்கம் வெடிக்க வெக்கப் போவுது! இப்பத்தான் கரும்பு போட்டிருக்கம். ஆமா, அணு ஆயுதங்க நாம செய்யற தில்லைன்னு மக்கள் மன்றத்திலே...'

'தபாருங்க, அதுக்கெல்லாம் இப்ப நேரமில்லை. என்னப்பா?'

தங்கராஜ் அவரிடம் அவசர டெலக்ஸைக் கொண்டு வந்து கொடுத்து அருகே பவ்யமாய் நின்றான். தங்கராஜ் இந்த ஆபீஸில் இருபத்தைந்து வருஷங்களாக ஊறியவன். விசுவாசம் என்பது அவன் முகத்தில் எழுதியிருந்தது. திறமை என்பது அவன் துல்லியமான உடைகளிலும் தரமான டையிலும் தெரிந்தது. 'இது இப்பதான் சார், டெலக்ஸ் வந்தது.'

ராவ் அதைப் படித்துப் பார்த்து ராணுவ விமான கடற்படை அதிகாரிகளிடம் சாட்டினார்.

'இம்பாஸிபிள்! திஸ் இஸ் லூடிக்ரஸ்! நோ! நாட் அட் ஆல்! நோ!'

'என்னது இங்கிலீஷ்ல திட்டிக்கிறீங்க? என்ன தந்தி?'

'போன வாரம் செஷன்ஸ் கோர்ட்ல மூணு பேருக்குத் தண்டனை கொடுத்தாங்களே, தூதரகக் கொலை வழக்கில. ஞாபகம் இருக்கா?'

'ஆமா.'

'அவங்களை உடனே விடுதலை பண்ணணுமாம். பத்து மில்லியன் டாலர் பணம் வேணுமாம்.'

'மில்லியன்னா எவ்வளவுங்க?'

'அது எவ்வளவோ! பணமாவது குடுத்துத் தொலைக்கலாம். அந்த ஆளுங்களை எப்படி விடுதலை பண்ண முடியும்? அவங்க மேலே எக்ஸ்ட்ராடிஷன்லாம் இருக்கு. தேசவிரோதக் குற்றங்கள்!'

'ஆமாமா. அதெப்படி முடியும்? முடியாது முடியாது' என்று தலையைப் பலமாக ஆட்டினார் இளவழகன். 'வேற எதும் வழி இருக்கா? என்யா ராவு, உங்க ஆபீஸ்ல இதைக் கண்டுபிடிக்கக் கூடிய பயலுவ துடியா யாரும் இல்லையா?'



'தங்கராஜ், அந்த ஃபைலை எடுப்பா!'

ஜிவி ராவ் ஃபைலைப் பிரிக்க, இளவழகன், 'ஒரு பேச்சுக்கு நாம சம்மதிக்கிறோம்னு வெச்சுக்க.'

'பேச்சே இல்லை!' என்றார் கமிஷனர்.

'அட ஒரு பேச்சுப்பா. கண்டுபிடிக்க முடியலை. ரொம்பக் கொட்டுவாயின்னு வெச்சுக்க. எப்படித் தகவல் தாராம் அவனுங்களுக்கு! அட்ராஸ் குடுத்திருக்கான் இல்லை? அங்க போய்ப் புடிச்சர்றது?'

'அவ்வளவு முட்டாள் இல்லை. மாலை பேப்பரில் விளம்பரம் கொடுக்கணுமாம். அந்தப் பேச்சே இல்லை. இம்பாஸிபிள்! இதுக்கெல்லாம் மசியக் கூடாது நாம. முதல்ல அவங்க யாருன்னு கண்டுபிடிக்கணும்.'

'அப்பக் கண்டுபிடி... யாராவது ஆள் அனுப்பு! சும்மா நச்சு நச்சுன்னு பேசிக்கிட்டு இருந்தா?'

ஜிவி ராவ் அந்த டாஸியர் ஃபைலைப் புரட்ட அதில் பல பேருடைய போட்டோக்களும் ஜீவிதக் குறிப்புகளும் விண்ணப்பத்தாள் போல இருந்தன.

'கேப்டன், ஒரு ஆள்தான் செய்ய முடியும், ஆனா...'

'யாரு?'

'விக்ரம்...'

'நோ. நாட் தட் பாய்! நோ' என்று பலமாகத் தலையாட்டினார் நேவி.

'ஏன், என்ன என்ன?' என்றார் இளவழகன்.

'இல்லை சார். அவன் முறைகள்ளாம் நமக்குச் சரிப்பட்டு வராது. மேலும் அவன் ராஜினாமா கொடுத்துட்டான் இல்லை? இப்ப என்ன பண்ணிக்கிட்டு இருக்கான்?'

'கல்யாணம் பண்ணிக்கிட்டுத் தேனிலவு கொண்டாடிக்கிட்டு இருக்கான்!'

'கெட் தட் விக்ரம் ஐ ஸே' என்றார் விமானப்படை அதிகாரி படபடப்புடன்.

'தேனிலவை எல்லாம் கலெய்யா! எவன் எங்கிருந்தாலும் போன்ல புடிங்க முதல்லே!'

கடற்படை அதிகாரி முகம் சிவந்து, 'ஓ! நாட் விக்ரம்! நாட் ஹிம்!' என்று தலையை ஆட்ட ஜிவி ராவ் இண்டர்காமைத் தட்டி, 'பார்கவி, விக்ரம் எங்கருக்கான்னு உடனே தகவல் வேணும்' என்றார்.



# 3

தங்கராஜ் விசுவாசமுள்ளவன் என்றுதான் எல்லோருக்கும் தெரியும். அந்த ஆபீஸில் ஒரே ஒரு ஆளுக்குத்தான் தங்கராஜ் தொடர்ந்து புரிந்துகொண்டிருக்கும் துரோகம் தெரியும். அது தங்கராஜ்தான்!

ஜிவி ராவ் மற்ற அரசாங்க அதிகாரிகளுடன் நடத்திய ரகசியக் கூட்டத்தில் மேற்கொண்டு தங்கராஜ் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அவனுக்குத் தேவைப்பட்ட தகவல் கிடைத்துவிட்டது. விக்ரம் என்பவனை அழைக்கப்போகிறார்கள்.

ஆபீசை விட்டு வெளியே வந்து ட்ரெஷரி போவதாக அவுட் பாஸ் போட்டுவிட்டுப் பஸ்ஸைப் பிடித்து மயிலாப்பூரில் தன் வீட்டுக்குச் சென்றான். சுருள் ஓடு வேய்ந்த சாதாரண வீடு அது. அதனுள்ளேதான் அசாதாரணம். ஃப்ரிஜ், வி.ஸி.ஆர்., டி.வி. என்று தங்கராஜின் துரோக அத்தாட்சிகள். இங்கும் வெங்கடாசலபதி படம்! அதை நீக்கினால் உள்ளே சுவரில் பதித்த அறையில் ஒரு எட்டிஸ்டோன் ட்ரான்ஸ்ரிஸீவர். அதிக தூரம் தொடர்புகொள்ள ஓர் ஒயர்லஸ் இயக்கம்!

தங்கராஜ் அதன் மைக்கை எடுத்து பட்டனைத் தட்டி, 'ஸ்டேஷன் டு காலிங் எச் க்யூ. ஸ்டேஷன் எச் க்யூ' என்று மூன்று தடவை சொல்லி நிறுத்தி கவனிக்க, வானத்து ஓசைகளிலிருந்து நடுவே தெளிவாக, 'கோ அஹெட் ஸ்டேஷன் டு' என்று பதில் வர, 'பெரியவர்கூடப் பேசணும்.'

'ஸ்டாண்ட் பை!'

தங்கராஜ் காத்திருக்க, 'பெரியவர்' என்று அழைக்கப்பட்ட கதிர்தராஜா ஏதோ ஒரு தூரத்தில எங்கோ ஒரு இடத்தில் பாத்ருமில் நீராவியின் மத்தியில் இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டு சுகமாக வீற்றிருக்க, ஒரு நங்கை அவனுக்கு முதுகு தேய்த்துக்கொண்டிருக்க, ஒருவன் பவ்யமாக ஒரு போர்ட்டபிள் டெலிபோனைக் கொண்டுவந்து தர, கதிர்தராஜா அதைத் தட்டி, 'என்னடா?'

'சார், நான் தங்கராஜ்!'

'சொல்லு. எல்லோரும் ராக்கெட்டைக் காணோம்னு பதறிக்கிட்டு இருக்காங்களா? நம்ம டெலக்ஸ் வந்ததா? கைதிகளை வெளியே விடறாங்களா? பணம் தர்றாங்களாமா? என்ன சொன்னான் ராயன்?'

'விக்ரம்னு ஒரு ஆளை தேடிக் கண்டுபிடிக்க அனுப்பப் போறாங்க. நம்ம கண்டிஷனுக்கெல்லாம் சம்மதிக்கப் போவுறதில்லை!'

'அப்படியா! என்ன பேரு சொன்னே?'

'விக்ரம்! துடியான ஆசாமி, சண்டை போட்டுட்டு ராஜினாமா செய்தவனைத் திரும்பக் கூப்பிடறாங்க.'

'அவனை அனுப்பிச்சு என்னைப் பிடிக்கப் போறாங்களாமா? நல்லா இருக்குது! ராயருக்குப் பைத்தியம் புடிச்சிருக்கா? இரு. இங்க வாடி!'

'அய்யா?'

'இங்கே ஒரு பென்னை!' கதிர்தராஜா அந்தப் பெண்ணின் லிப்ஸ்டிக்கை வாங்கி அவள் முதுகின்மேல் 'விக்ரம்' என்று குறித்துக்கொண்டு அந்தப் பெயரைக் குறுக்கே கோடிட்டு அழித்தான்.

'அவன் விலாசம் சொல்லு தங்கராஜ். நான் பாக்கியைக் கவனிக்கிறேன்.'

இதையெல்லாம் பற்றி எதுவுமே தெரியாமல் விக்ரம் ஓர் ஓட்டல் அறையில் தன் புது மனைவியைப் பட்டப் பகலில் கெட்ட காரியம் செய்துகொண்டிருந்தான். தேனிலவு. புதுமணம் ஆனவர்கள். சூழ்நிலையோ, குதிரைச் சவாரியோ, அறையின்



சன்னலைத் திறந்தால் தெரியும் மரகத மலைச் சரிவோ, கிறிஸ்டல் துல்லிய வானமோ அவர்களுக்குப் பொருட்டாக இல்லை. வருகிற புதன் கிழமைக்குள் ஒருவரை ஒருவர் சாப்பிட்டுவிடவேண்டிய அவசரம் இருந்தது. அவர்கள் செயலில். அவர்கள் உரையாடலைப் பாருங்கள்!

'விக்ரம்!'

'யா?'

'ஒண்ணும் இல்லே. சும்மா உன் பேரைக் கூப்பிடணும் போல இருந்தது!'

'பேசிக்கிட்டே இருக்காதே! காரியம் பாக்கி இருக்கு!'

'என்ன காரியம்?'

'இது.'

'தா!'

'அப்புறம் இது!'

'சே! இதுக்காக இத்தனை தூரம் எதுக்கு வரணும்? மெட்ராஸ்லேயே...'

'மெட்ராஸ்லேயே?'

எழுந்து ஓடியவளை அப்படியே தன்முன் இழுத்து, 'ஜாஸ்தி அழகா இருக்கே' என்றான். மூக்கால் அவள் மார்பில் தோய்த்தான்.

'மத்த ஹனிமூன் கப்பிள்ஸ்களைப் போலப் பேசேன்.'

'என் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் 'மீரா மீரா'ங்கும்! மீராதானே உம்பேரு?' என்றான் விக்ரம் நாடக பாணியில்.

மீரா அவன் பிடியிலிருந்து தளர்ந்து நழுவி டிரெஸ்ஸிங் டேபிள் அருகில் சென்று உடையைச் சரி செய்துகொண்டு, 'பசிக்குது' என்றாள்.

விக்ரமின் கோட்டைத் தடவிக் கொடுத்தாள். 'உன் கோட்கூட உன் வாசனையா?' என்றாள்.

அவள் விரல்கள் கோட்டுப்பையிலிருந்த ஒரு பொருள்மேல் பட, அவள் அதை எடுக்க, துப்பாக்கி!

'விக்ரம் இது எதுக்கு?'

விக்ரம் பார்த்து, 'ஏய்? வை அதை!'

'விக்ரம்! இது எதுக்கு?'

'வந்து... வந்து... தற்காப்புக்கு.'

'நிஜமாகவே சொல்லு. உனக்கு என்ன வேலை?'

'சொன்னனே எக்ஸ்போர்ட் இம்போர்ட்.'

'பொய்.'

விக்ரம் எழுந்து உட்கார்ந்து அவளை அருகில் உட்கார வைத்து, 'ஆல்ரைட். இப்பத்தான் கல்யாணம் ஆகியிருக்கு. பொய் சொல்லக்கூடாது. இந்தத் துப்பாக்கி என்னதில்லை. என் பழைய ஆபீஸ்லே தந்தது. கல்யாணமாகறதுக்கு முந்தி நான் ஒரு மாதிரி உளவு வேலைல இருந்தேன். கவர்மெண்ட் உத்தியோகம். இப்போ ராஜினாமா செய்துட்டேன். அவங்க முறை எனக்குப் பிடிக்கலை. என் முறை அவங்களுக்கு... இதை இன்னும் திருப்பிக் கொடுக்கல்லே. திருப்பிக் கொடுத்துடறேன்.'

இப்போது அந்த அறையிலிருந்த டெலிபோன் ஒலிக்க, மீரா அதை எடுத்துக் கேட்டு, 'உங்களுக்குத்தான்' என்றாள்.

'என்னடாது! நான் இந்த ஓட்டல்ல தங்கி இருக்கிறது எனக்கே தெரியாது... ஹலோ.'

'விக்ரம்! பார்கவி ஹியர். அட் லாஸ்ட் ஐ காட் யூ.'

ஜிவி ராவின் செக்ரட்டரியின் குரலில் இருந்த திறமையை நாற்றுக்கணக்கான டெலிபோன் மைல்களால் மறைக்க முடிய வில்லை. 'யெஸ் மிஸ்டர் ராவ்...' விக்ரமின் குரலில் விரோதம் தெரிய, தாடை மட்டும் அசைய சற்று நேரம் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். 'ஐ ஸீ! ராக்கெட்டைக் காணோமா? மிஸ்ஸைலா? இன்னும் விசேஷம். சும்மாரு... ஸாரி, இங்க என் ஒய்ஃப் கடிக்கிறா... என்ன அணு ஆயுதமா? கட்! தி ஆன்ஸர் இஸ் நோ! ஆனா எந்த மிஸ்ஸைலா இருந்தாலும் ராஜினாமா



கொடுத்ததை வாபஸ் வாங்கறதில்லை. ஐக் மிஸ்டர் ராவ். அதெல்லாம் ஆயிடுச்சு. ஸாரி! நான் இல்லாம தாராளமா காரியம் நடக்கும். என் முடிவை மாத்திக்கிறதா இல்லை.'

விக்ரம் டெலிபோனை வைக்கும்வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்த மீரா, 'என்னவாம்?' என்றாள்.

'என்னவோ ராக்கெட் காணாமப் போயிருச்சாம். நான் திரும்ப வந்து கண்டுபிடிச்சுத் தரணுமாம். நான் ஒருத்தன்தான் ஆப்ட் டேனா? பத்துப்பேர் ஏஜண்டுங்க இருக்காங்க நாற்காலியைத் தேய்ச்சுக்கிட்டு...' அவளை முத்தமிட்டு, 'உனக்குத் தேச பக்தி இல்லையான்னு கேக்கறாரு ராவ். அதானே செய்துகிட்டிருந் தேன்.'

'விக்ரம்! என்னை விட்டுட்டுப் போயிடமாட்டியே?'

'நெவர் மீரா! கம், லெட்ஸ் கோ அவுட்.'

விக்ரமும் மீராவும் ஒரு மென்மையான புல்வெளியில் நடக்கும் போது அவர்களை முதலில் அந்தத் துப்பாக்கி குறி பார்த்தது.

டெலஸ்கோப் அமைத்த ரைஃபிள் துப்பாக்கி அது. நானூறு அடி மேட்டுச் சரிவில் அந்தத் துப்பாக்கிக்குச் சொந்தக்காரன், தன் சகாவுடன் ஒளிந்திருக்க, விக்ரம் சென்ற இடமெல்லாம் அதன் டெலஸ்கோப்பின் க்ராஸ் ஹேர் அவனைத் தொடர்ந்தது.

விக்ரம் மீராவிடம் தன் துப்பாக்கியைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தான்.

'தபாரு. பயப்படக்கூடாது. எவ்வளவு லைட்டா இருக்கு பாரு. இதான் டிரிக்கர். தொட்டுப் பாரு. எடுத்துப் பாரேன்.'

மீரா அதை ஆர்வம் கலந்த பயத்துடன் எடுக்க, விக்ரம், 'கமான் ஷூட்! எங்கேயாவது அந்த மரத்தைப் பார்த்துச் சுடு!'

'நான் மாட்டேம்பா.'

'கேப் துப்பாக்கி மாதிரிதான். என்னைக் கல்யாணம் பண்ணிட்ட துக்கு இந்தப் பயம் போகணும்.'

சின்னக் குழந்தை போலத்தான் சுட்டாள். அது தற்செயலாக அந்த மரத்தில் அடர்த்தியாக உட்கார்ந்திருந்த புறாக்கள் ஒன்றின்மேல்

பட்டு அது 'சொத்'தென்று விழ, விக்ரம் கைதட்டி, 'என்ன எய்ம்!' என்றான்.

இந்த அசைவுகளினால் விக்ரம் அந்த மற்ற துப்பாக்கியின் குறியிலிருந்து அடிக்கடி விலக நேர்ந்ததனால் சரியாகக் குறி வைக்க இயலவில்லை.

'ஏய், ஏன் அழறே?'

'புறா செத்துப் போச்சு!'

'செத்துப் போனா என்ன? கறி பண்ணிச் சாப்பிடலாம்.'

மீரா அவன் மார்பில் குத்தி, 'ஓ! க்ரூயல்! அதுவும் ஒரு உயிர் இல்லையா? நம்மைப் போல அதுக்கும் வாழ உரிமை உண்டு. நமக்குக் கொல்ல உரிமை கிடையாது!'

'ஓகே... ஓகே.'

'முதல்ல அந்தத் துப்பாக்கியைத் தூக்கி எறி. அப்பத்தான் உன்கிட்டே பேசுவேன்.'

'நோ... நோ... இது என்னதில்லை.'

'நான் பேசமாட்டேன்.'

'ஆல்ரைட்! பாரு! இதிலே இருக்கிற தோட்டாக்கள் எல்லாத்தையும் எடுத்தாச்சு! இனிமே இதுக்குச் சக்தி இல்லை. வெத்துத் துப்பாக்கி! இப்பத் திருப்திதானே?'

விக்ரம் தன் நெற்றிப் பொட்டில் தன் துப்பாக்கியைப் பதித்து அதன் குதிரையை க்ளிக் செய்து பாசாங்காகத் தொப்பென்று விழுந்தான். அதே சமயம் சைலன்சர் பொருத்திய தூரத் துப்பாக்கி வெடித்துக் குறி தவறிக் காற்றில் சிதறியது.

'ஷ்ஷிட்!' என்றான் அதைச் சுட்டவன்.

'அண்ணே! சாயங்காலத்துக்குள்ளே முடிச்சாகணும்! அடி சாருக்குக் குறி தப்பக்கூடாது.'

விக்ரமும் மீராவும் அருகே இருக்கும் மார்க்கெட்டை நோக்கி, தம் எதிர்காலத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு நடக்க, அவர்கள் இருவரும் சற்றுத் தூரத்தில் தொடர்ந்தார்கள்.



சாலைகள் சந்தித்துச் சரிந்துகொள்ளும் இடத்திலிருந்து மார்க்கெட். இது என்ன மார்க்கெட், என்ன விற்கிறார்கள்? என்பதிலெல்லாம் அக்கறையின்றித் தக்காளிப் பழங்களும் முட்டைக் கோசும் காலிஃப்ளவரும் கொட்டிக் கிடக்கும் சேரியில் வியப்பின்றி விக்ரம், மீரா இருவருக்கு மட்டுமே இந்த உலகம் முழுவதும் படைத்திருப்பது போல, 'நான் பாமக்குடிக்குப் போய் விவசாயம் பண்ணப்போறேன்' என்றான் விக்ரம்.

'நான் எட்டுப் பொண்ணுங்களைப் பெத்துக்கப் போறேன்?'

'சரிதான்! விவசாயம் உன்னையா பண்ணப் போறேன்?'

அவன் தொடர்ந்து தன் சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துக் காட்டினான். 'பேர்கூடத் தயார்.'

அது ஒரு பெயர்ப் பட்டியல். 'அனுபமா, நிருபமா, ராதிகா, வித்யா, ஜ்யோத்ஸ்னா...'

'அலமேலு? 'ஜா' ன்னு சின்னதாக் கூப்பிடலாமே? எப்படிப் பொண்ணாப் பொறக்கும்கறே?'

'பொண்தான் வேணும் எனக்கு.'

'காம சாஸ்திரத்திலே வலது மூக்கு வழியா மூச்சு விட்டுக்கிட்டு சம்போகம் பண்ணினாப் பொண்ணாப் பொறக்கும்னு போட்டிருக்கு.'

'சட்! ஒரு நாள்ல என்னைக் கெடுத்தாச்சு!'

இருவரும் உற்சாகமாக மார்க்கெட்டில் நடக்கும்போது அவ்விரு துப்பாக்கிகளும் ஆளுக்கொரு எதிர் எதிர்த் திசையில் வசமான இடத்தில் வந்து நின்றுகொண்டனர். சாலை, குறுகலான இடம். மீரா சகட்டுமேனிக்கு வாங்கித் தள்ளிக்கொண்டிருக்க, அவள் வாங்க இவன் நிற்க, விக்ரம் துப்பாக்கிக் குறியில் இப்போது நிலைத்து நின்றான்.

'மாட்டினான்யா!'

விரல் பதித்துத் துப்பாக்கியின் ட்ரிக்கர் அழுத்தி குண்டு வெளிப் பட்டு அதன் ரைஃபிள் இயக்கத்தில் சுழன்று சுழன்று வேகம் பெற்றுக் குறியின் தவறாத்தனத்தில் நேராக விக்ரமை நோக்கி ஸப்ஸானிக் வேகத்தில் பாய-

மீரா குறுக்கே வந்து விட்டாள். செங்குத்தாக அவள் மார்பகத்தில் பாய்ந்து குண்டு மார்பெலும்புக்கு இடையே இதயத்தில் பதிந்தது.

விக்ரம், 'இதெல்லாம் வாங்கி...' என்று ஆரம்பித்தவன் தன் மனைவி விநோதமாகச் சரிவதைப் பார்த்து உடனே செயல்பட்டு ஒருவிதமாக ரிஃப்ளெக்ஸ் செயல்பாடாகத் தன் துப்பாக்கிக்குக் கை பாய்ந்து விரல் பதிந்து இயங்க, க்ளிக்!

குண்டு இல்லை.

விக்ரமைக் குறிதப்பி அந்தப் பேதைப் பெண்ணை அடித்து விட்டதை உணர்ந்த அந்தக் கிராதகன் பயந்துவிட்டான். மற்றொரு முறை விக்ரமின் மேல் குறிவைத்துச் சுட பதற்றத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை மேல் பட்டு அதிர்ந்தது. அதற்குள் இந்த இடத்தில் குழப்பம் அதிகமாகி மக்கள் ஒன்றும் புரியாமல் அங்குமிங்கும் சிதற ஒரு டெம்போ நிறையத் தக்காளி உருள அதன் மத்தியில் மீராவின் ரத்த இதயத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தது. மீரா ஒரு சின்னக் குழந்தையின் ஞாபகத்தின் பாதியில் தன் புத்தம் புதிய கணவன்மேல் சரிந்து இறந்து போனாள்!

விக்ரம், 'மை காட்! இட்ஸ் நாட் ட்ரு! மீரா! நீ செத்துப் போனே னக்கு ரொம்பக் கோபம் வரும். நோ! நோ... மீரா... மீரா!'



## 4

ஒரு பக்கம் மனைவியை கவனிப்பதா அல்லது அவனை அநியாயமாகச் சுட்டுவிட்டு ஓடுகிறவர்களைத் துரத்துவதா? விக்ரம் பாதி தூரம் துரத்தி ஓடி அவர்கள் மோட்டார் சைக்கிளில் பாய்ந்து மறைவதைப் பார்த்தான். திரும்ப மனைவிக்கு ஓடி வந்தபோது அவள் மெத்தென்று தக்காளி மெத்தையில் செத்துப் போயிருந்தாள். விக்ரம் அவள் மூடியிருந்த கையைப் பிரிக்க அதில் சிறிய காகிதச் சீட்டில் பெயர்கள்.

'அனுபமா... நிருபமா... ஜ்யோத்ஸ்னா...'

ஜீவி ராவ் நிமிர்ந்து பார்த்தார். அவர் அலுவலகக் கதவை அத்தனை வேகமாகத் திறந்து உள்ளே வரக்கூடிய தைரியம் ஒருவனுக்குத்தான் உண்டு!

'விக்ரம்! ஹௌ குட் டு ஸீ யூ...' ராவ் உடனே முகம் மாறி, 'ஐ ஹேர்ட் தி ஷாக்கிங் நியூஸ். உன் மனைவி இறந்து போனதுக்காக... என் மனமார்ந்த...'

'கட் இட் சார்! நான் உங்க அனுதாபத்துக்காக இங்கு வரலை. யார் அந்தத் தேவடியா மகன்?' விக்ரமின் முகம் களைத்து மூன்று தினங்களில் மூன்று வருஷம் வயசாகிவிட்டவன் போலத் தோன்றினாலும் அவன் கண்களில் பழைய கோபமும் பிரகாசமும் இருப்பதை ராவ் கவனித்தார்.

'இன்னும் யாரு எதுன்னே சரியாத் தெரியலை விக்ரம். ஸ்ரீஹரி கோட்டாவுக்கு டெஸ்ட்டுக்குப் போயிட்டிருக்கிறது ராக்கெட். அதை பர்ஃபெக்ட் ஆம்புஷ் - திறமையான கடத்தல்!'

அப்போது தங்கராஜ் ஒரு ட்ரேயில் டீ கோப்பைகளுடன் உள்ளே வந்தான். ஜிவி ராவ் இந்த நேரம் பால் சர்க்கரை இன்றித் தேநீர் அருந்துவார்.

'இவருக்கு டீ கொடுப்பா... தங்கராஜ், இவர் யாரு தெரியுமில்லே? விக்ரம்.'

தங்கராஜ் அரை செகண்டு திடுக்கிட்டுச் சமாளித்துக்கொண்டான். விக்ரம்? என்ன ஆச்சு? சுகிர்தராஜாவின் ஆட்கள் அவனைக் கொல்லவில்லையா?

'அந்த ராக்கெட் டெஸ்ட்டுக்குப் போற செய்தி நம்ம ஆபீஸ் தவிர யார் யாருக்குத் தெரியும்?' என்று கேட்டான் விக்ரம்.

'ஸ்பேஸ் டிபார்ட்மெண்ட் எம். ஐ.'

'என்னைத் திருப்பிக் கூப்பிடப்போற செய்தி?'

'இந்த ஆபீஸ்ல மட்டும்தான் தெரியும்.'

'நான் இருக்கிற இடத்தை உங்களுக்கு முன்னே தெரிஞ்சுட்டு எனக்காக வந்து அவளை வீழ்த்திட்டாங்க! பாஸ்டர்ட்ஸ்!'

'ஸாரிடா' என்று அவன் கையை அழுத்தினார் ராவ்.

'அப்ப லீக்கு இங்கதான்! இந்த ஆபீஸ் சிப்பந்திகள் எல்லோரையும் விசாரிக்கணும்.'

தங்கராஜின் தேநீர் ஊற்றும் கைகள் சற்றே நடுங்குவதை விக்ரம் கவனித்தான். அவன் போனதும், 'இந்தான் பேரென்ன?'

'தங்கராஜ், சைஃபர் கிளார்க். ரொம்ப நம்பகமான ஆள்!'

'இவன் வீட்டு விலாசம் இருக்குமா?'

'தரச் சொல்றேன். ஆனா இவனைப் போய் சந்தேகிக்கிறது...'

'மிஸ்டர் ராவ்! எனக்கு எல்லார் பேரிலயும் சந்தேகம். உங்களையும் சேர்த்து.'

'ராவ் ஒரு முறை நிமிர்ந்து பார்த்த பார்வையில் 'உன்னைத் திருப்பிக் கூப்பிட்டது தப்போ?' என்கிற சந்தேகம் தெரிந்தது.

அருண்குமார் விக்ரம்! நிதானமாக மயிலாப்பூரின் ஓட்டு வீடுகள் நிறைந்த அந்தச் சந்தில் நடந்தான் அவன். கண்கள் பல்லவன்



பஸ்களையும், பிளாஸ்டிக் விற்பனையாளர்களையும், மாட வீதியையும், கேசவப் பெருமாள் கோயிலையும் வருடினாலும் மனத்தில் மீராவின் குரல் ஒலித்தது. களைத்து இருந்தான். உள்ளக் களைப்பு. ஒரு வாரம் அதீத சந்தோஷத்தில் மிதந்துவிட்டு உடனே துக்கத்தின் எல்லையில் தள்ளிய களைப்பு.

'விக்ரம், என்னை விட்டுட்டுப் போயிடமாட்டியே?'

'நெவர் மீரா!'

தங்கராஜின் வீட்டு எண்ணைக் கண்டுபிடித்து மாடிப்படி ஏறிச் சென்றபோது அவன் மனைவி கோவிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். விக்ரமைப் பார்த்தும் தலைப்பைப் போத்திக் கொண்டு, 'யாரு?' என்றாள்.

'தங்கராஜ் இருக்காரா?'

'வெளியிலே போயிருக்கார். வந்துருவார். உள்ளே வாங்களேன்.'

'இல்லே. அப்புறம் வரேன்.'

'உங்க பேர்?'

'விக்ரம். அருண்குமார் விக்ரம்.'

'வட நாடா?'

'இல்லை. அவர் வந்தா நான் வந்ததா...'

'சொல்றேன்' என்றாள் மனைவி.

விக்ரம் கீழே இறங்கி வந்து சற்றுத் தூரம் சென்று சந்து திரும்பி அவள் மறைந்ததும் மறுபடி தங்கராஜின் வீட்டுக்குச் சென்றான். மாடி வீடு. கதவு பூட்டியிருந்தது. விக்ரம் தன் கைக் கடிகாரத்தை எடுத்தான். அதிலிருக்கும் சிறிய ஆண்டெனாவை அந்தப் பூட்டின் துவாரத்துக்குள் நுழைத்து பீப் பீப் என்று அதன் ஓசைகளைக் கேட்டான். ஒரு தேர்ந்த சர்ஜனைப்போல அந்தப் பூட்டினுள் மெல்லிய ஓர் ஆயுதத்தை நுழைக்க, பூட்டு கிட்டக் என்று வாயைப் பிளந்தது.

விக்ரம் நிதானமாக உள்ளே நுழைந்து சுற்றிலும் பார்த்தான். இ.பி.கோ.வின் ஷரத்துக்களைத் தான் மீறுவதைப் பற்றிச் சற்றும் கவலையின்றி அவசரமே இல்லாமல் அறையின் செல்வச்

செழிப்பைப் பார்த்தான். கார்ப்பெட், டெலிவிஷன், சோபா, ஃப்ரிஜ். ஒரு பிச்சைக்காரன் அழுக்குக் கோட்டைத் திறந்ததும் வைரங்கள் ஜொலிப்பதுபோல முகப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் தொடர்பே இல்லாத வீடு.

விக்ரம் ஃப்ரிஜ்ஜிலிருந்து ஆப்பிளை எடுத்துக் கடித்து வைத்து விட்டுக் கண்ணாடியில் ஒரு விநாடி ஒப்பனை செய்து கொண்டு சூவிங்கம் மென்றுகொண்டே அறையைக் கண்களால் அங்குலம் அங்குலமாக வருடினான்.

'அந்த வெங்கடாசலபதி படம் சற்றுச் சாய்ந்தாற்போல் இருக் கிறதே?'

அதை நோக்குகையில் தங்கராஜ் சைக்கிளில் தெருக்கோடியில் வந்துகொண்டிருந்தான்.

படத்தின் பின் ஒரு விளிம்பு தெரிய அது ஒரு இரும்புப் பெட்டியின் பதித்த கதவு என்பது தெரிந்தது. அதை முயன்று பார்த்தான். வலுவாக இருந்தது.

தங்கராஜ் சைக்கிளை ஸ்டேண்டு போட்டான்.

விக்ரம் தன் கைக் கடிகாரத்தின் இயக்கத்தை அந்தச் சுவர்ப் பெட்டியின் துவாரத்தில் வைத்துச் சற்று ஒதுங்கிக் காத்திருக்க அதனுள் குட்டியாக ஒரு வெடி வெடித்தது. அதிக சேதமில்லாமல் இரும்புப் பெட்டி திறந்துகொண்டது. உள்ளே...

அரசாங்க டாப் சீக்ரெட் ரகசிய ஃபைல்களின் பிரதிகள்.

பவுண்டு டாலர் நோட்டுக்கள்.

ஒயர்லெஸ் டிரான்ஸ்மிட்டர் ரிஸீவர்.

விக்ரம் சூவிங்கம் மென்றுகொண்டே அந்த ரிஸீவரை திரட்ட, அதிலிருந்து வந்த கொர் கொர் சப்தங்களால் தங்கராஜ் வந்ததை யும் அவன் இடுப்பிலிருந்து ஒரு துப்பாக்கி எடுத்துச் சட்டென விக்ரமின் நெற்றிப் பொட்டில் வைத்ததையும் கவனிக்கவில்லை.

'இவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா? நினைச்சேன்! மூவ்! மூவ்! தூக்கு கையை!'

விக்ரம் சூவிங்கம் மென்றுகொண்டிருப்பதை நிறுத்தாமல் தங்கராஜை நேருக்கு நேர் கண்ணுக்குக் கண் பார்த்தான்.



'பித்தாய்!' என்று சற்றும் எதிர்பாராமல் சூவிங்கம்மைத் துப்ப, அது சரியாக தங்கராஜின் கண்ணில் போய் அடித்தது. நல்ல அடி! இயற்கையாகத் தங்கராஜ் கையால் கண்ணைத் தேட, அதற்குள் விக்ரம் தன் முழங்காலால் தங்கராஜின் மர்மத்தில் வெடிக்க அவன் சகலமும் துறந்து கீழே துப்பட்டி போல விழ, அவனைக் கொத்தாகப் பிடித்து, 'ஆபீசுக்கு வரயா தங்கராஜ்! பேசணும்.'

அந்த அறை துல்லியமாக எமல்ஷன் வெள்ளை அடிக்கப் பட்டிருந்தது. நடுவே ஒரே ஒரு நாற்காலியும் தாழ்ந்த விளக் கும் இருந்தன. அருகே ஒரு எக்ஸர்ஸைஸர் போல ஒரு ஃப்ரேம் இருக்க அதில் தங்கராஜ் தலைகீழாகக் கட்டப்பட்டிருக்க ஒரு ப்ரா ஸ்தாபனத்து ஆபீசர் தங்கராஜை விசாரித்துக் கொண் டிருக்கையில் விக்ரம் டீக்காக சூட் அணிந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

அதிகாரி வியர்த்திருந்தார். 'ம்ஹூம். கல்லுளிமங்கன். சொல்ல மாட்டான்! ஏரோப்ளேன் போட்டுடவா?'

'விக்ரம், 'சேச்சே! அதெல்லாம் வேண்டாம், என்ன தங்கராஜ்!' என்று அவனைக் குனிந்து பார்த்தான்.

அவன் முகம் வீங்கி, இங்கும் அங்கும் நீலமாகவும் உதடுகள் ரத்தமாகவும் கலர் கலராக இருந்தது. விக்ரம், 'நீங்க போங்க சார்' என்று தங்கராஜை நேர்படுத்தினான்.

'ச்ச்ச்ச்! எதுக்கு இதெல்லாம்! உட்கார் தங்கராஜ்' என்று நாற்காலி யில் உட்கார வைத்து அவன் மேல் வெளிச்சம் காட்டி விரலால் வீக்கத்தைத் தொட வந்து, 'வலிக்கும் இல்லை?' என்றான். 'எதுக்கு இம்சை? பாரு இது என்ன? டைனமைட்டு...' மூன்று வெடிகுண்டுகளைக் காண்பித்தான். 'இப்போ இதை கழுத்துக்குக் கீழே பொருத்திட்டு, கையைக் காலைக் கட்டிட்டு திரியைப் பத்த வச்சிட்டுப் போயிடறேன். என்ன ஆகும்? முகம் மூளையெல் லாம் குதறிப்போய்ச் சுவத்திலே அடிக்கும். இப்பத்தான் வெள்ளை அடிச்சிருக்கு. எதுக்கு டிபார்ட்மெண்டுக்கு அனா வசியச் செலவு? சொல்றியா தங்கராஜ்! யார் அது? யாருக்காக எல்லா ரகசியங்களையும் வித்திருக்கே?'

தங்கராஜ் பேசாமலிருக்க, 'நல்லதனமாச் சொன்னா ஆகாது உனக்கு!' என்று அவனை நாற்காலியில் உட்காரவைத்து கை, கால்களைப் பட்டை போட்டு இறுக்கக் கட்டி, டைனமைட்டைக்

கச்சிதமாக கழுத்தருகில் பொருத்தி அதன் நீண்ட திரியைப் பற்றவைத்துப் புறப்படும்போது, தங்கராஜ், 'வெயிட்' என்று அலறினான்.

'அதிகம் வெயிட் பண்ண முடியாது. வெடிச்சுதுன்னா கூட் பாழாயிடும்.'

'சொல்றேன். சொல்லிடறேன். அய்யோ சொல்லிடறேன்! எடுத்துடு இதை!'

அப்போது அந்த அறையில் இருந்த இண்டர்காமில் ஜிவி ராவின் குரல் ஒலித்தது. 'விக்ரம்.'

'யெஸ் மிஸ்டர் ராவ்.'

'எனி ப்ராக்ரஸ்?'

'ஹி வில் ஸ்பீக் நௌ.'

'உடனே அவனை மேலே கொண்டு வந்துடு. எல்லோரும் இங்கதான் இருக்காங்க.'

'இல்லை சார். இங்கேயே முடிச்சிடலாம்னுட்டு...'

'மேலே கொண்டு வாய்யா...'

'ஆல்ரைட்!' என்று அலுப்புடன், 'தங்கராஜ் வா சபை முன்னாலே, எல்லா ஆபீசர்கள் முன்னாலே, எல்லாத்தையும் கக்கு! வா.'

தங்கராஜ் சரி என்று தலையாட்ட இருவரும் லிஃப்ட் ஏறி எட்டாவது மாடியிலிருந்த கான்ஃபரன்ஸ் அறைக்குள் சென்றனர். அதில் ராணுவ, கடற்படை, விமானப்படை, போலீஸ் அதிகாரிகளும் வீற்றிருக்க, தங்கராஜை விக்ரம் அழைத்து வர...

ராவ், 'படுபாவி, பாதகா! உன்னை நம்பி...'

'சார் அதெல்லாம் அப்புறம்... தங்கராஜ், சொல்லு யார் உன் எஜமானன்? அவன் பேர் என்ன?'

தங்கராஜ், 'சுகிர்தராஜா' என்றான்.

'சுகிர்தராஜா? ஹூ த ஹெல்?'

'சுகிர்தராஜா! ஐ திங்க் வி ஹாவ் எ டாஸியர் ஆன் ஹிம். சொல்லு தங்கராஜ்! எங்கே இருக்கான் இப்போ அவன்?'



தங்கராஜ் அறையில் தொங்கிய மேப்பைப் பார்த்தான். 'மேப்பிலே காட்டறேன்!'

ராவ் விக்ரமுக்குச் சைகை காட்ட, விக்ரம் தங்கராஜை விடுவிக்க, தங்கராஜ் கை விலங்குடன் தேசப்படத்தின் அருகில் சென்றான்.

திடீர் என்று சற்றும் எதிர்பாராமல் தங்கராஜ் அருகே அந்தச் சன்னலின் கண்ணாடிக் கதவைப் பெயர்த்துக்கொண்டு ஏதோ நீச்சல் குளத்தில் டைவ் அடிப்பவனைப் போல் பாய்ந்தான். எட்டாவது மாடி!

விக்ரம் செயல்பட்டு ஓடிப்போய்ப் பிடிப்பதற்குள் கீழே நடுச்சாலையில் கிரீச் கிரீச்சென்று கன்னாபின்னாவென்று பிரேக் அபகாரங்கள் கேட்க,

தங்கராஜ் எக்ஸ் வடிவத்தில் ரத்தக் குளத்தில் கிடந்தான்.

விக்ரம் தலையை அசைத்து, 'இதுக்குத்தான் இந்த மாதிரி விஷயங்களை எல்லாம் எட்டாவது மாடியிலே வச்சுக்க வேண்டாம் னேன்! இவன்கிட்டேயிருந்து கிடைச்சது ஒரு வார்த்தை, ஜஸ்ட் ஒன் வேர்ட்! சுகிர்தராஜா! ஓகே லெட்ஸ் ட்ரை' என்றான் அலுப்புடன்.

'பி.எம். கிட்டேயிருந்து!'

'தெரியும் சார். அவன்கிட்டேயிருந்து வேற தகவல் வரலையே? வேற எதுவும் கெடு?'

'இல்லை. இன்னும் இல்லை.'

'அதுக்குள்ளே சுகிர்தராஜா பற்றி நம்ம ஆபீஸ்ல இருக்கிற எல்லாத் தகவல்களையும் சேர்க்கலாம். அடியைப் புடிரா பாரதபட்டான்னு!'

'உன் பொண்டாட்டியைக் கொன்னதுக்கு இவன்தான்டா காரணம்.'

'நரகத்துக்குப் போனவன் முழு விவரமும் சொல்லிட்டுப் போயிருக்காமில்லையா? இதிலே ஒரு விசுவாசம் பாருங்க!'

அந்த இருட்டறையில் ஜிவி ராவின் பைப்பின் புகைப்படலம் படர்ந்திருக்க அருகே விக்ரம் உட்கார்ந்திருக்க எதிரே ஒரு திரையில் 'கிளிச்சக்...' என்று பிம்பங்கள் மாறிக்கொண்டிருந்தன.

சுகிர்தராஜா பள்ளிப்பருவ போட்டோ.

சுகிர்தராஜா இளம் வயதில்.

சுகிர்தராஜா வெளிநாட்டுக்குச் சென்று கெரில்லா முறைகளில் பயிற்சி பெற்றது.

சுகிர்தராஜா ராணுவ உடையில்.

கடத்தல் கையாளாக.

கடத்தல்காரனாக.

கடத்தல் ராஜனாக.

ஆயுதக் கடத்தல்... பாங்காக்கில் தொடங்கும் தங்க முக்கோணத்தில் பங்கு...

இப்படி சுகிர்தராஜாவைப் பற்றி அலுவலகத்தில் கிடைத்த அத்தனை செய்திகளையும் விக்ரம் விமர்சித்துக்கொண்டிருக்க, அதே சமயம் மற்றொரு தேசத்தில் மற்றொரு இருட்டறையில் மற்றொரு புகை மண்டலத்தில் மற்றொரு திரையில்...

விக்ரம் பள்ளிப்பருவப் போட்டோ.

விக்ரம் இளம் வயதில்.

விக்ரம் கெரில்லா முறைகளில் பயிற்சி.

விக்ரம் இந்தியக் கடற்படையில் சேர்ந்தது.

அவன் மார்பில் பொருத்தப்பட்ட மெடல்கள்.

இந்த மற்றொரு படத்தொகுப்பை சுகிர்தராஜா கவனமாகப் பார்த்துக்கொண்டிருக்கையில் விக்ரமைக் குறி தப்பின அவ்விரு அடியாட்களும் வந்தார்கள்.



## 5

சுகிர்தராஜா ஒரு வினோதமான பிரஜை. அவன் தோற்றத்தில் ஒரு தீட்டப்பட்ட கத்தியின் கூர்மையும் பளபளப்பும் லாகவமும் அதே சமயம் இரக்கமற்ற தன்மையும் இருக்கும். ஆனால் வாழ்வின் நளினங்களை அப்படியே மறந்தவன் என்று சொல்ல முடியாது. அவன் வீற்றிருக்கும் அறையில் (எந்த இடம் எந்தத் தேசம் என்று இன்னும் சொல்ல இயலவில்லை) லேசாகப் பின்னணியில் கர்னாடக சங்கீதம் கேட்கிறது (எம்.டி. ராமநாதன்). மேலே திறந்திருக்கும் முட்டை வடிவ ஸ்கைலைட்டிலிருந்து சூரியன் கட்டுப்பாட்டுடன் கசிய, நட்ட நடுவே ஒரு தண்ணீர்த் தொட்டியில் தரைமட்டமான நீர்ப் பரப்பு. அவ்வப்போது சலசலக்கின்ற முதலைகள்.

விக்ரமைக் குறி தப்பி வந்தவனை மெல்லப் பார்த்து, 'வாய்யா சோமு, என்ன, காரியம் முடிஞ்சுதா?'

'அய்யா, உங்களுக்குத் தெரியாததா? குறி தவறிருச்சய்யா. சம்சாரத்தின் பேர்ல பட்டுருச்சு!'

'சிப்பாய்! பொம்பளையைச் சுட்டியா?'

சோமு என்பவன் அசந்தர்ப்பமாகச் சிரித்தான்.

சுகி தீவிரமாக, 'சிரிக்கவே கூடாது. தெரியுமில்லை? சிரிக்கக் கூடாது.' சோமு சரிபாதி சிரிப்பில் உறைய, 'ஒரு காரியம் சொன்னா சுத்தமாச் செய்துட்டு வரணும். நீ குறி தவறிட்ட இல்ல? அதனால என்ன ஆச்சு? விக்ரம் தப்பிச்சுக்கிட்டான். சும்மா இருப்பானா? ஆபீசுக்குப் போயி, யார்றா சேதி கொடுத்தான்னு

விசாரிச்சுப் பார்த்திருக்காங்க. நம்பாளு தங்கராஜை பிடிச்சு அவன் கொட்டையைப் பிசைஞ்சிருக்காளுக. அவன் என்ன செஞ்சான்? விசுவாசிப் பய. ஜன்னலைத் தாண்டிக் குதிச்சிட்டான், மாடிலருந்து. எல்லாம் எதனால? சோமன் குறி தப்பினதால!'

சோமு, 'மன்னிச்சுருங்கய்யா' என்றான்.

சுகிர்தராஜா அகராதியில் ஒரு வார்த்தை மட்டும் கிடையாது. மன்னிப்பு.

'நீ குறி தவறினாப்பல நானும் தவறட்டுமா? என்ன துப்பாக்கி அது, கொண்டா பார்க்கலாம்? வால்த்தர் பி தர்ட்டி எய்ட் டபிள் ஆக்ஷன். குறி தவறவே தவறாதே! பார்த்துரலாமா?' சுகிர் அவன் மேல் குறி பார்த்தான்.

'அய்யா, வேண்டாம்யா!'

'ஒருநாள் நானும் குறி தவர்றேனே!' என்று சுகி சுட, சோமுவின் கையில் ரத்தம் பெருக உதறிக்கொண்டான்.

'அய்யா, இந்த முறை மன்னிச்சுருங்கய்யா. அந்த விக்ரமை ஒழிச்சுக்கட்டிட்டுத்தான் மறுகாரியம்.'

சுகி இப்போது நேராக அவன்மேல் குறி பார்த்து மெல்ல அதன் ட்ரிக்கர் மேல் விரல் பதிய-

'ஒரு வாரம் ரெண்டு நாள். அதுக்குள்ள ரெண்டு காரியம் முடி. மெட்ராஸ் போ. தங்கராஜ் வீட்டில என்ன மாதிரி காவல் இருந்தாலும் உள்ள போய் இருக்கிற டாக்குமெண்ட்ஸ்களை சப்ஜாடா எரிக்கணும். அப்றம் விக்ரமை என்ன செய்வே?'

'அய்யா செய்துர்றேன்யா.'

'இந்த முறை வாக்குத் தவறினா குறி தவறாது. அப்புறம் உனக்கு ஒரு பொண்ணு இருக்கில்லையா?'

'அய்யா, பத்தாவது வாசிக்குதுய்யா...'

'நல்லாப் படிக்குதா?' என்று அன்பாக விசாரித்துவிட்டு, 'போ போய்ட்டு வா. உம் பொண்ணுக்கு நாசுக்கா விபத்து ஏற்பட்டுறப் போவுது. போப்பா' என்றான் செல்லமாக.

சோமன் ஓடினான்.



விக்ரம் தொலைந்துபோன ராக்கெட்டைப் பற்றிய விஞ்ஞானக் குறிப்புகளை நிதானமாகப் படித்துக்கொண்டிருந்தான். எதிரே ஜீவி ராவ் பைப் பற்ற வைத்துக்கொண்டு வழக்கம் போல் தேநீர் கலந்துகொண்டு, 'நான் படிச்சுப் பார்த்தேன். தலைகால் புரியலை. ரொம்ப டெக்னிக்கல். பைனரி கெமிக்கல் அது இதுன்னு...'

'இந்த மிஸைலுக்கு ஃபயர் அண்ட் ஃபர்கெட்டுன்னு பேரு' என்று நிமிர்ந்து பார்த்தான்.

'அது என்ன ஃபர்கெட்டோ! ஓசைப்படாம இதை மீட்டாகணும். இந்தாளு சுகிர்தராஜா எங்கே இருக்கானோ?'

'சார், அவன் இண்டியாவில இல்லை இப்ப.'

'எப்படிச் சொல்றே?'

'ஒரு மாதிரி பட்சி சொல்றது.' விக்ரம் அந்த மானுவலை மறுபடி புரட்டிக்கொண்டே, 'சார், இந்த ராக்கெட்டுக்குள்ள குட்டியா ஒரு கம்ப்யூட்டர் இருக்குது.'

'சொன்னேனே ரொம்ப சொஃபிஸ்டிகேட்.'

'நியூக்ளியர்? ம்? வெளிய தெரிஞ்சா நம் க்ரெடிபிலிட்டி போயிரும். ஆனா சிக்கல்தான்.' விக்ரம் படித்தான், 'டிஃப்யூஸ் டி ஆக்டிவேட் ப்ரொக்ராம். சார், வாங்க போலாம்' என்றான்.

'எங்க?'

'இந்த ராக்கெட்டுக்குள்ள இருக்கற கம்ப்யூட்டரை செட்டப் பண்ணவங்களை முதல்ல சந்திக்கலாம்.'

'சுகிர்தராஜா?'

'அகப்படுவான். எங்க போறான்.'

'மேலிடத்தில் ஒரு வாரம்தான்டா டயம் கொடுத்திருக்காங்க.'

'ஒரு வாரத்துல உலகத்தையே அழிக்கலாம். கவலைப் படாதிங்க.'

'அதானே இப்பக் கவலை?' என்றார் ராவ்.

'இந்தக் கேஸ்ல கவலையேபடாதிங்க. உத்தரவாதமா கண்டு பிடிச்சே ஆகணும். அந்த பாஸ்டர்டை! ஐ ஹவ் எ ப்ரைவேட்

ஃபோர் டு செட்டில்.' விக்ரமின் மனத்தில் அந்தக் காட்சி ஒரு கணம் விசிறியடித்தது. குபுக் என்று நெற்றி ரத்தம்... மீரா.

கண்ணாடி அறைகளுக்குப் பின் கம்ப்யூட்டர் டெர்மினல்கள் தெரிந்தன. ஜிவி ராவும் விக்ரமும் சூப்பரிண்டெண்டெண்டிடம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

'பாருங்க, அதெல்லாம் டிஃபென்ஸ் ப்ராஜெக்ட்கள். ப்ராஜெக்ட் ஹஷ் ஹஷ்.'

'சார், எல்லாம் எனக்குத் தெரியும்' என்றான் விக்ரம். 'இவர் யார் தெரியுமில்லே?' என்று ராவைக் காட்டினான். 'இவர்தான் ஹஷ் ஹஷ்! இவருக்குத் தெரியாத ரகசியம் கிடையாது. ப்ரான்னு கேள்விப்பட்டிருக்கிங்களா?'

ராவ், 'ஜஸ்ட் ஷோ மி தி மென் ஹூ டிட் தி ப்ரொக்ராமிங்.'

'அந்த கம்ப்யூட்டர் விஞ்ஞானி ஊர்ல இல்லை. வெளிநாடு போயிருக்கிறார்.'

'அவர் அஸிஸ்டெண்ட் யாராவது...'

'அதோ?'

அவர் காட்டிய திசையில் ஒரு பெண் கம்ப்யூட்டர் டெர்மினல் அருகில் உட்கார்ந்து கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்க, 'பொண்ணா?' என்றான் விக்ரம். 'நாசமாப் போச்சு!'

'பெரு ப்ரீத்தி. பிரில்லியண்ட் கர்ள். அவளுக்குத்தான் கம்ப்யூட்டர் விவரங்கள் எல்லாம் தெரியும்.'

விக்ரம் சற்று அலுப்புடன், 'ஒக்கே ஒக்கே' என்று கம்ப்யூட்டர் அறையில் நுழைய, இருவரும் அவளை அணுகினார்கள்.

அந்தப் பெண்ணுக்கு இருபத்தொன்று இருபத்திரண்டு வயதுக்கு மேல் இருக்காது. அந்த கம்ப்யூட்டர் டெர்மினலுக்கும் அவளுக்கும் ஒரு சிநேகிதம் இருப்பதுபோல, திரையில் தெரிந்ததுடன் பேசிக்கொண்டிருந்தாள். அவள் கண்களில் ஆர்வமும் முகத்தில் ஒரு ஆரோக்கியமும் தெரிய, அதிக பகட்டில்லாமல் சௌகரியத்துக்காக உடையணிந்திருந்தாள். 'கமான் கமான்' என்றாள் திரையில் விரியும் பச்சை எண்களையும் எழுத்துக்களையும் நோக்கி.



'மிஷின்கூடப் பேசக்கூடாது' என்றான் விக்ரம். நிமிர்ந்து அந்தப் பெண் அவனைக் கண்களில் சந்தித்து, பார்த்து, 'யார் நீங்க? உள்ளே வரக்கூடாது. போய் சூப்பரிண்டெண்டெண்டைப் பாருங்க.'

விக்ரம் தன் ஐடி கார்டைக் காட்டி, 'உங்கூடப் பேசணும். வரியா?'

'ஐம் பிஸி. கம் லேட்டர்.'

'நோபடி இஸ் தட் பிஸி. கம்.'

'சூப்பரிண்டெண்டெண்டுகிட்ட பர்மிஷன் வேணும்.'

'அவர் தாத்தாகிட்டகூடப் பர்மிஷன் இருக்கு. கம்.'

'இருங்க. இந்த ப்ரொக்ராம் லிஸ்டிங்...'

விக்ரம் பொறுமையிழந்து, 'வாட்ஸ் யூர் நேம்?'

'ப்ரீத்தி.'

'ப்ரீத்தி, இன்னும் நாற்பது செகண்ட்ல நீ எங்கூட வரலை, உன்னை விலங்கு போட்டுக் கூட்டிக்கிட்டுப் போகப்போறேன்.'

'சும்மா பயங்காட்டாதய்யா.'

'தர்ட்டி எயிட். தர்ட்டி செவன். தர்ட்டி சிக்ஸ், தர்ட்டி ஃபோர், ட்வெண்டி சிக்ஸ், நான் கணக்கில வீக்.'

ப்ரீத்தி விக்ரமின் கோட்டின் திறந்த பகுதியில் உள்ளே விலாவில் ஹோல்டர் வைத்துச் செருகியிருந்த துப்பாக்கியைப் பார்த்தாள். விக்ரம் புன்னகையுடன் சிரித்துக்கொண்டு, 'எய்ட் செவன்' என்றான்.

'ஆல்ரைட்! ஐல் கம்' என்றாள் ப்ரீத்தி.

'வேர் இஸ் தி ராக்கெட் ஃபர்ஸ்ட்?' என்றாள் ப்ரீத்தி.

'சூப்பரிண்டெண்டின் அறையில் மேசையில் அவர்கள் மூவரும் வீற்றிருக்க விக்ரம், 'தொலைஞ்சு போச்சு' என்றான்.

'ஓ மை காட்!'

'வாட்ஸ் திஸ் டிஃப்யூஸ் ப்ரொக்ராம் ப்ரீத்தி?'

'இந்தாளுக்கு கம்ப்யூட்டரைப் பற்றித் தெரியுமா சார்?'

விக்ரம், 'ஆன்ஸர் மி.'

ப்ரீத்தி சற்று கர்வத்துடன், 'ஓக்கே. ராக்கெட்டுக்குள்ள ஒரு மைக்ரோ கம்ப்யூட்டர் எய்ட்டி சிக்ஸ் இருக்கு. அதில ஒரு சிக்ஸ்ட்டீன் கே ப்ரொக்ராம் இருக்கு...' நிறுத்தி, 'புரியலை?'

'ராக்கெட் வெடிக்காம இருக்க என்ன செய்யணும்?'

'அதில கோடு செட்டப் பண்ணணும். ஹெக்ஸாடெஸிமல் தெரியுமா?'

'குண்டு வெடிக்காம இருக்க, தமிழ்ல என்ன செய்யணும்?'

குழந்தைக்குச் சொல்வதுபோல, 'ராக்கெட்டைக் கண்டுபிடிக்கணும்.'

'கண்டுபிடிச்சு?'

'அதன் ஜாக்கெட்டைக் கழட்டணும். கழட்டி அதுக்குள்ள இருக்கிற சிப்பை எடுத்துட்டு இந்த சிப்பை மாத்தணும்.'

'எந்த சிப்?',

ப்ரீத்தி, 'எங்க அது?' என்று தன் மேசை, டிராயர், கப்போர்டு எல்லாம் தேட, சூப்பரின்டெண்டெண்டைப் பார்த்து, 'சார், காணோம்! மை காட்!' ப்ரீத்தி விக்ரமைச் சற்றுப் பயத்துடன் பார்க்க,

'முக்கியமான சிப் ஒண்ணைக் காணம்!'

'ப்ரீத்தி, எங்ககூட வரியா? ஒரு ரூம்ல - தனி ரூம்ல - உங்கூடக் கொஞ்சம் பேசணும்' என்றான் விக்ரம்.



# 6

ப்ரீத்தி, முன்பு தங்கராஜுக்கு 'மரியாதைகள்' நடந்த அதே அறையில் அதே நாற்காலியில் நிதானமாக அழுது கொண்டிருந்தாள். அருகே ஜீவி ராவ், விக்ரம்.

'ப்ரீத்தி, இஃப் யூ நோ சம்திங், சொல்லிரு' என்றார் ராவ்.

'சார்! இது அநியாயம். எனக்கு கம்ப்யூட்டரைத் தவிர வேற எதும் தெரியாது.'

'நீங்க போங்க சார். நான் பார்த்துக்கறேன். எல்லாம் வரவழைக்கிறேன்' என்றான் விக்ரம்.

'ஏயப்பா, ஏதாவது ஏக்கச்சக்கமாக...'

'கவலைப்படாதீங்க. நீங்க போங்க!'

இப்போது விக்ரமும் ப்ரீத்தியும் தனியாக இருக்க அவளைத் துளைத்து எடுக்கிறாப்போலப் பார்த்தான். அவள் கண்களில் இருக்கும் பயம் நிஜமா பாசாங்கா என்று அவன் இன்னும் தீர்மானிக்கவில்லை.

'எத்தனை ரூபா கொடுத்தான் தங்கராஜ், அதை மட்டும் சொல்லிரு ப்ரீத்தி.'

'என் சார், இப்படி ஒரு பொண்ணைப் போட்டு வெத்து வெரட்டு வெரட்டறிங்க!'

'பின்ன எங்க அந்த ப்ரொக்ராம்? யாருக்கு வித்த? எப்படி?'

'அய்யோ விக்கலை, தொலைஞ்சு போச்சு. தொலைஞ்சு போச்சு, தொலைஞ்சு போச்சு!'

'எப்படித் தொலையும்? பார்த்துரலாமா?' விக்ரம் மெல்ல நிதானமாக ஒரு கட்டு டைனமைட் குச்சிகளைத் தயாரித்துத் திரி அமைத்துக்கொண்டிருந்தான். 'இதை என்ன பண்ணப் போறேன் தெரியுமா, ப்ரீத்தி? உன் கையைக் காலைக் கட்டிப்போட்டு, கழுத்தடியில வெச்சிட்டுப் போயிருவேன். திரி பத்திக்கிட்டு வெடிக்க ஒரு ரெண்டு நிமிஷம் டயம் இருக்கும். அதுக்குள்ள உண்மையைச் சொல்லிட்டா அணைச்சுரலாம். இல்லே, (மேலே பார்த்து) மறுபடி வெள்ளையடிக்க வேண்டி வரும். மூளை கண்ணு இப்படி எல்லாம் சிதறிடும் பாரு...'

விக்ரம் சற்றும் எதிர்பாராதவிதமாக, ப்ரீத்தி, 'சரி சார், அப்படியே பண்ணிடுங்க! என்ன எழவு! உண்மையைச் சொன்னா ஒத்துக்க மாட்டிங்கன்னா, என்ன பண்றது?'

'மூளை வெடிச்சுரும்!'

'வெடிக்கட்டும், வெடிக்கட்டும்! என்ன போச்சு.'

விக்ரம் திரியைப் பற்றவைத்துவிட்டு, 'குட் பை, நைஸ் நோயிங் யூ' என்று புறப்பட்டான். அவள் கையைக் காலைக் கட்டி, கழுத்தருகில் ஜெலிக்னைட்! ப்ரீத்தி மென்மையாக அழுதவாறு கண்ணை மூடிக்கொள்ள, விக்ரம் அறையை விட்டு வெளியே வந்தான்.

ராவ், 'என்ன, ஏதாவது தெரிஞ்சுதா?' என்றார்.

'இல்லை சார், அந்தப் பொண்ணு பொய் சொல்லலை! ஷி இஸ் க்ளீன்!'

'எங்க அவ?'

'பத்தவெச்சுட்டு வந்திருக்கேன். எதுக்கும் ஒரு சான்ஸ் பார்க்கலாம்னு!'

'பாவி! போடா போடா! அணைச்சிட்டு வா!'

'வெத்து வேட்டு! ஹார்ம்லஸ்.'

'இராதகா' என்று அறைக்குள் நுழைய, திரி தீர்ந்து போய் ப்ரீத்தி லேசான மயக்கத்தில் இருந்தாள். அவளை ஆசுவாசப்படுத்தி



அழைத்துவர விக்ரம் எதும் உணர்ச்சியில்லாமல் சன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டிருந்தான். ராவ் அவளை ஓர் இருக்கையில் உட்கார வைத்தார். 'ப்ரீத்தி, வி ஆர் ஸாரி! நீ வேணும்னுட்டே தொலைக்கலை. அந்த, அது என்னது, என்ன பண்றே, வந்து...'

விக்ரம், 'சுற்றி வளைக்காதிங்க! ப்ரீத்தி, என்கூட வரணும் நீ!' என்றான்.

'எங்க?'

'எங்கன்னு இன்னம் தீர்மானிக்கலை!'

'எதுக்கு?'

'அந்த ராக்கெட்டுக்குள்ள இருக்கிற கம்ப்யூட்டரைப் பத்தித் தெரிஞ்ச ஆளு என்கூட வேணும்...'

'சார், நான் இந்தக் காட்டானோட எங்கயும் போகத் தயாராயில்லை!'

விக்ரம் கோபத்துடன், 'பாரு! சொன்னா வந்தாகணும்!'

'நீ யாராயிருந்தாலும் என்னை ஃபோர்ஸ் பண்ண முடியாது. நீ ஒரு பெரிய இவனா இருந்தா நான் பெரிய... இவ தெரியுமா!'

ராவ், 'விக்ரம், அங்க போய்த் தனியா இரு! பாரும்மா ப்ரீத்தி, இது கொஞ்சம் அரசாங்கத்துக்கு முக்கியமான சமாசாரம். இவன் கூடப் போகவேண்டியது கட்டாயமாயிடறது' என்றார்.

'உடம்புக்கும் நல்லது' என்றான் விக்ரம்.

'இர்றா! வி நீட் யுவர் கோ ஆப்பரேஷன் ப்ரீத்தி, ப்ளீஸ்.'

'அந்தாளை ஸாரி சொல்லச் சொல்லுங்க' என்றாள் ப்ரீத்தி சற்று யோசனைக்குப் பின்.

'வாட் ஃபார்?' என்றான் குரலில் கேலியுடன்.

ராவ், 'ஓய் விக்ரம், சொல்லிட்டுப் போயேன்!' என்றார்.

விக்ரம் அவளருகில் வந்து அவள் மூக்கருகில் 'ஸாரி' என்றான்.

ப்ரீத்தியும் விக்ரமும் ப்ரா ஆபீஸ் மாருதி வேனில், 'முதல்ல தங்கராஜ்'ன்னு ஒரு ஆள் வீட்டுக்குப் போறோம். அங்க இந்த

ராக்கெட் சம்பந்தமாச் சில காகிதங்கள்ளாம் இருக்கு. ஆபீஸ்லருந்து திருடினது. அவையெல்லாம் எத்தனை முக்கியம்னு சொல்லணும்...' ப்ரீத்தி சும்மாவே வர அவளைப் பக்கவாட்டில் பார்த்து, 'நீ என்ன படிச்சிருக்க?' என்றான்.

'கம்ப்யூட்டர் சயன்ஸ். ஐஐடி மெட்ராஸ். நீங்க?'

'தட்ஸ் குட்! பொம்பளைங்கள்ளாம் நல்லாப் படிச்சுட்டு வர்றது ரொம்பச் சந்தோஷமா இருக்கு!'

'பொம்பளைங்கன்னா அத்தனை இளப்பமில்லை! ஆம்பிளைங்க செய்யற அத்தனை காரியமும் செய்ய முடியும்' என்றாள் பெருமையாக.

விக்ரம் அலட்சியமாக, 'காலை விரிச்சுட்டு சுவத்தில ஒண்ணுக்கு அடிப்பியா?' என்றான்.

ப்ரீத்தி அதிர்ந்துபோய் அவனை முறைத்து, 'ச்சே! நான் எவ்வளவோ பேரைப் பார்த்திருக்கேன். உன் மாதிரி நளினமே பண்பே நாகுக்கே இல்லாத காட்டுமிராண்டித்தனமான ஆசாமியைப் பார்த்ததில்லை. க்ரூட்! நான் போறேன்' என்று வேன் கதவைத் திறக்க முயற்சித்தாள்.

'எஸ் ஐம் க்ரூட்!'

'உங்களுக்கெல்லாம் வேலை கொடுத்து உக்கார வெச்சிருக்காங்க பாரு சர்க்கார்ல! அவங்களைச் சொல்லணும். அபாரிஜின் இன் டெரிலின் - கெட் மி அவுட்!'

'லிஸன்!' விக்ரம் நிதானமாக உணர்ச்சியே இல்லாமல் பேசினான்.

'பட்டப் பகல்ல என் கண் முன்னால, புத்தம் புதுசான மனைவி சுட்டுக் கொல்லப்பட்டு, திலகம் வெச்சமாதிரி நெத்தியில குண்டடி பட்டு, குபுக்குன்னு ரத்தம் பொங்கறதைப் பார்த்ததும் எங்கிட்ட இருந்த நளினம், பண்பு, அப்புறம் என்ன சொன்ன, நாகுக்கு... எல்லாம் தீஞ்சு போச்சு!'

ப்ரீத்தி சற்று நேரம் அவனையே பார்த்துக்கொண்டிருக்க அவன் முகத்தின் இறுக்கம் தளர்ந்து அனுதாபம் தெரிய 'ஸாரி' என்றான்.



மைலாப்பூரில் தங்கராஜுவின் வீட்டில் இருந்த காவலாளி மெல்ல டீக்கடையிலிருந்து வருவதைக் கவனித்து விக்ரம் கோபத்துடன், என்யா, இதுதான் நீங்க ட்யூட்டி பண்றதா?'

'அங்கருந்தே பார்த்துக்கிட்டு இருந்தேங்க. ஒருத்தரும் வரலைங்க.'

விக்ரம் தன் அடையாளச் சீட்டைக் காட்டி, 'சரி சரி, மேல போறேன். சாவி கொடு' என்றான்.

ப்ரீத்தியுடன் மறுபடி தங்கராஜின் வீட்டுக்குள் நுழையும்போது விக்ரமுக்குப் பெட்ரோல் வாசனை மூக்கைத் துளைத்தது. சட்டென்று உஷாராகித் தன் மார்பில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வீட்டுக் கூடத்துக்கு வர, நடுக்கூடத்தில் ஒருவன் அத்தனை காகிதங்களையும் எரித்துக்கொண்டிருக்க, விக்ரம் அந்த முகத்தை மறக்கவே மாட்டான்.

விக்ரமைக் கண்டவுடன் சோமன் போட்டது போட்டபடி மாடியில் தாவி ஓடினான். விக்ரம் உடனே அவனைத் துரத்த ப்ரீத்தி செய்வதறியாது திகைத்தாள்.

'வெயிட்!'

'ப்ரீத்தி! கீழ போயிரு நீ!' என்று சொல்லிவிட்டு விக்ரம் அடுத்த வீட்டு மாடிக்குப் போல்வால்ட் போல ஒரு குச்சியைப் பிடித்துக்கொண்டு குதித்தான். தூரத்தில் ஓடிய சோமன் மேல் குறி வைக்க முடியாதபடி கசகசவென்று துணி உலர்த்தல்கள். குறுக்குக் கம்பிகள், டிவி ஏரியல்கள். இருவரும் மாடிக்கு மாடி அசாத்திய வேகத்தில் ஓட, அவர்களை பார்த்துக்கொண்டே ப்ரீத்தி கீழே குறுகலான தெருக்களில் ஓடினாள்.

அந்த விரட்டலை விவரிப்பது கஷ்டம். கம்பிகள், தாவல்கள், ஒரு கோயிலின் மதில்சுவர்கள், இருவரும் அப்படியே அலாக்காகக் குதித்துக் கீழே வந்துசேர்ந்து மாட்டுத் தொழுவம், சாமி ஊர்வலம், சுற்றுப்புறத்தின் மேல் கவலையின்றி ஓடினார்கள். சோமன் ஒரு சந்து திரும்பிக் காத்திருந்த மோட்டார் சைக்கிளில் பாய்ந்து தப்பிக்க, விக்ரம் ப்ரீத்தியைத் தேடினான். அவள் சந்தின் விளிம்பில் ஓடி வர எதிரே சைடு காருடன் ஒரு மோட்டார் சைக்கிள் வருவதைக் கவனித்து அதை நிறுத்தி ப்ரீத்தியை இழுத்துக்கொண்டு அவளை அதில் திணித்து மோட்டார்

சைக்கிள் சொந்தக்காரர் பிரமிக்க அதில் தாவி ஏறிக்கொண்டு, விக்ரமின் ஒரே குறி. அந்த ஆசாமியை எப்படியாவது பிடித்து விடவேண்டும் என்ற ஒரு வெறி!

டிராபிக் விதிகளையோ பிரமித்த போலீஸ்காரர்களையோ மதிக்கவில்லை. அந்த ஒட்டை பைக்கையும் நூறுக்கு மேல் விரட்டி இதோ பிடித்துவிட்டான் என்று வரும்போது ஒரு லாரி குறுக்கிட்டது. அடுத்த முறை ரோட்டில் போட்டிருந்த பார்ட்டிஷன் பிரிவு குறுக்கிட்டது.

ப்ரீத்தி அப்படியே கதிகலங்கி உறைந்துபோய் உடன் பிரயாணம் செய்தாள். நாக்கெல்லாம் வற்றியிருந்தது. போதாக்குறைக்கு இப்போது ஒரு கம்பத்தில் சிய்ச்சி மோட்டார் சைக்கிளும் சைடு காரும் பிரிந்து கொள்ள, ப்ரீத்தி சுயாட்சி பெற்றுவிட்டாள். அருகே இருந்த தியேட்டரை நோக்கி அசுர வேகத்தில் படம் பார்க்கும் அவசரம்போல அந்த சைடு கார் விரைந்தது.



# 7

ப்ரீத்தியின் சைடுகார் மட்டும் நியூட்டனுக்குக் கட்டுப்பட்டு எஞ்சியிருந்த வேகத்தையெல்லாம் தியேட்டருக்குள் நுழைந்தே தீர்த்துவிடுவது என்ற வைராக்கியத்துடன் மூடியிருந்த பிரவேச வாசலைத் தகர்த்துக்கொண்டு ரியர்ஸ்டால் என்று சொல்லப்பட்ட கீழ் வரிசையில் மார்னிங் ஷோ பார்த்துக்கொண்டிருந்தவர்களின் ஜி வரிசையில் மோதி தடங் என்று குலுங்கி நின்றது. ப்ரீத்தி இதற்கு மேல் அதிர்ச்சி தாங்காது என்று ஸ்தலத்தில் உடனே மயக்கம் போட்டுச் சரிந்தாள்.

ப்ரீத்தி எதிர்பாராமல் தியேட்டருக்குள் நுழைந்துவிட்டதால் தன் பார்ட்னர் இல்லாததை உணர்ந்த விக்ரம் அந்தத் துரத்தலைப் புறக்கணிக்க வேண்டியதாகிவிட்டது. தியேட்டருக்கு முன்னே அந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி, 'இங்க ஒரு பொண்ணு சைடு கார்ல தனியா வந்துதாய்யா?' என்று விசாரித்து, பதிலுக்குக் காத்திராமல் உடைந்த கதவை உணர்ந்து, உள்ளே சென்று இருட்டில் மாறும் பிம்பங்களின் இடையில், 'ப்ரீத்தி, ஆர் யூ ஆல் ரைட்' என்று தேடினான்.

'என்ன படம்யா இது? தியேட்டரே குலுங்குது. நாற்காலிங்கள் ளாம் குலுங்குது' என்று சொன்னார்களே தவிர ப்ரீத்தியின் பிரவேசத்தை அதிகம் பேர் கவனித்ததாகத் தெரியவில்லை. விக்ரம் திரையில் பார்த்துக்கொண்டே வர முனகல் சப்தம் கேட்டு, ப்ரீத்தியை நோக்கிக் குனிந்து அவளைப் பொறுக்கிக்கொண்டு உடனே ஆசுவாசப்படுத்தத்தான் நினைத்தான். ஆனால் திரையில் ஒரு கிரிக்கெட் பிம்பம் அவனைக் கவர்ந்தது. படம் தொடங்கு வதற்குமுன் காட்டப்படும் ஐஎன்ஆர் நியூஸ் ரெவ்யூ அது. அதில்

ஒரு கிரிக்கெட் ஆட்டம் நடந்துகொண்டிருந்தது. இங்கிலாந்து குழுவினர் 45 ஓவர்களில் ஏழு விக்கெட் நஷ்டத்துக்கு 225 ரன்கள் எடுத்தனர்.'

இந்திய அணி அந்த 225 எடுத்ததா இல்லையா என்பது பற்றி விக்ரம் கவலைப்படவில்லை. அவன் கவனம் திரையில் அந்தக் கிரிக்கெட் மாட்ச் பார்க்க வந்த பார்வையாளர் கூட்டத்தை ஒரு கிளான்ஸ் ஆரவார சகிதம் காட்டும்போது தெரிந்த டெலிவிஷன் காட்சிதான்.

அதில் ஒரு ஏராளமான ராஜா. அவர் அருகில் சுகிர்தராஜா தெரிந்தான். விக்ரம் சட்டென்று ப்ரீத்தியைக் கீழே போட்டுவிட்டு, 'ஹூக்!' என்றான்.

ப்ரீத்தி சற்று உயிர் பெற்றுத் திரையைப் பார்த்து, 'கபில்தேவ்' என்றாள் ஹீனமாக.

'இல்லை. சுகிர்தராஜா. வா போகலாம்!'

'எங்க? எங்க? வெயிட் ஃபார் மி!' என்று அவள் தடுமாற, விக்ரம் அந்த தியேட்டரின் ப்ரொஜக்டர் அறையை நோக்கி விரைந்தான்.

ப்ரீத்தி அவனை நொந்துகொண்டே பின்தொடர்ந்தாள்.

விர்ர் என்று ஓடிக்கொண்டிருக்கும் படச்சுருள் ஓசை மத்தியில் விக்ரம் ஒரு ரீலை ஆராய்ந்துகொண்டிருக்க அந்தத் தியேட்டரின் புரொஜக்டர் ஆப்பரேட்டர், 'அய்யா, நீங்க யாருன்னே சொல்லலை. அசப்பில பார்த்தா நமக்குத் தெரிஞ்ச ஆளு மாதிரி இருக்கிங்க...'

'நான் கவர்மெண்ட்டு...' தன் பர்ஸிலிருந்து ஐடி கார்டை எடுத்து அவன் மூக்கருகே காட்ட,

'இதெல்லாம் யாருக்குப் புரியுது' என்றார் தியே ஆப்.

விக்ரம் தன் துப்பாக்கியைச் சட்டென்று உருவிக் காட்டி, 'இது புரியுதா?' என்றான்.

'அய்யா நல்லாப் புரியுதுங்க. எதை வேணா எடுத்துட்டுப் போங்க. 'நீலமலைத் திருடன்' இருக்குது. முழு ரீலையே எடுத்துட்டுப் போங்க.'



விக்ரம், 'அதெல்லாம் வேண்டாம். எனக்கு இந்த ஒரு துண்டு போதும்' என்று கத்தரித்துக்கொண்டான்.

அப்போதுதான் ப்ரீத்தி தள்ளாடிக்கொண்டு உள்ளே வர,

'ஓ யா! ப்ரீத்தி, ஆர் யூ ஆல்ரைட்? சரியாப் போச்சா! ஸாரி, உன்னை அவசரத்தில் மறந்துபோயிட்டேன்.'

ப்ரீத்தி அவனைச் சுடுவது போலப் பார்க்க 'அம்மா யாருங்க?'

'புதுமுகம்! வர்றம் மாணிக்கம்.'

'அட எம் பேர் எப்படி தெரிஞ்சுது?' என்றார் ஆப்பரேட்டர்.

'அதெல்லாம் இல்லைங்க. வாசல்ல உங்க பேர் போர்டில எழுதியிருக்கு' என்றாள் ப்ரீத்தி.

'கம்!' என்று விக்ரம் மாடிப் படிகளில் சரிய, 'வெய்ட்! வெய்ட்! என்னால இந்த ஓட்டம் ஓட முடியாது' என்று அவனைப் பின்தொடர்ந்தாள்.

சினிமாவில் காண்பிக்கப்பட்ட சுகிர்தராஜா பிலிம் சுருள் இப்போது லூப்பாக மாட்டப்பட்டு ஒரு திரையில் திரும்பத் திரும்பக் காட்டப்பட, ராவும் ப்ரீத்தியும் விக்ரமும் அதை அலுவலகத்தில் உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ராவ், 'சந்தேகமே இல்லை. இதான் சுகிர்தராஜா! கை குடுரா! எப்படிக் கண்டுபிடிச்ச?'

விக்ரம் கை கொடுக்காமல் திரையில் சலனித்த சுகியைப் பார்த்துக்கொண்டு, 'கிரிக்கெட் மாட்சு எங்க நடந்தது போனவாரம்?'

'ராக்மன் கப்பு சலாமியாவில் நடந்தது. ஃபோர் நேஷன்!'

'சலாமியா? வேர் தி ஹெல் இஸ் தட்?'

ராவ் மேசை மேல் ஒரு குளோபைச் சுற்றி, 'இதோ இங்க இருக்கு?' என விரலால் காட்ட,

'இந்த மாட்ச்ல ஸ்ரீகாந்த் 75 அடிச்சார்' என்றாள் ப்ரீத்தி.

'எல்லாம் ஓசியா இருக்கும்.'

'பாரு, ஸ்ரீகாந்தை மட்டும் எதும் சொல்லாத. கெட்ட கோபம் வரும்.'

'ஐம் நாட் ஒரிட் எபவுட் ஸ்ரீகாந்த். இந்த கிரிக்கெட் மாட்சில் வந்து குந்திக்கிட்டு இருக்கிற கதிர்ராஜா... அவனுக்கு சலாமியால என்ன வேலை? சார் பக்கத்தில ஒரு வெத்துக் குண்டன் யாரு?'

'அதாண்டா சலாமியாவோட ராஜா!'

'டெல் மி எபவுட் சலாமியா இன் நாட் மோர் தன் ஃபோர் லைன்ஸ்.'

'கொஞ்சம் பாலைவனம், கொஞ்சம் சோலை, கொஞ்சம் கடல், கொஞ்சம் மலை, கொஞ்சம் ஆயில். ஒரு விநோதமான தேசம். அந்த தேசத்து ராஜாவைப் போல. என்னவோ சிங்!'

'ப்ரீத்தி, இந்த மாட்ச் எப்ப நடந்தது?'

'போன வாரம்.'

'க்ரேட்! கதிர்ராஜா போன வாரம் சலாமியால இருந்திருக்கான். அப்டின்னா என்ன அர்த்தம்?'

'ராஜாவைப் பார்க்கப் போயிருக்கலாம்... ஓ மை காட்! நீ சொல்றது புரியுது...'

'ப்ரீத்தி, உனக்கு பாஸ்போர்ட் இருக்கா?'

'இல்லை.'

'சார் இந்தப் பொண்ணுக்கு அர்ஜெண்டா பாஸ்போர்ட் ஏற்பாடு பண்ணிருங்க. அப்புறம் சலாமியாவுக்கு ரெண்டு பேருக்கும் விசா!'

'அவ்வளவு சுலபமில்லை. சலாமியாவில் ரொம்ப ஸ்ட்ரிக்ட். லேசுல விசா கிடைக்காது.'

'கிடைக்க வெக்கணும். ரெண்டு பேரும் உடனே போயாகணும்.'

'வெய்ட் எ மினிட். இதில நான் ஒருத்தி இருக்கேங்கறதே வரலையோ? என்னைக் கேக்க வேண்டாமா?'



'வேண்டாம். யூ ஆர் கமிங் வித் மி. தட்ஸ் என் ஆர்டர்!'

ப்ரீத்தியின் கோபக் கன்னச் சிவப்பை இருவரும் கவனிக்கவில்லை.

ராவ் யோசித்து, 'லெட் மீ ஸீ. சலாமியாவுக்கு ஒரு கலாசார கோஷ்டி கிளம்பிட்டிருக்கு. நம்ம டிபார்ட்மெண்ட் கிளியரன்ஸ்க்கு வந்தது பேப்பர்ஸ். உனக்கு ஏதாவது கலாசாரம் தெரியுமா, டான்ஸ் பாட்டுன்னு?'

'ஜன கண மன தெரியும்' என்றான் விக்ரம்.

'நோ சான்ஸ்! ப்ரீத்தி?'

'சார், எனக்குக் கம்ப்யூட்டரைத் தவிர எதுவும் தெரியாது சார்...'

'கம். வீ வில் மேனேஜ் ப்ரீத்தி. யாருக்கு டாட்டா காட்டணுமோ காட்டிட்டுக் கிளம்பி வந்துர்றியா?'

'எப்பக் கிளம்பணும்?' என்றாள் ப்ரீத்தி.

'நேத்திக்கு' என்றான் விக்ரம்!

அடுத்த நாளைக்கு பாஸ்போர்ட், விசா போன்ற பிரயாணக் காகிதங்கள் தயாராகிவிட்டன. விக்ரம், ப்ரீத்தி இருவரது பெயர்களும் அவசரமாக, சலாமியாவில் இண்டியா பெஸ்டிவலுக்காகச் செல்லும் கலாசார கோஷ்டியுடன் சேர்க்கப்பட்டன.

ப்ரீத்தி தன் சிறு கைப்பெட்டியுடன் விக்ரமின் அறைக்கு வந்து படுக்கை மேல் கைப் பெட்டியை வைத்து, 'ஐ ஜஸ்ட் டோண்ட் அண்டர்ஸ்டாண்ட்' என்றாள். 'எங்கப்பாவுக்கு...'

'எல்லாம் தகவல் சொல்லியாச்சு. சின்ன விஷயங்களைப் பற்றிக் கவலைப்படாதே.'

ப்ரீத்தி பிரயாணத்துக்கு ஏற்ப உடையணிந்திருந்தாள். அறையைச் சுற்றும் முற்றும் பார்த்தாள். குப்பையாக இருந்தது. அங்கே இங்கே சட்டை பாண்ட்டுகள் தொங்க, ஏராளமாகப் புத்தகங்கள். மலர்ச்செடி ஒன்று கவிழ்ந்திருப்பதை நிமிர்த்தினாள். அந்தப் புத்தகங்களில் ஒன்றைப் புரட்டி, 'ரொம்பப் படிப்பீங்க போலிருக்கே' என்றாள்.

விக்ரம் பதில் சொல்லாமல் ஷேவ் பண்ணிக்கொண்டிருந்தான். அலமாரியில் இருந்த மீராவின் போட்டோவைப் பார்த்தான். 'இதானா அவ?'

விக்ரம் ஷேவிங் கண்ணாடி வழியாகப் பார்த்து, 'அதெல்லாம் எடுக்காதே' என்றான்.

'வெரி சார்மிங் அண்ட் ஸ்வீட். ம்! எத்தனை குப்பை! ஒரு பெண் இல்லேன்னா எப்படி ஆயிடறது?'

விக்ரம் பேசாமல் இருக்க அவனருகில் வந்து அவன் ஷேவிங் பண்ணுவதைப் பார்த்து, 'ரத்தம்! ஆம்பளைங்களுக்கு ஷேவிங் பண்ணிக்கிறது தொந்திரவு இல்லை?'

விக்ரம் திமர் என்று திரும்பி, 'பாரு! உனக்கும் எனக்கும் ஆபீஸ் உறவு! அதோட சரி! தட்ஸ் இட். எனக்கு உம்பேர்ல எந்தவித அக்கறையும் கிடையாது. நானும் நீயும் சலாமியா போறதெல்லாம் வேஷம். நடுவே காதல் கீதல்னு எதையாவது கிளப்பாதே! நோ! எனக்கு ஒரு பொண்ணைக் காதல் பண்ணிக் கல்யாணம் பண்ணி இழந்தது போதும்! உம் பேர்ல எனக்கு அக்கறையே இல்லை! யோசிச்சுப் பார்த்தா, யூ ஆர் அக்லி! பார்க்க நல்லால்லை. உனக்கு மாரே இல்லை இல்லை!'

ப்ரீத்தி, 'நீ மட்டும் மன்மதனோ?' என்று கண்ணீருடன் உட்கார்ந்திருந்தாள். 'பிலிஸ்டைன். காட்டு மனுசன்! கண்ணைப் பாரு! ஒற்றைக் கண்ணு! எனக்கு எத்தனை பாய் ஃப்ரெண்டு தெரியுமா?' என்று புழுங்கினாள்.

அப்போதுதான் ப்ரீத்தி அவனை நோக்கி ஊர்ந்து வந்த பாம்பைக் கவனித்தாள்.



# 8

பேசிக்கொண்டே இருந்த ப்ரீத்தி அந்த பாம்பைப் பார்த்து உறைந்துபோனாள். மெல்ல அவசரமே இல்லாமல் அது படுக்கைமேல் ஊர்ந்தது. என்ன பாம்பு என்று அவளால் சொல்ல முடியவில்லை. ஏதோ ஒரு கறுப்பு கலந்த அழுக்குப் பச்சையில் வழவழவென்று ஒரு வழுக்கல்.

'ஏன் நிறுத்திட்டே' என்றான் விக்ரம்.

'பா பா பா...'

'பாபான்னா? பாட்டு கத்துக்கறியா?'

ப்ரீத்தி விநோதமாக நடுங்கிக்கொண்டு படுக்கையில் காட்ட, விக்ரம் கண்ணாடியில் அதைப் பார்த்தான். ப்ரீத்தி சுவரில் முதுகு பதித்து அதற்குமேல் பின்வாங்க முடியாமல் நின்றாள்.

விக்ரம் பதற்றமே இல்லாமல் நிதானமாக முகம் கழுவிக்கொண்டு, டவலால் முகம் துடைத்துக்கொண்டு, ப்ரீத்தி கண்ணாடியில் தெரிந்த விக்ரமைக் கண்களால் கெஞ்ச, 'இரு வரேன்' என்று சொல்லி, 'பாம்புதானே?' என்று அதைக் கையில் எடுத்து முத்தம் கொடுத்து, 'என்ன வி.கே. மணி, கூப்பிட்டாத்தான் கூடையி லேர்ந்து வெளியே வரணும்னு சொல்லியிருக்கேன் இல்ல? இப்ப இந்த அம்மா பயந்துக்கறாங்க இல்ல?' என்று அதைக் கட்டிலுக் கடியில் இருந்த கூடைக்குள் செலுத்தி? 'போப்பா போ' என்று மூடினான்.

ப்ரீத்தி வெலவெலத்துப் போய் வியர்வையைத் துடைத்துக் கொண்டு, 'பாம்பு வளக்கறீங்களா?'

'ஆமாம்' என்றான் விக்ரம்.

'பேரு வி.கே. மணியா?'

'ஆமாம். மனுசங்களுக்குத்தான் இனிஷியல் வேணும்னு எங்க சட்டம்?'

'வேற ஏதாவது வளர்க்கறீங்களா?'

விக்ரம், 'ஒரு தேவாங்கு இருந்தது' என்று பாண்டை உயர்த்தி ஜிப்பை விரிக் கொண்டான்.

ப்ரீத்தி கண்ணை மூடிக்கொண்டு, 'தோ' என்றாள்.

விக்ரம் 'சலாமியா' என்ற புத்தகத்தைப் பிரித்துக்கொண்டே, ரொட்டி கடித்துக்கொண்டே, பாக் செய்துகொண்டே, டெலி போனைச் சுழற்றி, 'இண்டியன் ஏர்லைன்ஸ்? இஸ் தி டெல்லி ஃப்ளைட் ஆன் டைம்?' என்றான்.

விமான நிலையத்தில் ஃபைபர் தாற்காலி வரிசையில் இருவரும் உட்கார்ந்திருக்க, ப்ரீத்தி முனகிக்கொண்டே வந்தாள். 'என்னைப் போட்டு இப்படி எதுக்கு இம்சை பண்றீங்க? எந்த ஊரு, எந்தத் தேசம்னு தெரியாமக்கூட ஒரு பிரயாணமா?'

'இந்தா, படி' என்று சலாமியா பற்றிய புத்தகத்தைக் கொடுத்தான்.

அதை அவள் பிரித்ததில் அதன் முதல் பக்கத்தில் கலர் போட்டோவில் சலாமியாவின் மன்னர் ஏளனமாகச் சிரித்தார். எச்.இ.எச். ஸர் தாக்கத் சிங்ஜி, ஜி.வி.எஸ்.ஐ என்று பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்த போட்டோவைப் பார்த்து, 'சிரிக்கிறதே நல்லால்லையே.'

'யாரு?'

'சலாமியா ராஜா.'

'நேரில் சந்திக்கிறப்போ சொல்றேன்' என்று விக்ரம் தன் புத்தகத்தில் ஆழ்ந்தான்.



'என்ன புத்தகம்?' என்றாள் ப்ரீத்தி.

'உனக்குக் கொடுத்ததைப் படி. இதெல்லாம் படிச்சாக் கெட்டுப் போயிடுவே!'

விக்ரமின் பின்னால் உட்கார்ந்திருந்தவன், 'சத்தம் போடாம டாய்லட்டுக்கு வர்றியா?' என்றான்.

விக்ரம் நிலைமையைக் கணித்தான். முதுகில் பதிந்திருப்பது துப்பாக்கியா, இல்லை ஏதாவது பாசாங்கான விஷயமா என்று பரிசோதித்துப் பார்க்க விரும்பவில்லை.

பின்பக்கத்துக்காரன், 'திரும்பக்கூடாது. கத்தக்கூடாது. தொந்தரவில்லாமல் எழுந்து வர்றியா?' என்று ரகசியம் பேச.

'வரேன்' என்றான்.

'எங்க வரே?' என்றாள் ப்ரீத்தி.

'சார் நம்ம நெடுநாளைய தோஸ்த்து. கூப்பிடறார். ஒரு நிமிஷத்துல வர்றேன்.'

இருவரும் எழுந்து நிற்க, அந்த ஆசாமி உயிர்த்தோழன் போல விக்ரமின் மேல் ஒட்டிக்கொண்டிருந்தான். அவன் முதுகில் துப்பாக்கி பதித்திருப்பது ப்ரீத்திக்கு இங்கிருந்து தெரியவில்லை. இருவரும் பசைபோட்டாற்போலச் செல்வது விநோதமாக இருந்தது.

'வெய்ட் விக்ரம்! எங்கே போறீங்க?'

'ஜெண்ட்ஸ் டாய்லட். அங்கேதானே போறோம் தலைவரே?'

'பேசாதே' என்று துப்பாக்கியால் நிரடினான்.

'ம்... நட.... எக்ஸ்க்யூஸ் மி' என்று ப்ரீத்தியைப் பார்த்துப் புன்னகைத்து, 'கொஞ்ச நேரத்தில் காரியம் முடிஞ்சுரும்.'

விக்ரம் கண்ணால் சைகை செய்வதை ப்ரீத்தி பார்க்காமல் புத்தகத்தில் ஆழ்ந்து, 'சீக்கிரம் வந்திருங்க' என்றாள்.

விக்ரம் துப்பாக்கியால் டாய்லெட் உள்ளே செலுத்தப்பட்டான். ஒரு மாமா நிதானமாகப் பீங்கானைப் பரவலாக நனைத்துக் கொண்டிருக்க, 'வெய்ட்' என்றான்.

'சத்தம் வரக்கூடாது. சுட்டுப் பொசுக்கத் தயங்கவே மாட்டேன்.'

'கூடாதே' என்றான் விக்ரம். 'என்ன வேணும் கேளு.'

'எங்க போறப்பல?'

'டில்லி.'

'டில்லிலருந்து?'

'வேற எங்கயும் இல்லை. திரும்பி வந்துருவேன். காரியம் ஆன உடனே!'

'என்ன காரியம்?'

'சொந்தக் காரியம்.'

'சலாமியா போறாப்பலயா?'

'சலாமியா? அப்படின்னா?'

'யோவ்! எதுக்குப் பாசாங்கு?'

விக்ரம் தடக்கென்று திரும்பி அவன் துப்பாக்கியை ஒரே எட்டில் உதைக்க முற்பட, அவன் அதற்குத் தயாராகவே இருந்தான்! சட்டென்று பின்வாங்கி விலகிக்கொண்டு இப்போது விக்ரமின் மார்புக்கு நேராகத் துப்பாக்கியைக் காட்டினான். நிஜம்தான்.

'பாரு. ரொம்ப ரொம்ப நெர்வஸ்ஸா நானு. ஆனா என்ன நெர்வஸா இருந்தாலும் குறி தப்பாது.'

விக்ரமின் கண்கள் அலைந்தன. காலந்தாழ்த்த வேண்டும். யாராவது டாய்லட் உபயோகிக்க வரமாட்டார்களா?'

'போ பின்னால்! உம்!'

கம்மோடு வைத்த அந்த எக்கச்சக்கமான இடத்துக்குள் விக்ரமைத் திணித்து அவன் கைகள் நடுங்க அவன் பையைப் பரிசோதிக்க முற்பட்டான். விக்ரம் இந்தச் சந்தர்ப்பத்தில் எதும் ரிஸ்க் எடுக்க முற்படவில்லை. அந்த முகம் கிட்டத்தில் பார்த்தது ஞாபகம் இருந்தது. மீராவைக் கொன்றுவிட்டு ஓடிய இருவரில் ஒருவன்.



என்ன செய்யப் போகிறான்? சரியானபடி மூலையில் அடைபட்டுவிட்டான். உத்தரத்தில் பொருத்தியிருந்த ஒலி பெருக்கியில் அந்தப் பெண் குரல் ஆங்கிலம் தடவின தமிழில், 'ஹைதராபாட் மற்றும் டில்லி செல்லும் பயணிகள் விமானத்தில் சென்று அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்' என்று அறிவிக்க,

விக்ரம் குமார் பத்தடி தூரத்தில் சுடப்பட்டான்! சைலன்ஸர் பொருத்திய துப்பாக்கி 'ட்விக்' என்றது. ஓரத்தில் டவல் சிப்புடன் நின்றிருந்த கேர்டேக்கர் சிப்பந்திக்குக் கூடச் சப்தம் கேட்டிருக்காது. விக்ரம் அப்படியே மடங்கி விழுந்தான்.

விக்ரமை நேருக்கு நேர் சுட்டவன் அவன் பையில் இருந்த பொருட்களைப் பரிசோதிக்கும் எண்ணத்தில் கிட்ட வந்தான். விக்ரம் - கண்மூடி டாய்லட் சீட்டில் சரிந்தவன் - சட்டென்று சகலமும் உயிர்பெற்று அவன் மேல் பாய்ந்து துப்பாக்கியைத் தட்டி வீழ்த்தி, முழங்காலால் அதே சமயம் அவன் இடுப்பில் வெடிக்க, கழுத்தின் கீழ் ஒரு கராத்தே வெட்டு! குப்பையாக விழுந்தான்.

'ஸாரி, உன்னைக் கொல்றதுக்கு எனக்கு இஷ்டமும் இல்லே, நேரமும் இல்லை! பை பை ஃப்ரண்ட்!' விக்ரம் புறப்பட்டான்.

ப்ரீத்தி தவித்துக்கொண்டு காத்துக்கொண்டிருந்தாள். 'எங்க போயிட்டீங்க? எல்லா பாசஞ்சர்களும் விமானத்துக்குப் போயாச்சு!'

'டாய்லட்டில கொஞ்சம் பர்ஸனலாப் பேசவேண்டியிருந்தது நண்பர்கூட!'

'யாரு அந்த ஆளு?'

'நலம் விரும்பி. என்னை மாருக்கு நேரா துப்பாக்கி வெச்சுச் சுட்டாரு. அதனாலே கொஞ்சம் லேட்டாயிருச்சு!'

'என்னது? மாருக்கு நேராவா?'

'துப்பாக்கி, கன்னு இல்ல, கன்னு? ஹி ஷாட் மீ!'

'உனக்கு ஒண்ணும் ஆகலையா?'

விக்ரம் நடந்துகொண்டே தன் சட்டை பட்டனை ஒன்றிரண்டு கழற்றினான்.

'சும்மா பயங்காட்டாதீங்க. துப்பாக்கியால சுட்டான். உங்களுக்கு ஏதும் ஆகலியா? வெத்துத் துப்பாக்கியா?'

'இல்லை, எதையும் தாங்கும் இதயம்!' என்று விக்ரம் தன் புல்லட் ப்ரூஃப் பனியனைக் காட்டினான். செக்யூரிட்டி அதிகாரியிடம் தன் கார்டைக் காட்டி, 'அந்த டாய்லெட்டில ஒருத்தரு மயக்கமாக் கிடக்காரு! மயக்கம் தெளிஞ்ச உடனே அரெஸ்ட் பண்ணி இந்த நம்பருக்கு போன் பண்ணி, வண்டி அனுப்பச் சொல்லுங்க,' என்றான்.



# 9

அந்தச் சிறிய விமான நிலையத்தில் யாரும் இல்லாதபோது விக்ரமும் ப்ரீத்தியும் வந்து இறங்கினார்கள். 'யாரையுமே காணோமே' என்றாள். 'எல்லாருமே செத்துப் போயிருக்கணும் இல்லை லஞ்சுக்குப் போயிருக்கணும்.'

'வாங்க வாங்க' என்று சப்தம் கேட்டு 'என்னடாது தமிழ்' என்றான். அவர்களை நோக்கி ஒரு நடுத்தர வயதுக்காரன் பொந்தா பொந்தா என ஓடிவந்தவனைப் பார்த்து, 'நீங்கதானா...' என்று ஆரம்பித்தவனை மேலும் பேசவிடாமல், 'என் பேரு சுபாஷ். நான் இந்த ஊர்ல துபாஷ்.'

'சபாஷ்!' இருவரும் விமான நிலையத்தின் குட்டிக் கட்டடத்தை நோக்கி நடக்க, விக்ரம் அந்த துபாஷை நேராகப் பார்த்தான். சுலபமாகச் சிரித்து அதிகமாகப் பேசுவான் போல இருந்தது. ப்ரீத்தியை 'குட்மார்னிங்குங்க. நல்வரவு. வெல்கம். அல்லது இந்த ஊர் பாஷையில சொன்னா சுப்ராஷ். துபாஷ்னா மொழிபெயர்ப்பாளன். சலாமிலிருந்து தமிழுக்கு. தமிழன் தான். இங்க வந்து மாட்டிக்கிட்டேன். தண்ணியில்லாக் காட்டுல' விக்ரம் சுற்றிலும் பார்த்தபோது ஒரு முரட்டு அதிகாரி அவர்கள் இருவரையும் சைகை காட்டி அழைத்தான். இருவரும் டெர்மினல் கட்டடத்தை அணுக அதிகாரி ப்ரீத்தியைக் கண்கொட்டாமல் பார்க்க, 'கம்முனு வா. நானே எல்லாக் கேள்விக்கும் பதில் சொல்றேன்' என்றான் விக்ரம். 'சாக்கிரதையா இருங்கம்மா. கொஞ்சம் அசந்தாக் கையைக் கண்ட இடத்துல வெச்சுருவாங்க.'

அவர்கள் அதிகாரியை அணுக அவன் கண் விலகாமல், 'பாஸ் போர்ட்' என்றான். விக்ரம் எடுத்துக் கொடுக்க அதைப் பிரித்துப் பார்த்துத் துபாஷிடம் அவர்கள் பாஷையில் ஏதோ கராஷ் முராஷ் என்று சொல்ல, 'உங்களுக்கு என்ன தொழிலுன்னு கேக்கறான்.'

'ப்ரெஸ்' என்றான். துபாஷ் மொழிபெயர்த்துச் சொல்ல, 'என்ன பத்திரிகைன்னு கேக்கறான்.' விக்ரம் அந்தக் கேள்விக்குக் காத்திருந்தவன் போல, 'இன்ட்ரூடர்' என்றான்.

'உங்க பார்ட்டிக்காரங்க பஸ்ல காத்துக்கிட்டு இருக்காங்க.'

தூரத்தில் பஸ் ஒன்று துணித்திரையில் 'இண்டியா ஃபெஸ்டிவல்' என்ற அறிவிப்பு படபடக்கக் காத்திருந்தது.

அதிலிருந்து ஒரு முகம் சிரிப்புடன் டாட்டா காட்டியது. அதிகாரி அவர்களுடன் பஸ்வரை வர விக்ரம், 'ஹாய் ஃபோக்ஸ்' என்று உள்ளே நுழைந்து முதல் முதல் சீட்டில் உட்கார்ந்து உடனே முகத்தை மூடிக்கொண்டு தூங்கிப் போனான்.

அதிகாரி மற்றவர்களை விசாரித்தான். இரண்டாம் வரிசையில் இருந்த மாஜிக் நிபுணன் மொழித் தேவையின்றி வாயிலிருந்து ரிப்பனை உருவிக் காட்டினான். அதற்கு அடுத்த வரிசையில் உட்கார்ந்திருந்த பாம்பாட்டி, 'பாம்புங்க' என்று கையால் பாம்பு போலச் செய்து காட்டி அதைக் கொஞ்சம் ஆடவிட்டான்.

அதிகாரி தன் துப்பாக்கி முனையால் அந்தப் பாம்புப் பெட்டியை திறட, அதனுள்ளிருந்து புஸ் என்று சப்தம் கேட்க, மூடி வைத்துவிட்டு, 'ஜாப்பா ஆத்லோ' என்றான்.

துபாஷும் 'ஆத்லோ!' என்றான்.

ப்ரீத்தி விக்ரம் அருகில் உட்கார்ந்துகொண்டு, 'அவன் பார்க்கிற பார்வையே நல்லால்லே' என்றாள்.

'அதுக்கு நான் என்ன பண்ணட்டும்?' அதிகாரி ப்ரீத்தியைப் பார்த்துக்கொண்டே அனுமதிக்க, நீண்ட கரிய பாம்பு போல் இருந்த தார்ச்சாலையில் பஸ் நகர்ந்தது.

ப்ரீத்தி உற்சாகமாகவே இருந்தாள். சாலையின் மருங்கில் 'ஒட்டகம்' என்றாள்.

'பாத்திருக்கேன்' என்றான் விக்ரம் விழிக்காமல்.



இதைப் பாரேன்' என்று அவனை நிரடினாள்.

'நீ முன்னப் பின்ன நீ ஒட்டகம் பார்த்ததில்லையா?'

'இல்லை.'

'நான் பார்த்திருக்கேன். அதும் பால்கூடச் சாப்ட்டிருக்கேன். திக்கா, கொஞ்சம் மசியா இருக்கும்.'

'உவ்வே! இதைச் சொல்லியே ஆகணுமா?'

'பின்னே ரோடில் போற ஒட்டகத்துக்கெல்லாம் என்னை எழுப்பாம இரு.'

'சோம்பேறித் தூங்குமூஞ்சி.'

'ஊருக்குள்ளே போனப்புறம் நிறச் செயல்கள் நிறையவே இருக்கு. ரிலாக்ஸ்' என்று முகத்தைத் தன் தொப்பியால் மூடிக்கொண்டான். ஒரு கிலோமீட்டர் முண்டாக சுற்றிய ரோட்டோரத் தாத்தா புல்லாங்குழலை ஊதிக்காட்டி பொக்கைப் பற்களால் சிரித்ததை 'ஹௌ ஸ்வீட்' என்றாள்.

'சொல்லாதே!' துபாஷ், 'நல்வரவு. சலாமியா தேசத்தில் பசி இல்லை. மசி இல்லை. பட்னி இல்லை. சட்னி இல்லை. ஏழை இல்லை. கோழை இல்லை. எல்லாரும் எந்திரிச்சா ஊர் வந்திருச்சு. இதுக்குமேல் பஸ் போவாது...'

பஸ் நின்றது. எதிரே ஒரு ஊர்வலம் கடந்தது.

விநோத சப்தங்கள். உருமும் மத்தளங்கள். இவை மத்தியில் அலங்காரப் பல்லக்கு மெல்ல மெல்ல ஒரு ஆனைய யானைபோல அசைந்துவர, விக்ரம் சற்றே ஆர்வம் பிறந்தவனாக, 'துபாஷ், இது யாரு?' என்றான்.

'ராஜாவோட தங்கைங்க. பெரியவரு அனிருத்த சிங் இல்லை? அவருக்கு ரெண்டு சம்சாரங்க. ஜெயராணி, விஜயராணின்னு. தாக்கத் சிங் மூத்துக்கும், இந்தம்மா இளையதுக்கும் பொறந்தது.'

'ப்ரிமிட்டிவ்' என்றாள் ப்ரீத்தி.

ஜிங்ஜா ஜிங்ஜா என தோசைக்கல் ஜால்ரா காதைத் துளைக்க அந்தப் பல்லக்கு அருகே வர, ராஜகுமாரி கொஞ்சுண்டு

தெரிந்தவள். அவள் உடலின் மற்றப்பகுதிகள் யாவும் சல்லாத் துணியால் கோடி காட்டப்பட்டுக் கண்கள் மட்டும் நீலக் கோலிக்குண்டுகள் போலத் தெரிந்தன. ஒரு கணம் அக்கண்கள் விக்ரமின்மேல் பட்டுத் தெறித்தன.

'இண்டரஸ்டிங்' என்றான் விக்ரம்.

'பேர் என்ன துபாஷ்?'

'கோமல் ரத்னாபாய். பேரே அம்சமா இல்லை?'

'அந்த 'பாயை' மட்டும் விட்டுட்டா நல்லா இருக்கும். இப்ப இந்தாம்மா எங்க போறாப்ல?'

'என்னது, வந்து சேர்றதுக்கு முன்னாடியே இவ்வளவு இண்ட்ரஸ்ட்டு?' என்றாள் ப்ரீத்தி.

'கோயிலுக்குப் போறாங்க. அதோ பாருங்க சுல்வா மந்திர்னு எலிக்கோயில்.'

'என்னது? எலியா?'

'ஆமாங்க. இந்த தேசத்தில் எலியைத் தொழுவாங்க. பூனையைத் திம்பாங்க.'

தூரத்தில் பிரம்மாண்டமாகத் தெரிந்த அந்தக் கோயில் கோபுரத்தை வியந்து விக்ரம், 'எலிக்கு இவ்வளவு பெரிய கோயிலா?'

'இந்த ஊர்ல எல்லாமே பெரிசுங்க. ராஜாவிலிருந்து தொடங்கி.'

'எங்கயோ பைத்தியக்கார ஊர்ல வந்து மாட்டிக்கிட்டம் விக்ரம்.'

விக்ரம் கவனிக்காமல் ராஜகுமாரியின் பல்லக்கு கடந்து செல்வதையே பார்த்துக்கொண்டிருக்க, அப்போது ஒரு குழப்பம் ஏற்பட்டது. பஸ்ஸிலிருந்து இறங்கி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பாம்பாட்டி திடீர் என்று இஸ் இஸ் என்று சப்தம் பண்ண ஆரம்பித்துவிட்டான்.

'என்னய்யா?'

'பாம்பைக் காணங்க.'

'என்னது?'



அதன்பின் எதும் தெளிவாக நடக்கவில்லை. பாம்பாட்டி கீழே குனிந்து உட்கார்ந்தே இஸ் இஸ் என்று தேட, பாம்பு கூட்டத்தில் நுழைந்திருக்கவேண்டும். அங்கங்கே மக்கள் சிதற, பல்லக்குக் காரர்களுக்கு அவ்வளவு ராஜ பக்தி இல்லை போலும். அப்படியே தம் அழகான சுமையைக் கீழே வைத்துவிட்டு நான்கு பேரும் ஐந்து திசைகளில் ஓடினார்கள். 'ட்ரபிள்' என்று விக்ரம் பல்லக்கின் திசை நோக்கிச் செல்ல, அந்த ராஜகுமாரி கண்களில் பய ரேகை தெரிய, தபக்கென்று குதித்து ஓட, சேடிகள் அலற, விக்ரம் இங்குமங்கும் கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு ராஜ குமாரியை நாட, அவள் கூட்டக் குழப்பத்திலிருந்து விடுபட இயலாதவாறு மாட்டிக்கொண்டு கீழே விழுந்துவிட்டாள்.

எந்தப் பாம்பிலிருந்து பயந்து ஓடினாளோ அந்தப் பாம்பின் மேலேயே விழுந்துவிட்டாள்.

பாம்பு ராஜகுமாரியின் முழங்காலுக்குச் சுமார் பத்து செண்ட்டி மீட்டர் மேலே கடித்துவிட்டது.

'செல்லம், எங்க போயிட்ட நீ? இன்னும் பல்லுகூடப் பிடுங்கலையே உனக்கு' என்று தேடிக்கொண்டிருந்தான் பாம்பாட்டி!

# 10

நிலைமையை முற்றும் உணர்ந்துகொண்ட விக்ரம் ராஜகுமாரியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க, அவள் கீழே சரிவதும், முகத்தில் சற்று பயமும் விஷமும் கலந்து மாறுவதும் தெரிய, 'போச்சு போச்சு! வந்த உடனே சிக்கல்! யோவ்! பாம்பை பல்லைப் புடுங்கி வெக்கக்கூடாது?' என்று ராஜகுமாரியின் அருகே சென்றான். அவள் கீழே மண்ணில் கிடந்தாள். அவள் மூச்சுத் திணற, கண்கள் செருக்கிக் கொண்டன. 'யோவ் பாம்பாட்டி! என்னய்யா செய்யணும்?'

'உடனே கடிபட்ட எடத்தில உறிஞ்சுறானுங்க!'

'உறிஞ்சு!'

'பல்லு இல்லைங்க' என்று பொய்ப் பல்லைக் கழற்றிக் காட்டி பாம்பாட்டி அசட்டுத்தனமாகச் சிரித்தான்.

'நாசமாப் போச்சு!' என்று விக்ரம் கீழே குனிந்து அந்த ராஜகுமாரியைத் தொட்டான். கலவரத்தில் சுற்றுப்பட்டவர்கள் சிதறலாக அலைந்து கொண்டிருக்க, காவலாளி துப்பாக்கியால் பாம்பாட்டியைக் கீழே வீழ்த்திக்கொண்டிருந்தான். விக்ரம் ராஜகுமாரி கைவைத்திருக்கும் இடத்தைக் கவனித்தான். தொடை! என்ன செய்வது என்று சற்று நேரம்தான் தயங்கினான். அவள் பாவாடையை விலக்கி, வெளிச்சத்தில் உரித்த வாழையின் அடிப்பாகம் போலிருந்த, மகரத்வஜம் போலிருந்த அவள் தொடையில் வாய் வைத்து, கன்னங்குழிய ஜில்லென்று உறிஞ்சினான். சுற்றுமுற்றும் இருந்த கூட்டத்தினர் பயத்துடன் கண்களில்



ஊ ஆ என்று விநோத ஆரவாரங்கள் செய்து ஆக்லோ என்று பேசிக்கொண்டு அங்கலாய்க்க, ராஜகுமாரி துவண்டு படுத்தாள். சற்றே நெளிந்தாள். விக்ரம் கலங்கலாகத் துப்பினான்.

ப்ரீத்தி அவனையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு, 'சபாஷ்!' என்றாள். 'தொடைல கடிச்சா காப்பாத்தறதுக்கு எத்தனை அவசரம்! பாம்பு பொய்ப் பல்லா இருந்தா? பாம்பாட்டி மாதிரி?'

'டோண்ட் பி ஸில்லி! பாம்பாட்டி சொன்னானே இட் வாஸ் பாய்ஸனஸ்!'

'ராஜகுமாரி அதிர்ஷ்டம் பண்ணவள்!'

'நீயே பாரு!' ராஜகுமாரி மெல்லக் கண் விழித்து, சுற்று முற்றும் பார்க்கக் கூட்டத்தினர் கை தட்டினர். பணிப்பெண்கள் அவளைக் கைத்தாங்கலாகப் பல்லக்குக்கு அழைத்துச் செல்ல ஒரு காவலன் விக்ரம் அருகில் வந்து, 'கரே கரியா' என்றான்.

விக்ரம் 'கரியா' என்று திருப்பிச் சொல்ல, சுற்றிலும் இருந்த பெண்கள் கிக்கிக் என்று சிரிக்க, புத்துயிர் பெற்ற ராஜகுமாரி திரைக்குப் பின்னிருந்து பச்சைக் கண்களால் அவனைப் பார்த்ததும் அந்தக் கண்களே நன்றி என்று புன்னகை கலந்து சொல்வதையும் கவனித்தான்.

'இண்ட்டரஸ்டிங்! வெரி இண்ட்டரஸ்டிங்!'

துபாஷ், 'சரியான ஆளுய்யா நீங்க! ராஜவம்சத்தைத் தொடைல தொட்டுட்ட! பரம பாக்கியம்! அந்தம்மா வாசனையா இருப்பாங்களே?'

ப்ரீத்தி, 'ஜாதக ராசி' என்றாள். விக்ரம் பேசாமல் மறுபடி பஸ்ஸில் ஏறிக்கொள்ள, துபாஷ், 'பஸ் உள்ளே போகாது. நடந்துதான் போகணும். உள் நகரத்தில ராஜாவோட கோட்டைக்குள்ள ராஜவம்சத்தைத் தவிர யாரும் நடந்துதான் போகணும்' என்றான்.

சதுரம் சதுரமாகக் கடப்பைக் கற்கள் வேய்ந்த தெருவில் விக்ரம் நடந்தபோது இது ராக்கெட் கம்ப்யூட்டர் யுகமா என்று வியப்பாக இருந்தது. பதினேழாம் நூற்றாண்டு என்று சொல்லியிருந்தால் கேள்வி கேட்காமல் நம்பலாம்போல இருந்தது. ஒரே ஒரு மெர்ஸிடிஸ் கார்தான் உறுத்தியது. மற்றப்படி அவ்வப்போது

ஒட்டகங்கள் பிஹுர்ர் பிஹுர்ர் என்று சப்தமிட, 'எப்படிய்யா?' என்றான் பாம்பாட்டி.

'இல்லை. வாய்வு! போல் பாம்பு! நீ சாவறதுக்கு இருந்தே! வாய் மட்டும் வாய் வெக்கலைன்னா நீ இன்னேரம் மேலே போயிருப்ப. சிப்பாய் சுட்டுப் போட்டிருப்பான். இந்த ஊரில முணுக்குன்னா சுட்டுருவாங்க. பர்மிஷன் உண்டு. சட்டக்காரங்களை மட்டும் எதுக்காதிங்க.'

சன்னல்கள் வழியாக வட்ட முகங்கள் எட்டிப் பார்த்தன. கயர் கயர் துணிப் பந்தலில் ஈச்சம் பெரிசு பெரிசாகத் தர்பூஸ் பழங்கள் ரத்தமாகக் கீறியிருந்தவை இளித்தன. கிரணிப்பழங்கள் வாசனை அடிக்க சதுரம் சதுரமாக மீனகாயும் மீன்வற்றலும் விட்டோடு ரோட்டோரங்களில் வெயிலில் காய்ந்துகொண்டிருந்தன. விக்ரம், ப்ரீத்தி, மற்றும் மந்திரவாதி, பாம்பாட்டி, துபாஷ், கோமாளி என்று எட்டுப் பத்து இந்தியர்கள் ஒற்றை வரிசையாக நடந்து செல்ல, சின்னப் பையன்கள் பெரிசாக ஜிப்பா தலைமுண்டாசுடன் அவர்களுடன் ஓட்டமும் நடையுமாக வந்து, 'தபாஜ் தபாஜ்' என்றார்கள்.

'என்னய்யா சொல்றான்?'

'அம்மா பாண்ட்டு போட்டுக்கறதைக் கேக்கறாங்க! ஆம்பிளையா பொம்பளையான்னு சந்தேகம்! தபாஜ் ஆம்பளை. தாஜ்னா பொம்பளை!'

'அப்பா தாஜ்தான். நிருபணம் வேணும்னா தனியா வரச்சொல்!'

'நட்ஸ் நாட் ஃபன்னி' என்றாள் ப்ரீத்தி. 'துபாஷ்! ராஜகுமாரிக்கு அய்யா மேல காதலாய்யா? காதலாயிருக்குமில்லை?' என்றான்.

'நட்ஸ் நாட் ஃபன்னி' என்றான் விக்ரம். இங்கிருந்து உயரும் பாதையின் முடிவில் ஆவைவ ஒய்யாரமாக, கனவு மாளிகை போலக் காத்திருந்த அரண்மனையை நோக்கி 'இது என்ன கட்டடம்?'

'இதான் ராஜா தாக்த் சிங்கோட அரண்மனை!'

'அப்பா, எவ்வளவு பெரிசு!'

'இந்த ஊர்ல எல்லாமே பெரிசுன்னு சொன்னேனில்லையா?'



'ராஜகுமாரி கண்ணு மாதிரி' என்று விக்ரமைப் பார்த்தான். 'அப்படியே உன்னைச் சாப்பிடறாப்பல ஒரு முறை பார்த்துட்டுத் தான் பல்லக்கு ஏறினாள்! நீங்ககூட ஒரு சைட்டு அடிச்சிங்களோ!'

'எனக்குச் சிரிப்பும் வரலை, கோபமும் வரலை' என்றான் விக்ரம்.

அரண்மனை வாயிலில் வளைவு மண்டபத்தருகில் சரிகை முண்டாசும் பளபள பட்டன் கொண்ட கோட்டும் அணிந்திருந்த ஒரு மூக்கன் அவர்களுக்காகக் காத்திருந்து 'வெல்கம்' என்றான். அதற்கு மேல் இங்கிலீஷ் பேசாமல் சலாமி பாஷையில் கபாஷ் துப்ராஷில் ஓர் வாக்கியம் பேசினபோது கைகளை இடுப்பருகில் கோர்த்து ஒருவித மரியாதைபோல வைத்துக்கொண்டு அசங்காமல் சொன்னான். துபாஷ் மொழி பெயர்க்க, 'நல்வரவு, இந்திய நாட்டுக் கலாசார தூதுவர்களை அரசின் சார்பில் வரவேற்கிறோம். நீங்கள் உங்கள் நண்பர்களுடன் தங்க இருக்கும் அறை அரண்மனையில் கிழக்குச் சாரியில் ஏற்பாடு ஆகியிருக்கிறது. உங்கள் வசதிகள் யாவும் கவனித்துக் கொள்ளப்படும். இன்றிரவு விருந்துக்கு உங்களை அரசர் அழைக்கிறார். என்னுடன் வந்தீர்களெனில் நீங்கள் தங்கும் அறைகளுக்குச் செல்லலாம். என் பின்னே தொடருங்கள்' என்று பொம்மை மனிதன் போல் பவ்யமாக, விறுவிறுப்பாக நடந்து செல்ல அவன் பின் விக்ரம் ப்ரீத்தி கோஷ்டி ஆட்டுக்குட்டித்தனமாகச் சென்றனர்.

அரண்மனை காரிடாரின் விட்டத்தை அண்ணாந்து பார்க்க வேண்டியிருந்தது. பத்தடிக்கொரு தடவை ஒரு மகாராஜாவின் சித்திரம் தொங்கிக்கொண்டிருந்தது. எல்லாரும் பெரிய மீசையும் பெரிய கண்ணும் பதக்கங்கள் நிறைந்த அங்கியும் இறகு வைத்த தலைப்பாகையும் 'தோற்றம் மறைவு' தேதிகளுமாக.

'இத்தனை ராஜாவா?' என்றாள் ப்ரீத்தி.

'எல்லாம் செத்த ராஜா. உயிருள்ள ராஜாவை இனிமேத்தான் பார்க்கப் போறோம்!'

'நாம ப்ரஸ் இல்லைன்னு கண்டுபிடிச்சுட்டா?'

'ஷட் அப்.'

'பத்திரிகை பேர் என்ன?'

'இன்ட்ருடர்.'

தலைப்பாகைக்காரன் காட்டிய அறையில் ஒரு ஹால் போல் இருந்தது. அதில் சுமார் நாற்பது இந்தியர்கள் ஒத்திகையில் இருந்தார்கள். நடனர்கள், நடனிகள், ஜாலக்காரர்கள், வேலைக்காரர்கள், குழலூதும் சிறுவர்கள், வில்லாக வளைக் குதிக்கும் சிறுமிகள், மார்பின் பிளவு தெரியப் பெரிய பெண்கள், டேப் காரர்கள், கரகக்காரர்கள், வண்ண வண்ண உடை தைப்பவர்கள்.

ப்ரீத்தி, 'துபாஷ், இந்த ஹால்லயா இருக்கணும்?' என்றாள்.

'இல்லைங்க. உங்களுக்குத் தனியா ரூம் கொடுத்திருக்காங்க. இந்தாங்க சாவி!'

'இன்னொரு சாவி?' என்றான் விக்ரம்.

'ரெண்டு பேருக்கும் ஒரு ரூம்தாங்க.'

'ட்ரபிள்' என்றான்.

'நீங்க ரெண்டு பேரும் புருசன் பொஞ்சாதி இல்லைங்களா?'

'அப்படியா மெஸேஜ் வந்தது?'

'அது என்னவோ! ஒரு ரூம்தாங்க!'

ப்ரீத்தி விக்ரமைப் பார்த்துச் சிரித்து, 'வி ஆர் ஸ்டக்' என்றாள். 'ரெண்டு கட்டிலாவது இருக்கா?'

அந்த அறையில் நுழைந்ததுமே ப்ரீத்தி மறுபடி கண்ணாடியில் தெரிந்தாள். சப்ர மஞ்சம் போல இருந்தது. படுக்கையா சோபாவா என்று சொல்ல முடியவில்லை.

விக்ரம் தன் கைப்பையை எடுத்து வைக்க, ப்ரீத்தி, 'பாத்ரூம் எங்கே?' என்று தேடினாள்.

'துபாஷ், வேற இன்னொரு ரூம் பார்க்க சொல்லுங்க' என்றான் விக்ரம்.

'எங்க? அம்மா கூடச் சண்டையா? வர்றப்பவே ஒரு மாதிரி வாக்குவாதம்...'

'அப்றம் சொல்றேன்.'

'ஏதாவது சின்ன வீடா?' என்று கண்ணடித்தான் துபாஷ்.



'அப்றம் சொல்றேன்.'

'இந்த ஊர்ல எல்லாமே சகஜம்தான். ராஜாவுக்குப் பொண்டாட்டி பட்டம் கட்டினது ரெண்டா, அப்றம் ஸ்டெப்னி எத்தனைங்கறீங்க?' என்று கிட்டே வந்து ரகசியம் போல, 'ஒரு டஜன்.'

'கொஞ்சம் களைப்பாயிடாதோ?'

'தாக்கத் சிங்குன்னா என்ன அர்த்தம்ங்கறீங்க?'

'வலிமை? புஷ்டி?'

'பாக்கறதுக்கும் அப்படித்தான் இருப்பாரு.'

ப்ரீத்தி பாத்ரூமிலிருந்து வெளியே வர 'பப்பரபே!' என்று குழல் ஒலிக்க, ஒய ஒய என்று துபாஷ் இடுப்பில் பட்டை கட்டிக் கொண்டு பவ்யமாக நின்றான். 'என்னது?' என்று விக்ரம் விசாரிக்க, 'தாக்கத் சிங் வரார்.'

'ராஜாவா?'

'ஆமா. உங்களைப் பார்த்தான்.'

தன்னை நோக்கி வருகிற மகாராஜா தாக்கத் சிங்கைப் பார்த்த போது விக்ரமுக்கு ஒரு யுத்தக் கப்பல் அசைந்து வருவது போலத் தோன்றியது. இரண்டு கைகளையும் நீட்டி விக்ரமை நோக்கி, அந்த உடம்புக்கு விறுவிறு என்று நடந்துவந்து அவனை அப்படியே கசக்கிவிட வேண்டும் என்று எண்ணம் போல, 'ஆ! மேமான் மோன்! குதார் மேமான்!' என்று விக்ரமைத் தன்னுள் பூராவும் வாங்கிக்கொண்டு அவன் கழுத்திற்கருகில் பச்சக் என்று முத்தம் கொடுத்தார் ராஜா தாக்கத் சிங். விக்ரமுக்குச் சற்றே மூச்சுத் திணறியதால் ராஜகுமாரியைக் கவனிக்கவில்லை.

# 11

சலாமியாவின் ஏரான ராஜா சற்றும் எதிர்பாராத விதத்தில் செய்தது முத்தமா, கழுத்தில் கடியா என்று விக்ரமுக்குச் சரியாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் திரும்ப அவர் கழுத்தில் கடிப்பதுதான் மரியாதை என்று தெரிந்தது. மகாராஜாவின் சலாமியாவே வினோதமாக இருந்தது. 'தாக்கத் சிங்' என்று சொல்லப்பட்ட ராஜாவை அவர்கள் பாஷையில் கட்டியம் கூறுவதே வேடிக்கையாக இருந்தது. 'அமிமாலோ பாஞ்சா ஹபாப்' என்றதும் ப்ரீத்திக்குச் சிரிப்பாக வந்தது.

'ஷட் அப்' என்றான் விக்ரம். 'இதாங்க அவங்க வம்சப் பேரு.'

ராஜாவின் தங்கையை, 'இனிமாலி பாஞ்சா ஹபாபி' என்றதும் இன்னும் வேடிக்கையாக இருந்ததாலும் 'இனிமாலி'யைக் கண்டு பொறாமையாக இருந்தது.

அவள் விக்ரமையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். முகத் திரையைத் திறக்காவிட்டாலும் உள்ளுக்குள்ளே அழகாக இருந்தாள், இருக்கப் போகிறாள் என்பதற்கு ஏராளமான அறிகுறிகள் அவள் வெளி வடிவங்களிலேயே இருந்தன.

சலாமிய மன்னர் விக்ரமைப் பார்த்து அவர்கள் பாஷையில் சொல்ல, எல்லோரும் கை தட்டினார்கள். சட்டென்று வந்தவர் பொட்டென்று விலகிச் செல்ல மறுபடியும், 'பெப்பரப்பே!'

போகிறபோது ராஜகுமாரி ஒருமுறை விக்ரமைப் பார்த்து இரண்டு கண்களாலும் சிரித்துவிட்டுச் சென்றாள்.



ப்ரீத்தி விக்ரமையே பார்த்துக்கொண்டிருக்க, அவன் கண்கள் ராஜகுமாரியுடன் சென்றன, அவள் படிதாண்டியதும்தான் மீண்டன.

'பார்வையாலேயே கடிச்சுச் சாப்டறாப்போல உத்தேசமா?' என்றாள்.

'டோண்ட் பி சில்லி.'

விக்ரமும் ப்ரீத்தியும் இண்டியா ஃபெஸ்டிவலுக்காக வந்திருந்த மற்ற இந்தியர்களைச் சந்திக்கச் செல்லும்போது துபாஷ், 'ராஜா கழுத்தைக் கடிச்சார் பாரு. அது இந்த ஊரிலே ரொம்ப உசத்தி. ரொம்ப இஷ்டப்பட்டவங்களைத்தான் கழுத்திலேயே கடிப்பாரு ராஜா. தங்கச்சியைப் பாம்புக் கடியில இருந்து காப்பாத்திட்டீங்க பாருங்க. அதுக்கு சந்தோசம்' என்றான்.

'ராஜகுமாரிக்குக் கல்யாணம் ஆயிருச்சாய்யா?' என்றாள் ப்ரீத்தி.

'இல்லைங்க. இருந்திருந்தா என்ன வயது அவங்களுக்கு?'

'இந்த ஊர்ல வழக்கம் உண்டா...' என்று ஆரம்பித்தவளை விக்ரம் தடுத்து நிறுத்தி அந்த அறைக்குள் நுழைய, கலை நிகழ்ச்சிக்காக எல்லோரும் ஒத்திகையில் இருந்தார்கள். கரகம், பொய்க்கால் குதிரை, பாம்பு, நடனம், மாஜிக் என்று கலந்துகட்டியாக இருந்தார்கள். அங்கங்கே உட்கார்ந்து சிலர் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருக்க, ஒரு நர்த்தகி கையைக் காலை அசைத்து பாதம் ஆட, நட்டுவனார், 'தக்கஜம் தக்கஜம்' என்று சொல்லிக் கொண்டே தாளமிட்டுக்கொண்டிருந்தார்.

'த பாருங்க நட்டுவம்! தக்கஜம் தக்கஜம் மட்டும் சொல்லாதீங்க இந்த ஊர்லே.'

'ஏம்பா?'

'எங்க பாஷையில தக்கஜம்னா கெட்ட வார்த்தை! ராஜாவுக்குக் கேட்டுதுன்னா... பைஜாமாவைக் கழட்டி தக்கஜம் பண்ணிருவார்.'

விக்ரம் அறை வாசலில் காத்திருந்த காவலாளிகளைப் பார்த்தான். அவர்கள் தோல் நிறத்தில் கை கால் மார்பில் பாதுகாப்பு அங்கிகள்

கற்றிருந்தார்கள். கட்டி போன்ற ஆயுதங்கள் வைத்திருந்த

'இது என்ன தேசம்! பதினெட்டாம் நூற்றாண்டை விட்டு வெளியே வரலையா?'

துபாஷ், 'அதெல்லாம் இல்லைங்க. எல்லா நவீனமான கருவிகளும் வெச்சிருக்காங்க. பாக்டரி இருக்கு. ஏரோப்ளேன் இருக்குது. கூடவே இந்த மாதிரி ராஜாங்கங்களும் இருக்குது. ப குருவைப் பார்த்தீங்கல்ல?'

'இல்லையே.'

'பார்க்கப் போறீங்க டின்னர்ம்போது! அவர்தான் ஆல் இன் ஆல். அவர் அனுமதி சொன்னாத்தான் ராஜா மூத்திரம் கூடப் போவார்!'

'விக்ரம், எனக்கு இந்த இடத்தைக் கண்டாலே பிடிக்கலை. சீக்கிரம் போயிடலாம்.'

'ராத்திரி டின்னர்ல பார்க்கலாம்' என்று துபாஷ் செல்ல, விக்ரமும் ப்ரீத்தியும் அவர்கள் அறைக்குத் திரும்பினர். ப்ரீத்தி தன் துணிமணிகளை ஓர் ஓரத்தில் வைத்துவிட்டு, 'ராத்திரி டின்னருக்கு ஸாரி கட்டிக்கணுமா?' என்றாள்.

'உன் இஷ்டம். ஏதாவது டிரெஸ் ரெஸ்ட்ரிக்ஷன் இருந்தா துபாஷ் சொல்லியிருப்பான்!'

'எனக்கு ஸாரி கட்டிக்கத் தெரியாதே!'

'அப்ப ஜீன்ஸ்ல வா!'

'எனக்கு ஸாரி கட்டி விடறியா?'

'நோ சான்ஸ்.' என்று படுக்கை போலிருந்த சோபாவின் சாய்வில் உட்கார்ந்தான். 'இலிமானி!' என்றான்.

அந்தப் பிரம்மாண்டமான ஹாலின் மேசை நடுவில் கரு நீல வெல்வெட் அணிந்த நாற்காலிகள் காத்திருக்க, மேலே தொங்கிய ஷாண்டலியர்களில் நூறு பல்பு முயற்சிகள் ஒரு மின் நட்சத்திரக் கொத்தாக ஒளிர்ந்தன. ஓரத்தில் பெரிய மூண்டாக்



காரர்கள். சலாமியா கானம் ஒலிக்க, அது ஒருமாதிரி ஒப்பாரி போலவும் தெம்மாங்கு போலவும் இருந்தது. விக்ரம் சூட் அணிந்துகொண்டு வர, அவன் கையில் கைகோர்த்து ப்ரீத்தி பழக்கப்படாத ஸாரியில் பச்சையில் சில்க் வழுக்கலாக உடன் வந்தாள். 'விக், ஐம் நெர்வஸ்' என்றாள்.

அவர்கள் வந்தபோது ஹாலில் சலாமியா பிரமுகர்கள் ஏழெட்டுப் பேர் கைகளில் கோப்பை வைத்துக்கொண்டு காத்திருக்க விக்ரம் வந்ததும், 'ஆத்லோ, ஆத்லோ' என்று ஆரவாரித்து அவனருகே வந்து புரியாமல் விசாரித்தார்கள். துபாஷ் இன்னும் வராததால் விக்ரம் அவர்களது 'கபாஜ் துப்ராஷ்' வகை கேள்விகளுக்குப் புன்னகையாலேயே பதில் சொல்ல வேண்டியிருந்தது. சுவரில் பற்பல பட ராஜாக்கள் இருந்தார்கள். பெண்களே இல்லை. துபாஷ் இப்போது சின்னதாகத் தலைப்பாகை தொப்பி அணிந்து அவசரமாக வந்தான். அவனுடன் கட்டியக்காரர்கள், 'அர்யாத் அமிமாலோ பாஞ்சா ஹபாப்' என்று அறிவிக்க, ராஜா மார்பில் கொசகொச ஜரிகை போட்ட கறுப்பு சில்க் ட்ரஸ்ஸில் கப்பல் போல மிதந்துவர, கூடப் பட்டத்து ராணியும் தங்கை ராஜகுமாரியும் மரியாதை தூரத்தில் தொடர்ந்தனர். எல்லோரும் நியமித்த நாற்காலிகளுக்குச் சென்று நின்றுகொள்ள, சடக்கென்று அங்கே அமைதி நிலவியது. இரண்டு சிறுவர்கள் கொடி போட்ட குழல்கள் மூலம், 'பப்பரப்ப' என்று ஊத, ராஜா நேராக விக்ரமை நோக்கி வந்தார்.

'நல்வரவு என் உயிர்த்தோழன் அர்யாத் விக்ரம் அவர்களே' என்றார் ராஜா, மொழிபெயர்ப்பில்.

'நியாஷக்' என்றான் விக்ரம். கற்றுக்கொண்ட ஒரே சலாமி வார்த்தையில்.

'நீங்கள் பத்திரிகை நிருபர் என்று கேள்விப்பட்டேன்... இந்தப் பெண்?' என்று ப்ரீத்தியைப் புருவத்தால் கேட்டார்.

'இது என்னுடன் உதவிக்கு வந்த பத்திரிகை நிருபி!'

'ஓ, அப்படியா? வந்தனம்! சலாமியாவுக்கு நல்வரவு. பெண்கள் பத்திரிகை நிருபர்களாக இருப்பது வரவேற்கவேண்டிய விஷயமே.'

இப்படித்தான் துபாஷ் மொழிபெயர்த்தாலும் ராஜா அவனை கண்களால் உருட்டி, 'தக்கஜம்' என்கிற வார்த்தையை பிர கித்து வேறு ஏதோ சொன்னதாக ப்ரீத்திக்குச் சந்தேகம் வந்த இதற்குள் ஒரு காவலாளி வந்து பணிந்து எதையோ அறிவிக்க ராஜா சட்டென்று அந்த ஹாலின் வாயிற்படிக்குச் சென்று மரியாதையுடன் நின்றார். மறுபடி குழல் ஊதி இரு காவலர்க வந்தனர்.

இவர்கள் அரசனின் காவலர்கள்போல் அல்லாமல் முகமூ அணிந்திருந்தார்கள். தொடர்ந்து வந்தவரைப் பார்த்தது விக்ரமுக்கு, 'இவர்தான் மதகுரு' என்று தெரிந்துவிட்டது. நீண்ட பாதிரி அங்கியும் விநோதமான, மொட்டைத் தலையை முழு வதும் மறைக்காத தலையணியும், கையில் அவர் உயரத்துக்குத் தண்டமும், திட்டப்பட்ட நெற்றிப் புருவமும் சிவக்க, வந்தவரின் கையை ராஜா வாங்கி முத்தமிட, மற்றவர்கள் பணிய ராஜா விக்ரமை நோக்கிச் சைகை செய்ய, 'கூப்பிடறான்' என்றாள் ப்ரீத்தி.

விக்ரம் அவர்கள் அருகே சென்று இந்திய கலாசாரக் குழுவைச் சேர்ந்தவர்கள் யாவரும் நிற்கும் வரிசையில் போய்ச் சேர்ந்து கொள்ள, மதகுரு வந்தார்.

'ஹபாபியோ ஹபாப் அசி!' என்று கட்டியங்காரன் உரத்த குரலில் கூற, ஒவ்வொரு விருந்தினராகப் பார்வையிட்டுக் கொண்டு கைகளை அசைத்து ஆசீர்வதித்துக்கொண்டு வந்தார். ராஜா கூடவே விக்ரமின் அருகில் வந்தபோது, ராஜா அவனை சலாமிய பாஷையில் அறிமுகித்து, 'இவன்தான் என் தங்கை ராஜ குமாரியைக் காப்பாற்றியவன்' என்பதுபோல் சொன்னார்.

மதகுருவின் புருவங்களில் சற்றே வியப்பைக் காட்டிவிட்டு மஞ்சள் பற்களால் கால்வாசி இளித்துவிட்டு, 'விஷ்க்' என்று கையை லாகவமாக ஒரு வீசு வீசி, காற்றிலிருந்து ஒரு பூவை எடுத்துக் கையில் கொடுத்தார். விக்ரம் 'தாங்ஸ்' என்று அதை வாங்கிக்கொள்ள, சுற்றுப்பட்டவர்கள் 'ஆ' என்று ஆச்சரியத்தில் வாய் திறக்க, விக்ரம் பதறாமல், 'ஜோவ் மாஜிக்' என்று கூப்பிட்டு 'இதே மாதிரி நீயும் செய்து காட்டுய்யா' என்றான்.

மாஜிக் நிபுணர் மதகுருவைத் தொட்டுக் கூப்பிட்டு, அவர் மாதிரியே விஷ்க் என்று கையை அசைத்து ஒரு பெரிய



பூச்செண்டையே காற்றிலிருந்து எடுத்து அவர் கையில் கொடுக்க, அவர் புருவங்கள் பின்னிக்கொள்ள விக்ரமைச் சற்றுக் கோபத்துடன் பார்த்துவிட்டு, சடனிடத்தில் அதை வீசி எறிய, 'துபாஷ், இந்தாளை நான் எங்க பார்த்திருக்கேன்?' என்றான் விக்ரம்.

'அவர்தாங்க மதகுரு. இந்தத் தேசத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்த ஆசாமி. ராஜாவை அப்படியே ஆட்டிப் படைக்கிறார்.'

ராஜா, 'விக்ரோம்' என்று உரக்க அழைத்துத் தன் பக்கத்து நாற் காலியைக் காட்டினார். இந்தப் பக்கம் ப்ரீத்தி. அதன் பின் ராஜகுமாரி, பட்டத்து ராணி, சின்ன ராணி மற்றும் சில ராணியா, தோழியா சொல்லமுடியாத பிரஜைகள், ராஜ சபையினர், கலாசாரக் குழுவினர் எல்லோரும் உட்கார அந்த மேஜை போதுமானதாக இருந்தது. சட்டென்று யாவரும் எழுந்திருக்க ஓரத்தில் நான்கைந்து சிறுமியர், 'ஆசலாமியா!' பாடினார்கள். ஒரு மாதிரி அபசுரமாகவும் பிடில் சுருதி போலவும், மிடில் ஈஸ்ட்தனமாக இருந்தது பாட்டு.

'இதாங்க எங்க நாட்டு தேசிய கீதம்.'

'என்ன அர்த்தம்?' என்றாள் ப்ரீத்தி.

'என்னவோ ஒட்டகம் கட்டடம் இருக்குன்னு பாட்டுங்க. அப்படி ஒண்ணும் அம்சமா இல்லை. இந்த நாட்டுப் பயலுகளே அம்சமில்லை. எல்லாம் அடாசு.'

இப்போது தின்பண்டங்கள் கொண்டுவரப்பட்டு ராஜகுடும்பத் துக்கு மட்டும் தட்டுகள் வைக்கப்பட அவற்றில் கொழகொழ வென்று என்னவோ பரிமாறப்பட்டு ராஜகுரு அந்தத் தட்டுகளில் சாஸ்திரத்துக்குத் தன் தண்டத்தை வெளிவிட்டு 'தூ தூ' என்று அவற்றில் துப்பினார்!'

'துபாஷ், என்ன இது?'

'அவர் துப்பினாத்தாங்க சாப்பிடறதெல்லாம் பரிசுத்தமாவுதுன்னு சாஸ்திரங்கள்ள சொல்லியிருக்கு.'

மதகுரு தன் காவலாட்கள் சகிதம் விருந்தை விட்டுச் சென்றார். எல்லாரும் உட்கார சாப்பாடு தொடங்கியது.

ப்ரீத்தி, 'நான் ஒரு வெஜிடேரியன்' என்றான்.

துபாஷ், 'அப்படியா! நாசமாப் போச்சு' என்றான்.

உள்ளே கைவண்டியில் ஒரு பன்றியின் முழு ரூபத்தில் வேகவை ஜோடிக்கப்பட்டு அலட்டுதந்தனமாக விழித்துப் பார்த்துக்கொ ஆடி ஆடிக் கொண்டுவரப்பட்டபோது ப்ரீத்திக்கு குமட்டியது விக்ரமுக்கு. அப்போது வெளியே வேகமான ஏரோப்ளேன் சத் கேட்டது. ஜன்னல் வழியாக வானத்தைப் பார்த்தான்.



## 12

வானத்தில் அந்த வெளிச்சம் தெரிந்தது. நிச்சயம் ஒரு விமானம் தான். இறக்கையோரம் இருந்த பச்சை சிவப்பு விளக்குகளுக்குப் பதில் சொல்வதுபோல மண்டை விளக்கு பளிச் பளிச். சற்று தூரத்தில் விரல் செருகினாற் போலத் தெரிந்த அந்த எலிக் கோவிலின் அருகில் சட்டென்று ஒளிவிளக்கு வரிசை உயிர் பெற்றது. ரன்வே! விக்ரம் விருந்தில் மதகுருவைத் தேடினான். காணவில்லை. விருந்து முடிந்திருந்தது.

'விக்ரோம்!' மகாராஜாவின் குரல் அதட்டலாகக் கேட்க அவர்கள் யாவரும் உற்சாக வட்டமாக அமைத்து நிற்க 'வா வா' என்று ஆர்வமாக அழைத்தார். ஒருவருக்கொருவர் முதுகின் பின் கை கோர்த்துக்கொண்டு ஒரு மானுட வட்டம் அமைக்க, துடிப்பான சங்கீதம் தொடங்க, ராஜாவே கட்டைக் குரலில் பாட்டுப்பாடத் தொடங்க, ராஜகுமாரி மற்றும் சில சலாமியர்கள் என்று ஒவ்வொருவராக முறைவந்து பாடப்பாட அதன் சத்தம் அதிகரிக்க விக்ரமின் முறை வந்தபோது அவனும் பாடியே ஆகவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

ப்ரீத்தி, 'பரவாயில்லை, நான் காதைப் பொத்திக்கிறேன்' என்றாள்.

அவர்கள் பாட்டின் மெட்டு, ஜாவாளியோ போல இருந்தது. அதற்குப் பொருத்தமாக அவனுக்கு ஒரு நாட்டுப் பாடல்தான் தோன்றியது. ராஜகுமாரியைப் பார்த்துக்கொண்டே-

'உந்தனைக் காணவென்று கார்த்திகைக்கு வந்தேனடி. உந்தனைக் கண்டேன். இனி ஊருக்குப் போக மாட்டேன்' என்றான்.

ராஜகுமாரி துபாஷை அழைத்து அதை மொழிபெயர்த்துச் சொல்லச் சொன்னாள். ராஜாவின் உடன் வந்த பெண்களில் ஒருத்தி திடீர் என்று உணர்ச்சிவசப்பட்டுவிட்டவள்,

'காடைக்கூடு கக்கத்திலே கருத்த மச்சான் பக்கத்திலே மாடப் புறாக் குஞ்செடுக்க மய்யலுண்டோ உங்களுக்கு' என்றாள். விக்ரம் ஆச்சரியப்பட்டு 'என்னது துபாஷ். இங்க போய்த் தமிழா' என்றான். பாட்டை மற்றவர்கள் தொடர, அந்தத் தமிழ் ராணி அவனருகே வந்து, 'நான் தமிழ்தாங்க. வெள்ளங்கோயில், என்பெரு ரமாதேவி. துபாஷு சொல்லு.'

துபாஷ், 'இவங்க ஒரு காலத்தில் பட்டத்து ராணிக்குக் கிட்டத்து ராணியா இருந்தாங்க. ராஜ பார்வை மந்தமா இருந்தபோது பட்டிருச்சு. ஒரு செகண்டு மயங்கிப் போயி வெச்சிக்கிட்டாரு.'

'அதுக்கப்புறம் குதிரை லாயத்தில கட்டிட்டாரு என்னை. துபாஷு, ஒரு காலத்தில் எம்புட்டு அழகா இருந்தேன்? என் பின்னாடி ஒரு பொதுக் கூட்டமே அலைஞ்சுக்கிட்டு இருந்தது இல்லையா? சு. உனக்கே எம் பேர்ல ஒரு இது!' என்று திடீரென்று சோகமாகி, 'சீரும் செறப்புமாக் கலைக் குடும்பத்தில பொறந்து கலாசார கோஷ்டியில நடனம் ஆட வந்தேன். அந்தப்புரத்தில் என்னைப் பந்தாடிட்டாரு. ஒரு தமிழ்ப் பொண்ணுக்குக் கற்பு போயிருச்சுன்னா வேற என்னங்க இருக்குது. ஊஹும்! தமிழக அரசின் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்துக்கு கூப்பிட்டாங்க. அப்பவே போயிருக்கணும்.'

'அய்யோ, இந்தம்மா புலம்பலை கேட்டுக்கிட்டு இருந்தா விடிஞ்சுடும்' என்றான் துபாஷ். அவனருகே ராஜகுமாரி வந்து, 'விக்ரோம்! வித்தில் இங்லீஷ்' என்று சலாமி பாஷையில் கீச்சா பூச்சா என்று உரத்த சைகைகளுடன் பேச துபாஷ், 'எனக்கு உன்னுடன் பேசத்தான் ஆசை. ஆனால் பாஷைதான் இல்லை' என்று மொழிபெயர்க்க, விக்ரம், 'பரவாயில்லை. கண்ணே நிறையப் பேசது. அதுவே போதும்னு சொல்லுங்க' என்றான்.

மொழிபெயர்ப்பு மூலம் அந்த வாக்கியம் அவளை அடையும் போது அந்தக் கண்கள் நீச்சல் குளங்கள் போலச் சலசலத்தன. 'ஆக்லோ!' என்றாள் ஆச்சரியத்துடன். ப்ரீத்தி அதே மாதிரி, 'ஆக்லோ' பண்ணி, 'முழியைப் பாரு!' என்றாள். ராஜகுமாரி ஒரு பூவை எடுத்து விக்ரம் மார்புச் சட்டையில் செருக, 'நட்பைச் காட்டுதுங்க. நீங்களும் ஒரு பூவை எடுத்து மார்ல குத்திருங்க.'



'காதலாய்யா?' என்றாள் ப்ரீத்தி.

'காதல் இல்லை. நட்புங்க. காதல்னா வாயாலே மாத்திப்பாங்க. குத்துங்க நீங்க பாட்டுக்கு. உங்களுக்கு மச்சம்' என்றான் துபாஷ்.

விக்ரம் தயக்கத்துடன் ஒரு மலரை எடுத்து அவள் மார்பில் பொருத்தினான். அப்போது 'இனிமாலி' என்று அவள் ராஜாவால் அழைக்கப்பட, 'தோகாக்' என்று சிரித்துவிட்டுப் புறப்பட, 'இனிமாலி! இனிமையான பேரு!' என்றான் விக்ரம்.

'இனிமா கொடுக்கற மாதிரி இருக்கு' என்றாள் ப்ரீத்தி. அவள் முகம் சின்னதாகியிருந்தது.

'துபாஷ், உங்க ஊர்ல சைக்கிள்ள டபிள்ஸ் போகலாமா?'

'கூடாதுங்க. தண்டிப்பாங்க. சவுக்கால ஒரு விறு விறுலாங்க!'

'ராஜ குடும்பத்துப் பெண்களோட வம்பு பண்ணா?' என்றாள் ப்ரீத்தி.

'அதுக்கு இரும்பை பழுக்கக் காச்சி ஆசனத்துவாரத்தில ஏத்திருவாங்க!'

'இரைச்சலாச் சொல்லு. அய்யாவுக்குக் கேக்கறாப்பல!'

விக்ரம் சிரித்து, 'தட்ஸ் நாட் ஃபன்னி. உன் பொறாமையைப் பார்த்துத்தான் சிரிக்கிறேன்!'

'பொறாமையா? எனக்கா! ஹு!' என்றாள். 'த பாருங்க. நீங்க யார்கூட வேணா குலாவுங்க. சைட் அடியுங்க. எனக்கு அக்கறையில்லை. ஆனா வந்த காரியம் என்ன? ராக்கெட்டைத் தேடறது. நீங்க என்ன செய்துகிட்டு இருக்கிங்க. ராஜகுமாரி பாக்கெட்ல ரோஜாப்பூ குத்திகிட்டு இருக்கிங்க. அதை ஞாபகப்படுத்தத்தான்.'

'தாங்ஸ்' என்றான்.

அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் சமயம் அரண்மனையிலிருந்து சிற்சில பர்லாங்குகள் விலகிப் போனால் தென்படும் எலிக்கோயிலில் ஓர் அறையில் தீப்பந்த வெளிச்சம் நடனமிட்டுக் கொண்டிருந்தது.

அதில் சுகிர்தராஜா ஒரு துப்பாக்கியைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் வாயில் சிகரெட் தொங்கியது. சமீபத்தில் பிரயாணம் செய்துவந்தவன் போலத் தோற்றமளித்தான். சற்று தூரத்தில் விளக்குகள் அணைக்கப்பட்டு வெள்ளி விளிம்பாக தெரிந்த பீச்கிராஃப்ட் விமானத்தின் டர்போ கீச்சு கேட்டது. சுகிர்தராஜாவுக்கு இடது கண் சற்றுப் பார்வை மந்தம் போல தெரிந்தது. அவன் அதற்காக அணிந்திருந்த தனிப்பட்ட கண்ணாடி ஒரு பக்கம் தெளிவாகவும் ஒரு பக்கம் கறுப்பாகவும் ஒ அலாதி விநோதத்தை அளித்தது. காத்திருந்தான். அப்போது மதகுரு ராஜாங்கமாக நடந்துவந்தார். உடன் நான்கு முகமூடி காவலர்கள் நீண்ட அங்கியையும் கையில் தண்டத்தையும் தாங்கி வர அவர் வந்த தோரணையை சுகி எந்தவிதச் சலனமுமில்லாமல் பார்த்துக்கொண்டே இருந்தவன் சற்றே தாமதமாகச் சிரித்தான். காவலாளிகளை விலகச் சொல்லிவிட்டு மதகுரு சற்றும் எதிர்பாராத வகையில் ஒரு காரியம் செய்தார். தன் அங்கியை டப்பா கட்டுபோலக் கட்டிக் கொண்டு தரையில் குந்தி உட்கார்ந்து ஒரு பீடியைப் பற்ற வைத்தார். 'அண்ணே! வந்துட்டீங்களா!' என்றா தமிழில்.

'ப்ளேனைப் பார்த்த இல்லை? ஆளைப் பார்த்த இல்லை? என்ன கேள்வி இது முட்டாக்கு!' என்றான். இப்போது அவர்கள் முகச்சாயலில் ஒற்றுமை இருப்பதைக் கவனிக்க முடிந்தது.

'மொட்டை! எப்படி எல்லாம் நடக்குது?' என்றான்.

'எல்லாம் நல்லாத்தான் இருக்குது. ராஜா விசுவாசமாகத்தான் இருக்கான். ஆனா நம்ம வேசத்தைக் கண்டுபிடிச்சுட்டா கொன்னு போட்டுருவான்!'

'அது உன் சாமர்த்தியம். உன்னை ஜோடிச்சு மதகுருவாக்கி ராஜசபையில வெக்கத்தான் முடியும். அதுக்கு மேலே உன் சாமர்த்தியம்தானே? பயப்படாதே! மதத்தை வெச்சுக்கிட்டு திறையிலே ஏமாத்தலாம். ஒரு தேசத்தையே ஏமாத்தலாம்!'

'ஞாபகம் வெச்சுக்க, அடுத்த ராஜா நான்தான். இவங்க தட்டி துப்பித் துப்பி எனக்கு நாக்கு வரண்டு போச்சு.'

'கவலைப்படாதே! நான் வந்தது அதுக்கில்லை. இந்த போட்டோவைப் பாரு. எனக்குத் தகவல் வந்தது. இந்தாளு இங்க வந்திருக்கான்னு.' சுகி விக்ரமின் போட்டோவைக் காட்ட



மதகுரு, 'அட இந்தாளைப் பாத்திருக்கேனில்லை. இங்க வந்திருக்கான். என்னவோ பத்திரிகை நிருபன்னு பேசிக்கிட்டாங்க.'

'என்னது, நம்ம அரண்மனைக்கா?'

'ஆமா. ரொம்பத் துடியா, தங்கமான பையன் அண்ணாச்சி!'

சுகி மதகுருவின் மொட்டை மண்டையில் தட்டி, 'உன் தலை! இவன் யாரு தெரியுமில்லை? நமக்கு நம்பர் ஒன் விரோதி! ராக்கெட்டைத் தேடிக்கிட்டு நம்ம மூக்கடியிலயே வந்துட்டான். தங்கமான பையனாம்! இவன் இந்திய சர்க்கார் ஏஜண்டு. பேர் விக்ரம்!'

சுகிர்தராஜா விக்ரமின் போட்டோவைப் பார்த்துப் பேசினான். 'பையா, இந்தமட்டும் வந்துட்டியா? இருக்கட்டும். எவ்வளவு நாளைக்கு உன் ஆட்டம், பார்த்துரலாம்.'

'அண்ணே, இவனை ஏதாவது செய்யணுமா?'

'ஆமடா, மொட்டைத்தகடா! உங்காளு ரெண்டு பேரைப் பார்த்து, உங்க பாஷையில சொல்லி அனுப்பி, ராத்திரியே இவனைத் தீர்த்துரு. கோழி கூவறதுக்குள்ள பாடி கிடச்சாகணும்.'

மதகுரு கையைத் தட்டி இரண்டு காவலர்கள் வர, 'ஹய்யா அக்! இய்யா அபர்!' என்று சலாமி பாஷையில் தொடர்ச்சியாக ஆணையிடுவதை சுகிர்தராஜா ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். சிரித்துக்கொண்டே, 'நல்ல ட்ரெய்னிங்குடா' உனக்கு! சொக்கலால் சேட் பீடி குடிக்கிற ஆளு மதகுருவா? உனக்கு ஒரு தண்டம். மொட்டைத்தலை! தூத்' என்று அவன் தலையில் தட்ட, 'அண்ணே அவங்களுக்கு எதித்தாப்பல இந்த மாதிரி தலைல தட்டாதிங்க. அதும் இன்னைக்குத்தான் சவரம் பண்ணிக் கிட்டனா, தொட்டாலே எரியுது.'

'பேசிக்கிட்டே இருக்காதே, விக்ரம்... முதல்ல அவனைத் தீர்த்தே ஆகணும். அப்புறம் ராஜாவைக் கவுத்துப்போட்டுட்டு எனக்கே எனக்குன்னு தேசம், சொந்த தேசம் அமைக்கப் போறேன். இங்க! எங்க நம்ம அக்னி புத்திரன்? கோயில்ல பத்திரமா இருக்குதா? வா பார்க்கலாம்.'

# 13

'நம் இந்திய விருந்தினர்களின் ஆரோக்கியத்துக்கு' என்று ராஜா கோப்பையை உயர்த்த அந்தப் பானத்தை மடக்கென்று குடிக்க, விக்ரமும் ப்ரீத்தியும் அதே மாதிரி செய்தது தப்பாகிவிட்டது. ப்ரீத்தி 'லொக் லொக்' என்றும் விக்ரம் 'உற்றார்' என்றும் தொண்டையைச் சரி பண்ண வேண்டியதாகிவிட்டது.

'துபாஷ், என்னய்யா டேஸ்ட்டு இது? இந்த அடி அடிக்குது!' என்றான் விக்ரம்.

துபாஷ், 'இது முந்திரில செஞ்ச பெசல் சாராயங்க. மெல்லக் குடிக்கணும். இல்லாட்டி எல்லாப் பாகங்களும் எந்திருச்சுரும்.'

பணிப்பெண்களின் சரசரப்பும் நடனப் பெண்களின் சலசலப்பும் விநோத சங்கீதத்தின் கலகலப்பும் குடித்த பானத்தின் சுறுசுறுப்பும் ப்ரீத்தியை நிறைய என்னவோ செய்ய, 'யார்றா இழய்' என்று ஆரம்பித்தவள், 'திஸ் இஸ் குட்' என்றாள்.

'சரி சரி' என்று அவள் புஜத்தைப் பிடித்தான்.

'பன்னி தின்னக் கூடாது. தின்னவே கூடாது.'

'ஓக்கே ஓக்கே!'

சற்று நேரத்தில் தில்ருபாக்கள் சுத்திழந்து, திரைச் சீலைகள் கலைந்து மிச்சம் மீதாரிகள் எங்கும் இறைந்திருக்க, அவரவர் அங்கங்கே படுத்திருக்க, திராட்சை ரசம் ஒடியதை ஒரு சௌனையர் வகை பூனை வந்து நக்க, பக்கத்தில் இருந்தவர்களைப் பார்த்தான்



விக்ரம். எல்லோரும் ஒரு விதமான சுகப்தி அவஸ்தையில் புதுக்கவிதை போல் புரியாமல் படுத்திருந்தார்கள். ராஜா எப்போதோ யாரோ அன்றைய தினத்து ராணியுடன் படுக்கப் போய்விட ராஜகுமாரியையும் காணோம். 'கம் ப்ரீத்தி.'

நீண்ட சலவைக்கல் காரிடாரில் விக்ரம் நடப்பது எதிரொலித்தது. அவனை சற்று பிறழும்படியாக மண்டைக்குள் முந்திரி பானம் வற்புறுத்தியது. ப்ரீத்தி ஒரு கையில் செருப்பும் மற்றொரு கையால் விக்ரமைத் தொட்டுக்கொண்டும் நடந்தாள். 'அவனோட என்ன பேச்சு உனக்கு? நான் காலைல ராவுக்கு போன் பண்ணி சொல்லவே போறேன். நீ செய்யறது நல்லால்லைன்னு.'

'சரி!'

'கண்றாவி.'

விக்ரம் சும்மா இருக்க, 'எது கண்றாவின்னு கேளு!'

'எது கண்றாவி?'

'நீயும் அவளும் பார்த்துக்கிட்ட பெட்ரூம் பார்வை! எனக்குத் தெரியாதா?'

'ப்ரீத், யு ஆர் ஜெலஸ்.'

'நான் ஏன் ஜெலஸ்? எனக்கு எவ்வளவோ பாய் ஃப்ரெண்டு.'

'ஓக்கே! ஓக்கே! சொல்லியாச்சு.'

'அவ கண்ணு, என்ன சொன்னே, நீச்சல் குளங்களா? டைவ் அடியேன்!'

அவள் புஜத்தை விக்ரம் பிடிக்க முற்பட, 'டோண்ட் டச் மி' என்று சீறினாள். விக்ரம் சிரித்தான்.

'எனக்கு உன் உதவியோ சகாயமோ தேவையில்லை.'

'உதவி சகாயம் ரெண்டும் ஒண்ணுதான்.'

'நான் ரூமுக்குப் போறேன்' என்று விறுவிறு என்று முன்னால் நடந்தாள்.

விக்ரம் புன்னகைத்து மெதுவாகத்தான் நடந்தான். பார்ட்டி ஒரு கிறக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் சுவாதீனமாக இருந்தான். போதையில்லை. லேசாக விசில் அடித்துக்கொண்டே வர, ஒரு மூலை திரும்புமுன் ப்ரீத்தி படபடவென்று திரும்பி ஓடிவருவதைப் பார்த்தான்.

'என்ன ஆச்சு? தைரியமா போனியே? ரூம்ல எலியா?'

'இல்லை. புலி.'

'புலியா? எங்க?'

'எதிர்த்தாப்பல வருது.'

'நான்சென்ஸ்! நீ நிச்சயமா...'

விக்ரம் பாதியில் நிறுத்திவிட்டான். எதிரே ஒரு புலி. சிறுத்தைப் புலி. அவர்களை உற்றுப் பார்த்துக்கொண்டே வந்தது.

வாலை இங்குமங்கும் லேசாகச் சுழற்றிக்கொண்டே அவ்வப்போது வாயைத் திறந்து கோபக் கூர்மைப் பற்களைக் காட்டிக் கொண்டு...

'விக்ரம், ப்ளீஸ் லேவ் மி!'

விக்ரம் அப்படியொன்றும் புலிகளுடன் சண்டை போடும் அசகாய சூரனல்ல. அந்தப் புலி அவசரமே இல்லாமல் அவர்களை நோக்கி நடந்தபடி, நிமிர்ந்து, 'நீ யார்?' என்பது போல் பார்த்தது.

'கடிக்குமா?' என்றாள்.

'கேட்டுச் சொல்றேன். ப்ரீத்தி, ஐ நீட் மை கன்.'

'கன் கொண்டுவரலையா? டின்னருக்கு எடுத்து வரலையா?'

'இல்லை.' சுற்றுமுற்றும் பார்த்தான். இருட்டாக இருந்தது. பால்கனி ஏறிக் குதித்துவிடலாம். ஆனால் ப்ரீத்தியை என்ன செய்வது? யார் புலியை ஏவி விட்டிருப்பார்கள்? யார் எதிரி? சுகிர்தராஜாவுக்குத் தெரிந்திருக்குமா? இப்படி அரண்மனையில் ஊடாட விடுவார்களா புலியை? இல்லை. ராத்திரி ரோந்தா? இந்த நாட்டில் எதுவும் சாத்தியம். தட்டில் மதகுருவின் எச்சிலை



வாங்கிச் சாப்பிடும் ராஜா இருக்கும் ராஜ்ஜியத்தில், புலி, சிங்கம், ஏன் மேஜை நாற்காலி நடந்து வந்தால்கூட ஆச்சரியப்படக் கூடாது.

புலி இப்போது நின்று அவர்களைக் கண்ணோடு கண் பார்த்தது. விக்ரமும் நின்றுவிட்டான். பாயப் போகிறதா? சுவரில் சட்டி இருக்கிறதா? 'ப்ரீத்தி.'

'என்னைக் கூப்பிடாதே. நான் செத்துப் போயிட்டேன்.'

புலி அவர்கள் மிக அருகே நெருங்க, 'ப்ரீத்தி த பாரு' என்று விக்ரம் சொல்ல ஆரம்பிக்க, அப்போது எதிர்பாராதது நிகழ்ந்தது.

ஓர் அறையிலிருந்து 'டூட்டு! டூட்டு!' என்று சப்தம் கேட்க, ராஜகுமாரி வெளிப்பட்டாள். விக்ரம் அவள் மேல் பாய்ந்து, 'பி கேர்ஃபுல், டைகர் டைகர்' என்றான்.

அவள் திரும்பிப் பார்த்துக் கொஞ்சலாக, 'டூட்டு! அக் அக்' என்றாள்.

'அக்' என்றால் வா போலும்! அந்தப் புலி ஏதோ குச்சுநாய் போல் குழைந்து கீழே படுத்துப் புரண்டு ராஜகுமாரி நீட்டிய கையை நக்கிக் கொடுக்க, 'சரிதான்! புலி வளக்கிறாளா?'

'அப்படித்தான் தோணுது. நல்ல வேளை. கன்னு கொண்டாரலை. இல்லைன்னா சுட்டிருப்பேன்.'

'விக்ரோம்! டூட்டு!'

'ஓ எஸ்! டூட்டு!'

'டூட்டு இயாஹாத்!' டூட்டு ஷேக் ஹாண்ட்ஸ"க்குக் கை நீட்ட, விக்ரமுக்கு அதன் நகங்களைப் பற்ற உத்திரவாதம் இல்லாததால் 'நைஸ்' என்று சொல்லிப் பைக்குள் கைவிட்டுக்கொண்டான்.

'பீத்தி?'

'நாட் பீத்தி! ப்ரீத்தி!'

'நைஸ் நைஸ்' என்று ராஜகுமாரி சிரித்தாள்.

'குட் நைட், நாங்கள் தூங்கப் போகணும். புலியைத் தள்ளி இருக்கச் சொன்னா, வழிவிடச் சொன்னா போகலாம்.'

ராஜகுமாரி புரியவில்லை என்று கையை விரிக்க, உள்ளேயிருந்து ஓர் அதட்டல், ராஜாவின் குரல் போல் ஒலிக்க, ராஜகுமாரி விக்ரமைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு நிட்டுவின் காலைப் பற்றிக்கொண்டு உள்ளே சென்றாள்.

'ஆம்பளை பாப்பாத்தி!' விக்ரம் அவள் சென்ற திசையில் திரைச் சீலை சலசலப்பதையும் ராஜகுமாரி அவ்வப்போது தெரிவதையும், ஒருமுறை தூரத்திலிருந்து திரும்பி ஒரு முத்தத்தைப் பறக்க விடுவதையும் கவனித்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அறையில் ப்ரீத்தி கடுகடுவென்று இருந்தாள். சுவரில் பதித்திருந்த கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக்கொண்டாள். 'அவனுக்குப் புலி தெரியும்னா எனக்கு கம்ப்யூட்டர் தெரியும்.'

'யார் இல்லைன்னா இப்ப?'

'என்னவோ அப்படியே லைலா மஜ்னு பண்றியே?'

'ஐ டோன்ட் நோ வாட் யூ மீன்!'

'மிஸ்டர் விக்ரம், உங்க மாதிரி ஆண் பிள்ளைங்களை எல்லாம் வசப்படுத்தறது ரொம்பச் சுலபம்.'

'அப்படியா?'

'நீ போய் உன் படுக்கைல படுத்துக்க, இன்னும் பத்து நிமிஷத்தில என் ரூமுக்கு வரலை, எம்பேரு ப்ரீத்தியில்லை.'

'எதுக்கு வரணும்?'

'என்னைத் தேடிக்கிட்டு!' ப்ரீத்தி விக்ரமின் முன்னால் தன் சட்டையை ஒரு விதமாகக் காட்டியும் காட்டாததுமாகக் கழற்றி நைட் கவுனுக்கு மாற்றிக்கொண்டாள். சற்று நேரம் ப்ரீத்தியின் உள்ளாடைகள் அவனுக்குத் தெரியத்தான் செய்தன.

'நோ சான்ஸ்' என்றான். 'நான் என் படுக்கைக்குப் போனப்புறம் அஞ்சு நிமிஷத்தில தூங்கிடுவேன்.'

'விக்ரம், இந்தப் பட்டனைப் போட்டுவிடுங்க!'

அவளுடைய குழந்தைத்தனமான கவர்ச்சி முயற்சிகள் விக்ரமுக்குச் சிரிப்பாகத்தான் இருந்தன. அவளை உள் பனியனுடைய



சற்றே துடிப்பு இருந்தது. அவள் கேட்ட பட்டனைப் போட்டு விட்டு, ஈர உதடுகளுடன் குட்நைட் சொல்வதை ரசித்துவிட்டுத் தன் படுக்கைக்கு வந்து படுத்தபோது விக்ரம் மணியைப் பார்த்தான். நம்ப முடியவில்லை. வழக்கம்போல் படுக்கச் செல்லுமுன் தன் உடைமைகளை எடுத்துச் சோதிக்கத் தொடங்கியபோது சற்றும் எதிர்பாராமல் அவன் கழுத்தின் பின் ஒரு நைலான் கயிறு செலுத்தப்பட்டு இறுக்கப்பட்டது.

# 14

விக்ரம் இன்னும் கொஞ்சம் தயங்கியிருந்தால் அந்த கதை யிலேயே அவன் உயிர் பிரிந்து இந்த கதைக்கு முற்று போட்டிருக்கலாம். சற்றே சற்றுத்தான் அவனுக்கு இடைவெ கிடைத்தது. அது போதும். குபுக் என்று பின்னால் இருந்தவனை ஒரு மாதிரி கவிழ்த்தான். அவன் விசிறிக்கொண்டு முன்பக்க தொம் என்று விழ, விக்ரமைப் போல் ஒன்றரைப் ப இருந்தான். அடிபட்ட சிறுத்தைபோல் எழுந்து பாய்ந்தவ ஏதாவது எலும்பு உடைந்திருக்க வேண்டும், அது பொருட்ட இல்லை. மறுபடி விக்ரமின்மேல் பாய்ந்து கழுத்தைப் பிடித்தான் விக்ரம் அவனை முழங்காலால் வழக்கம்போல் முக்கிய பாகத்தில் உதைத்துப் பார்த்தான். அவனுக்கு அதெல்லாம் இரும்பால் செய்ததுபோல அசைவே இல்லை. லோலா ப்ளெக்லனில் ஒரு போடு! ம்ஹூம்! எதிரடி பொறி கலங்கியது 'ப்ரீத்தி! ப்ரீத்தி!' என்று கூப்பிட்டான்.

அந்தப் பக்கம் அடுத்த அறை ப்ரீத்தி, அது ஏதோ காதல் கலந் கூப்பிடல் என்று நினைத்து, 'ம், தெரியும் நீ வருவேன்னு வந்துருவேன்னு தெரியும். லே லாரி. அப்பத்தான் கதவை திறப்பேன்!'

'ப்ரீத்தி, ஹெக்!'

'ஹெக்குமில்லை, பக்குமில்லை! சரியாச் சொல்லு' என்றாள்.

விக்ரம் கழுத்து மறுபடி நெறிக்கப்பட்டு ம்ர்ர்ர் என்று உறுமலுடன் மூச்சுத் திணறினான்.



ரி வெக்கமில்லை!' என்றாள் கதவைத் திறக்காமல்.

மறுபடி அவனைப் பிடித்து தலையைக் கைக்கெட்டின தொளைக்குள் செலுத்தி, தோளை நெம்புகோலாக்கி மடேர்!

எதிர் முதன் முதல், 'ஹம்மா!' என்றான்.

கிடைத்த சந்தில் விக்ரம் மிதி மிதி மிதி...

சற்றுநேரத்தில் அந்த அவன் இங்கே அங்கே ரத்தம் கசியப் படுத்துப் புரண்டு கிழித்த நார்போலத் துவள விக்ரம் முதன் முதலாகப் பேச்சு பெற்று, 'ப்ரீத்தி! ஓப்பன் தி டோர்!' என்றான்.

ப்ரீத்தி மெல்லத் திறந்து, 'எனக்குத் தெரியும் நீ வருவேன்னு' என்றாள். 'காட்! என்னது உடம்பெல்லாம் ரத்தம்?'

விக்ரம் கீழே காட்ட மறுபடி, 'ஓ மை காட்!' என்றாள்.

கீழே அவன் காட்டெருமை போலப் படுத்திருந்தான். 'ஹி ட்ரைட் டு கில் மி' என்றான் விக்ரம்.

'அய்யோ! அதான் ஒரு மாதிரி சப்தமா?'

'யா!' என்று வாஷ்பேசினுக்குப் போய் உதடுகளைத் துடைத்துக் கொண்டு முகத்தை வெந்நீரில் அலம்பிக்கொண்டு, கிடந்தவனை மூட்டை போல ஆண்டு, மளமளவென்று காரிடாரில் சற்றுத் தூரம் இழுத்துச் சென்று முகத்தில் தண்ணீர் அடித்தான். திரும்ப உள்ளே வந்து கதவைச் சாத்திக்கொண்டான். ப்ரீத்தி மார்பில் கை வைத்துப் படபடப்புடன் காத்திருந்தாள். 'விக்ரம், எனக்குப் பயமாயிருக்கு!'

'இனிமே யாரும் வரமாட்டான்.'

'நீங்க இந்த ரூம்லேயே படுத்துக்கங்க. எனக்குத் துணையா தூங்கிருங்க.'

'ஸாரி.'

'அப்ப நான் உங்க ரூமுக்கு வரட்டா?'

'நான் அங்க போகலை.' விக்ரம் கறுப்பு அங்கிபோல ஓவராலை அணிந்து அதன் புஜப் பகுதிகளில் தைத்திருந்த பைகளைத்

தொட்டுப் பார்த்துக்கொண்டு ஒரு ஜிப்பை இழுத்துக்கொண்டு
இப்போது ஒரு ராக்கொள்ளைக்காரன் போல ஆயத்தமானான்.

'எங்க கிளம்பிட்ட?'

'கோயில்!'

'என்ன கோயில்? இந்த ராத்திரி வேளையையா! விக்ரம், என்னை
விட்டுட்டுப் போகா...'

அவள் சொல்லி முடிப்பதற்குள் விக்ரம் பால்கனி பக்கம் திறந்த
சன்னல் வழியாக நிலா வெளிச்சத்தில் வெளியே குதித்து
மறைந்துவிட்டான். ப்ரீத்தி படபடப்புடன் இருக்கிற சன்னல்
களை எல்லாம் சாத்திக்கொண்டு, இருக்கிற விளக்குகளை
எல்லாம் போட்டுக்கொண்டு படுக்கை விளிம்பில் உட்கார்ந்தாள்.

விக்ரம் வேகமாக நடந்தான். ஆனால் அவன் பாதம் பதிவது
கேட்கவே இல்லை. நிலா வெளிச்சம் மாளிகைகளை விதவித
வடிவ நிழல்களாக்கியிருக்க, அதன் நீலம் கலந்த இருட்டிலேயே
சென்றான். அதி தூரத்தில் அந்தக் கோயிலின் விநோத கோபுரம்
தனியாக விங்கின கறுப்பு விரல்போலத் தெரிந்தது. அதன்
கண்களில் ஒன்று மட்டும் விழித்திருந்தது. இங்கே எங்கோதான்
விமானம் வந்திறங்கியது. கோயிலுக்கும் விமானத்துக்கும் என்ன
சம்பந்தம்? நிச்சயம் விமானம்தான் அது. ரன்வே விளக்குகள்
கூடத் தெரிந்தன.

கல்வா மந்திர் என்று பெயர் கொண்ட ராஜவம்சக் கோயிலில்
சாதாரணர்கள் நுழையக்கூடாது. மீறினால் மரணதண்டனை. ஏன்
இப்படி? என்ன ரகசியம் இது? என்ன நம்பிக்கை இது? ஒரு
வேளை... படிப்படியாக நிலாக் கோலம் போட்ட முற்றத்தில்
விக்ரம் நடந்தான். கோயிலின் படிகள் மிகச் சுத்தமாக இருக்க,
மெல்ல, படி ஒன்று, படி இரண்டாக இருள் நிழலில் சென்று,
அதனருகில் வரும்போது விநோதமான குரல்கள் கேட்டன.

மனிதர்களின் குரல் அல்ல! எங்கே கேட்டிருக்கிறேன் இந்தக்
குரலை? ஏதோ கீச்சுக் குரல்காரர்களின் மாநில மாநாடு போல!

விக்ரம் அந்தக் கோயிலின் முன் வாசலை அடைந்தபோது மிகப்
பெரிய கதவு மூடியிருந்தது. அதைத் தட்டிப் பார்த்தான்.
ம்ஹூம். ராத்திரிக்குள் இவ்வளவு பெரிய கதவைத் திறக்க முடி
யாது. வெடி வைக்கலாமா என்று யோசித்தான். பார்க்கலாம்.



காரிடாரில் நடந்தான். ஒரு
தேவைப்பட்டால் பக்கவாட்டில் காரிடாரில் நடந்தான். ஒரு
வகை இருள் திறந்திருந்ததுபோலத் தெரிய உள்ளே சென்றான்.

உள்ளே கால் வைத்த உடனே காலில் ஒரு சுரீர். கீச்சுக் கீச்சு என்று
ஆயிரம் கீச்சுகள் காலடியில் பிண்டம் பிண்டமாக என்னவோ!
விக்ரம் தன் முழங்கையருகில் இருந்த டார்ச் அடித்துப் பார்த்து,
'ஓ மை காட்!' திகைத்தான்.

ஏழெட்டு நூற்றுக்கணக்கான எலிகள்! வெள்ளெலிகள், சாம்பல்
எலிகள், கறுத்த சிறுத்த பெருத்த கண்ணாடிக் கண் எலிகள்!
பரபரவென்று இங்கும் அங்கும் புருபுருக்கும் எலிகள்!

எலியோ எலிகள்! சற்றே நேரத்தில் அவன் மேனியெங்கும்
எலிகள்! கண்களில், புருவத்தில், கையில் உதற உதற எலிகள்!
விக்ரம் அருவருப்பில் மயிர்க்கால்கள் அத்தனையும் 90 டிகிரியில்
நிற்க எலி மூத்திரப் புழுக்கை நாற்றம் சூழ, எம்பிக் குதித்து
முற்றத்தில் ஓடி அந்த எலிகள் விசுக் விசுக்கென்று அவன் பின்னே
ஓடிவர, கீச்சுக் கீச்சுப் பள்ளிக்கூடம் போல சத்தம் கேட்டு மனிதக்
காலடிகள் நெருங்கிவர, விக்ரம் எங்கே எப்படி எதற்குச் செல்
கிறோம் என்றில்லாமல் படபடவென்று நடந்தான். அந்த எலி
வராந்தாவைக் கடந்துவிட்டான். இப்போது அவை அவனைத்
தொடரவில்லை. வியர்வை ஊற்றியது. லேசான பேச்சுக் குரல்
கேட்டது. ஒரு பகுதியில் அறையில் தீப்பந்தம் துடிக்கும் வெளிச்சத்
தில் ட்ரெல்லிஸ் சன்னல் தெரிந்தது. சுகிர்தராஜா ஒரு கதவை
மூடிவிட்டு வெளியே வர, மதகுருவையும் பார்த்தான்.

'இங்க இருக்கியா நீ' என்று எண்ணிக்கொண்டான்.

'இன்னேரம் தீத்துருப்பான் அண்ணே.'

'எனக்கென்னவோ நம்பிக்கையில்லை. அவன் பொணத்தைப்
பார்க்கறவரைக்கும்.'

'அப்படி தப்பிச்சாலும் இங்க இருக்கிறது தெரிஞ்சுக்கவே
முடியாது. யாரும் உள்ளேயே வர முடியாது.'

'அப்படித்தான் நினைச்சுக்கிட்டு இருக்கோம். எனக்கென்னவோ
பட்சி சொல்லுது. அவன் நம்மைத் தேடிக்கிட்டு வர்றான்னு.
குறுகுறுங்குது! விக்ரம் இங்க எங்கயோ இருக்கான்.'

'இம்பாஸிபிள்.'

'இங்கிலீஷ் பேசாதே! நான் வர்றேன் மொட்டை. வெள்ளிக்கிழமை கழிச்சுத் திரும்பி வர்றேன். அதுக்குள்ளே இவனைத் தீர்த்து வெச்சி. நாலு நாள் டயம் இருக்குது.'

'லைட்டைப் போடுரா!'

'இப்போ எங்கே போறப்பலா?'

'பாகிஸ்தான், சரான் ராக்கெட்டு சும்மா மசால் வடை மாதிரி பறபறன்னு வித்துப் போகப் போவுது.'

கதிர்தாஜர் வெளியே செல்கையில் குரு திரும்பவும் விறைப்பாகி ராஜநடையோடு அங்கியைத் தோள்மேல் எறிந்து கொண்டு கூடச் செல்ல, 'இதுக்கு ஒண்ணும் கொறைவில்லை' என்று கதிர்தாஜாவின் குரல் கேட்டது.

விக்ரம் இப்போது அந்த அறையின் தனிமையில் நுழைந்தான். காட்டமாக ஊதுவத்தி வாசனைத் திரவியங்கள் நறுமணம் அடித்தன. ஒரு வாசலைக் கடந்ததும் உள்ளே சன்னதிபோல பிரும்மாண்டமாக இருந்தது. அதன் நட்ட நடுவே மழுப்பலாக ஒரு விக்கிரகம்போல இருக்க, அதனருகில் பவ்யமாகச் சென்றான். தங்க கலரில் குட்டையாக வேலியின் நடுவே சலவைக்கல் பதித்த உள்வட்டத்தில் வீற்றிருந்தது சாமியாவின் ராஜவம்சத்தின் குலதெய்வப் பதுமை. அதைச் சுற்றிலும் வந்தான். கண்போல இருந்த பகுதியில் ரத்தினம் மின்னியது. சிரிப்புபோல் இருந்த வைரப் பற்கள் ஒளிர்ந்தன. அதன் சுத்தாந்தமான கலையழகை வியந்து சுற்றி வந்தான். ஒரு சந்தர்ப்பத்தில் தன் பின் நிழலாடியதோ என்று தோன்றி, சட்டென்று திரும்பிப் பார்க்கையில் அவனே பயந்துவிட்டான். மிக மிக அருகே ஒரு முகம்! மதகுருவின் காவலர்களில் ஒருவனின் முகமூடி அணிந்த முகம்!

'ஹர்ர்ர்' என்று அவன் சட்டியால் விக்ரமின் வயிற்றின் மத்தியில் குத்துவதற்கு ஒரு மில்லி செகண்டு முன்னே அதை வாங்கிச் சுழற்றிச் சலவைக்கல்லில் அவனைச் சறுக்கியெறிந்தான். எழுந்து கிட்டே வந்தவனைத் தாடையில் எட்டி உதைக்க, அவன் பல் எகிறிப் போய்க் குப்புற விழுந்தான். எழுந்திருக்கவில்லை. விக்ரம் கீழே விழுந்த ரப்பர் செருப்பைத் தேடி எடுத்துச் சற்று நேரம் கேட்டான். ஆளரவமில்லை. இப்போது மூர்த்தியின் அருகே சென்று ஏதாவது விசை அல்லது குமிழ் தென்படுகிறதா என்று தேடினான்.



மூக்கின் மத்தியில் பிளாஸ்டிக் கேபிள் தெரிந்தது. அதை உருவி, அதன் மூலத்தைத் தேடி அலைந்ததில் ஒரு பட்டன் போல சமாசாரம் தென்பட, அதைத் திருகியதில் மூர்த்திக்குப் பின்னால் ஒரு தரைமட்டக் கதவு மௌனமாகத் திறந்துகொண்டது. அப்படியா செய்தி என்று அதனருகே சென்று பார்த்தான். கீழே படிகள் சென்றன. படிகளின் முடிவில் அண்டர்கிரவுண்டு சைலோ போல ஆழமாக இருந்தது. அதன் மத்தியில் அக்னி புத்திரன் சம்பிரமமாக, பத்திரமாக உட்கார்ந்திருந்தது.

விக்ரம் லேசாக விசிலடித்தான்.

முதல் படியில் கால் வைக்க முற்பட்டபோது, பத்துப் பதினைந்து காலடி ஓசைகள் கேட்க, விக்ரம் சட்டென்று எழுந்து குறுக்கே ஓடினான். முதல் வாசலில், இரண்டாம் வாசலில், கடைசி வாசலில் எங்கும் மதகுருவின் காவலர்கள் ஆளுக்கு ஒரு முகமூடி. அவனைச் சுற்றி ஓர் சட்டி முகாம்!

விக்ரம் நிதானமாகத் தன் கடிகாரத்துக்குச் சாவி கொடுத்துக் கொண்டான்.

# 15

தன்னைச் சூழ்ந்துள்ள காவலர்களை விக்ரம் நிதானமாக மதி[ப்]பிட்டான். நெருப்பு வெளிச்சத்தில் அவர்கள் வெள்ளை முகமூ[டி]களில் மயான மனிதர்கள் போலத் தோன்றினர். அந்த வட்ட[ம்] அவன்மேல் கவிய, விக்ரம் தரையின் சலவைக்கல் வழு[வழுப்]பைப் பயன்படுத்திக்கொண்டு எதிர்பாராத கணத்தி[ல்] விழுந்து, சரிந்து, ஒருவன் காலைக் கப்பரையாகக் கிழித்து[க்] கிடைத்த இடைவெளி வெளிவந்து ஓடினான்.

சுவரோர விளிம்பில் திரும்பியதும் பிரேக் போட்டாற்போ[ல்] நின்றான். கவனித்தான் சுவரில் ஆணி அடித்துப் பொருத்தி[ய] வில்-அம்பு அவன் கண்ணில் பட்டது. துரத்தி வந்தவர்க[ள்] பால்கனி வழியாகத் தப்பியிருக்கலாம் என்று தப்பாக யூகித்[து] அந்தப்புறம் ஓட, விக்ரம் ஒரே ஒரு பாராக்காரனை மட்டும் கடக்[க] வேண்டியிருந்தது.

'ட்வ்ய்ங்!'

திரும்பின காவலன் திறந்த வாயில் அம்பு பாய அப்படியே முன்பக்கம் சரிந்தான்.

இதற்குள் பால்கனி கோஷ்டி திரும்பிவர விக்ரம் ஒரு சன்னல் கதவைத் திறந்து சஜ்ஜாவில் குதித்து, ஷாமியானாவில் குதித்து, தெருவில் குதித்து ஓடினான்.

நிலவொளி வேஸ்ட்டாக தெருக்களை வெள்ளியில் நனைத்துக் கொண்டிருந்தது. மதில் சுவர்களின் நிழலில் கறுப்பு அங்கியில்



விக்ரம் ஓடியது ஒரு தேர்ந்த பூனைக்குக்கூடத் தெரிந்திருக்காது. காவலர்கள் காலடிகள் கல் பதித்த சாலைகளில் ஓலமிட, விக்ரம் ஒளிந்திருந்த இடத்தின் அருகேயே நின்று அங்குமிங்கும் தேடியவனின் குறக்களியை நெருக்கலாமா அல்லது கிட்டத் தெரியும் கிட்டி வாசலில் நுழையலாமா என யோசித்தான். பின்னதைத் தீர்மானித்தான்.

ஏன் எதற்கு எப்படி என்று கவலைப்படாமல் சரசரவென்று நடந்தான். சலசலவென்றன செடி கொடிகள். சரளையில் கால்கள் பதிந்து 'நரக் நரக்' என்றன. புதுசாக வாசனை வீசி, தில்ருபா போல ஒரு சங்கீதம் கேட்டது. மற்றொரு கதவுவரை கொண்டு சென்றது. லே... சாகத் திறந்து சற்றே பார்த்ததில் தளுக் தளுக் சப்தமும் களுக் களுக் சப்தமும் கேட்டது. விக்ரம் நூலிழையாக மூச்சுவிட்டான். வெளிச்சம் பழகினதும் கண்கள் அலைந்தன. வீட்டுக்குள் இவ்வளவு பெரிய நீச்சல் குளம்?

அதன் கரையில் வீற்றிருந்த நீரை அளைந்த பெண்களின் சிரிப்புத் தான் களுக் களுக். அவர்களது வெண்மையான கால்கள் நீரில் நனைந்தபோது தளுக் தளுக்.

நீச்சல் குளத்தின் நடு செண்ட்டரில் ராஜகுமாரி ஓய்வு நேரக் கவிதைபோல மிக மெள்ள அசைந்துகொண்டிருந்தாள். நீர்ப்பரப்புக்கு அடியில் தெரிந்த அவள் உடல் அடையாளங்கள் விக்ரமுக்குக் குழப்பமாக இருந்தன. அவ்வப்போது லேசாக மேலே மிதந்து, மார்பகங்கள் சாயல் காட்டின. விக்ரம் இப்போது ஒரு திரைக்குப்பின் மறைந்திருந்தான். மூக்கு நுனியைத் துடைத்துக்கொண்டு சாத்தியக் கூறுகளை யோசித்தான்.

கடமை நியான் எழுத்துக்களில் அழைத்தாலும் சபலம் என்கிற சின்ன மணியோசைக்குத் தயங்கினான்.

ராஜகுமாரி இப்போது நீச்சலை விட்டு வெளியேவரும் ஆயத்தங்களுடன் கரை ஓரத்துக்கு வந்துவிட, அவள் நீரிலிருந்து மேலே வருமுன் பாழாய்ப்போன பெண்கள் டவல் திரை அமைத்து அணைத்து மூடி அழைத்துச் சென்றார்கள்.

விக்ரம் கண் கொட்டாமல் பார்த்திருந்தவன் இப்போதுதான் இமைத்தான். மூச்சு விடாமல் காத்திருந்தவன் இப்போதுதான்

லேசாக புன் என்றான். எப்படியும் அவர்கள் விலகும்வரை நகர முடியாது.

கஸ்தூரி அத்தர்கள் பூசிக் கூந்தல் உலரப் புகையடித்து... எத்தனை நேரம்!

பெண்கள் அனைவரையும் போகச் சொல்லிவிட்டுக் கதவைச் சாத்திவிட்டு ராஜகுமாரி விக்ரம் மறைந்திருந்த திரையை நோக்கித் தீர்மானமாக வந்தாள்.

விக்ரம் சிலைபோல் நிற்பது எவ்வளவு கடினம் என உணர்ந்தான்.

சரேல் என்று திரையை விலக்கிக் கலகலவென்று சிரித்து, 'காச்சு' என்றாள்.

'ஸாரி!' விக்ரம் சற்று அசட்டுத்தனமாக வெளி வந்தான். 'துமானி சுப்பா பாலுமா?' என்று அவனைக் கைப் பிடித்து இழுக்க...

'ஸாரி?'

'துமானி...' நீ என்ற அர்த்தத்தில் அபிநயித்தாள்.

'சுப்பா!' திரையில் மறைந்து காட்டினாள்.

'பாலுமா.'

'தெரியும்! ஓ நான் நான் மறைஞ்சிருந்தது தெரியுமா? துமானி வெரி ப்யூட்டிஃபுல்!'

'அய்?'

'ப்யூட்டிஃபுல்! ப்ரெட்டி!...' முகத்தைச் சுற்றி வட்டம் போட்டு பரதநாட்டிய அபிநயத்தில் 'அழகு' என்றான்.

அவள் 'இரு' என்று சொல்லி விலகி மறுபடி அறைக்கு வெளியே சென்று சற்று நேரத்தில் தூக்கம் நிறைந்த கண்களுடன் துபாஷை அழைத்து வந்தாள்.

'என்னங்க, அந்தப்புரத்துக்கு அதும் சும்மிங் பூலுக்கு வந்துட்டீங்க. முன்னேற்றம்தான்!'



ராஜகுமாரி அவனிடத்தில் மொ.பெ. மூலம் 'அவர் மறைந்திருந்ததை அப்போதே பார்த்தேன் என்று சொல்.'

'பார்த்து ஏன் பேசாமல் இருந்தாளாம்?'

'ஏனோ? அவன் என் உடன் வந்து தூக்கம் வரும்வரை இனிய கதைகள் பேசுவாரா?'

'பாஷை தெரியாதே.'

'சில கதைகளுக்கு பாஷை தேவையில்லை.'

'நான் அவ்விதக் கதைகள் சொல்ல விரும்பவில்லை.'

'துபாஷை வாசலில் வைத்துக்கொள்ளலாம்... என்னங்க நீங்க நடுராத்திரியில இந்த எழவெல்லாம் மொழி பெயர்த்துக்கிட்டு! அய்யா நியூஸ்பேப்பரு! நீ செய்யப் போறது ராஜகுற்றம். அப்புறம் தண்டனை என்ன தெரியுமா இந்த நாட்டுல? இளனி மாதிரி தலையைச் சீவிருவாங்க...'

ராஜகுமாரி விக்ரமை கைப்பிடித்து அழைத்துச் செல்ல துபாஷ் பின்னால் நடந்துகொண்டே, 'அரச பரம்பரை அரச பரம்பரையைத்தான் கல்யாணம் கட்டிக்கணும். இந்தம்மா செய்யறது படு குற்றம்.'

'அப்படியா. அதிலதான் படு த்ரில்லு! துபாஷ், நீ போய் இதெல்லாம் சொல்லுவியா?' என்று அவன் மோவாயைப் பிடித்தான். 'சொல்லுவியா?'

'இல்லையே! எனக்கு மோவாக்கட்டை வேணுமே! சொல்ல மாட்டேனே.'

'அப்ப வெளியே நில்லு. தேவைப்பட்டாக் கூவறோம். மொழி பெயரு!'

'தாராளமா! கைல ஒரு விளக்கையும் குடுத்துட்டுப் போயிருங்க.'

படுக்கை அறையின் விட்டத்தின் வளையம் கட்டி அங்கிருந்து தொங்கிய சன்னத் திரையை விலக்கினால் ராஜமஞ்சம். வட்டப் படுக்கை. ராஜகுமாரி அதில் உட்கார்ந்து 'ஆஜா' என்றாள்.

துபாஷ் வெளியேயிருந்து, 'வாங்க! வாங்க!' என்றான். விக்ரம் அவளருகே நெருங்கி ஆள்காட்டி விரலால் அவள் தாடையைத் தொட்டு விரலை மூக்கிலும் நெற்றியிலும் ஓட்டி மெல்லக் கீழே வந்து கழுத்தின் முடிச்சை விடுவித்ததும் தோளிலிருந்து நீல உடை சரிந்து விழுந்தது. அவள் மேனியைப் பார்க்கவிடாமல் அவனை அப்படியே தன்பால் சரித்துக்கொண்டு 'விக்ரம்!' என்றாள்.

'மதகுருவை நம்பாதே!'

துபாஷ் மொழி பெயர்க்க, 'அதெல்லாம் அப்புறம் பேசலாம். இப்ப முதுகில தடவிக் கொடுத்தாப் போதுமாம். உன் காட்டில மழைய்யா! அந்த நிமிஷம் மொழி பெயர்ப்பு வேண்டாமே?'

விக்ரமின் அதரங்களுக்கு மிக அருகே ராஜகுமாரி இருந்தபோது காலடி ஓசைகள் கேட்டன. 'ஹிய்யா ஹ ஹே' என்று அதட்டல் கேட்டு எல்லாக் காலடிகளும் பொருந்தி நின்றன.

'விக்ரம்?'

சரேல் என்று எழுந்து திரும்பினான். ராஜா, மதகுரு, காவலர்கள்.

'ஹலோ தேர்! துபாஷ் கொஞ்சம் உள்ள வரீங்களா?'

துபாஷ் நடுநடுங்கிக்கொண்டு உள்ளே வந்து, 'போச்சு போச்சு, ராஜகோபம் ஆயிடுச்சு. ராஜ கோபம் ஆயிடுச்சு. நீ செத்த! வேண்டாம் வேண்டாம்னு அடிச்சிக்கிட்டேன்!'

மகாராஜா குறுக்கிட்டு நிறுத்தி விக்ரமின் அருகில் வந்து நின்றார். அவர் கண்கள் சிவந்திருந்தன. நாசி துடித்தது. துபாஷைக் கை சொடுக்கினார்.

'உன்னை நான் நண்பனாக மதித்தேன். உன்னை நம்பினேன். ஏமாற்றிவிட்டாய் துரோகி!'

'அரசர்களுக்கும் மதகுருக்களுக்கும் மட்டுமே அனுமதி உள்ள கோயிலில் ஒரு வேற்று நாடன் நுழைந்து குலதெய்வத்தின் முன் ரத்தம் சிந்த வைத்தாய். பலபேரைக் கொன்றாய். குல தெய்வத்தைத் தொட்டுவிட்டாய்! அது மட்டுமின்றி இங்கே அரண்



மனை நுழைவாயில் நுழைந்து என் அருமைச் சகோதரியைக் களங்கப்படுத்திவிட்டாய்!'

ஏதோ சொல்ல வாயெடுத்த ராஜகுமாரியைத் தடுத்து நிறுத்தித் தொடர்ந்தார்.

'விக்ரம்! நீ செய்த ஒவ்வொரு காரியத்துக்கும் எங்கள் சலாமியா சட்டத்தின் படி என்ன தண்டனை?'

ராஜாவின் புருவங்கள் கோபப் பின்னலிருந்து விடுபட்டு நிதானப்பட்டன. அவசரமில்லை, சாந்தமாகக் கழுத்தின் குறுக்கே விரலால் கோடு போட்டு, 'ஹர்ர்ர்' என்றார்.

'மரணம்!' என்றான் துபாஷ்.

# 16

விக்ரம் தனக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையின் தீவிரத்தை
முழுவதும் உணரவில்லைதான். தன் எதிரே அமைக்கப்படும்
நூதனமான கோர்ட்டைப் பார்த்துக்கொண்டிருந்தான். எங்
கிருந்தோ ஒரு மேசை கொண்டு வரப்பட்டது. அதன் உடனே
பெரிய நாற்காலி வந்தது. பட்டுத்துணி விரிக்கப்பட்டு ஒ
மகத்தான புத்தகம் திறக்கப்பட்டது. கடும் மஞ்சளில் காகிதங்
களும், கரும் மசியில் பேனாவும் வைக்கப்பட்டன. தூக்கம்
கலையாத ஒரு சிலர் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் பாஷை
யில் புரியாமல் பேசிக்கொண்டார்கள். டக் டக் என்று சுத்தியால்
தட்டப்பட்டது. ராஜா மேசையின் அருகே உட்கார, உப நாற்காலி
களில் பிரதானமாக மதகுருவும் மற்றவரும் உட்கார, விக்ரம் நிற்க
வைக்கப்பட்டான். அவன் முன் என்னவோ பத்திரம் வாசிக்கப்
பட, ஏதோ தமாஷ் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தான்.
கண்கள் ராஜகுமாரியைத் தேடின. அவள் பணிப்பெண்களுடனும்
விசும்பல்களுடனும் அழைத்துச் செல்லப்பட்டவள், ஆளையே
காணோம்.

'துபாஷ், என்னய்யா நடக்குது இங்கே?'

'கோர்ட்டுங்க.'

'நடுராத்திரியிலயா?'

'மரண தண்டனை ராத்திரிக்கூடாது இந்த நாட்டில! நீ காலி!'

அவனருகே எழுத்து மூலம் கிடைத்த ஒரு காகிதம் கடகடவென்று
படிக்கப்பட்டது.



'என்ன அர்த்தம்?'

'நாலு குற்றங்கள் உன்மேல சாட்டப்பட்டிருக்கின்றன. கோயிலுக்
குள்ளே நுழைந்தது, அங்கே சாமிக்கு முன்னால ரத்தம் சிந்த
வைத்துக் கோயிலை அசிங்கம் பண்ணி அதன் புனிதத்தைக்
கெடுத்தது, அமைதி காக்கும் மதகுருவின் காவலர்களைக் கொன்
றது, இளைய ராணியின் அந்தரங்கத்தில் நுழைந்து பலாத்கார
முயற்சி செய்தது. இந்த நான்கு குற்றங்களையும் விக்ரமாகிய நீ
ஒப்புக்கொள்கிறாயா?'

விக்ரம், 'ஐ க்ளெய்ம் டிப்ளமாடிக் இம்யூனிட்டி. ஐ மஸ்ட் ஸீ எ
லாயர்.'

'இந்த ஊர்ல லாயர், ஜட்ஜ் எல்லாமே ராஜாதான்யா!'

'அப்ப நான் சொல்றதையாவது காது குடுத்துக் கேக்கச் சொல்லு!'

துபாஷ் அவன் விருப்பத்தை மொழிபெயர்த்துச் சொல்ல, ராஜா
மதகுருவின் முகத்தைப் பார்க்க, அவர் கூடாது என்று தலை
யாட்ட, ராஜா மறுபடி யோசித்து, 'ஐந்து நிமிஷம்தான் அவ
காசம். சொல்லவேண்டியதைச் சுருக்கமாகச் சொல்' என்றார்.

விக்ரம் நிதானமிழக்காமல் சொன்னான். 'உங்கள் மதகுரு என்
பவர் உங்களை மதத்தின் பெயரில் ஏமாற்றிக் கொண்டிருப்பதை
ராஜா உணரவேண்டும். இன்றைக்கே இப்போதே கோயிலின்
உட்பகுதிக்குச் சென்று பார்த்தால் அதன் உள்ளே உங்கள்
குலதெய்வத்தின் அருகில், கீழே ஒரு ராக்கெட் - இந்திய அரசாங்
கத்துக்குச் சொந்தமான ஒரு ராக்கெட் இருக்கிறது. உங்கள்
மதகுரு சுகிர்தராஜா என்னும் சர்வதேச வில்லனின் கைப்பாவை
யாக இருந்து அவனுக்குப் புகல் தந்து அவன் திருடிய ராக்
கெட்டைப் புனிதமான கோயிலில் ஒளித்து வைத்திருப்பதை
மகாராஜா கவனிக்க வேண்டுகிறேன். அதைப் பார்த்தபின்
எனக்கு தண்டனை அளிக்கத் தீர்மானிக்கட்டும்.'

துபாஷ் இதை மொழிபெயர்க்க ஆரம்பிக்க அவன் கையில் ஒரு
காவலன் ஒரு சீட்டைக் கொண்டுவந்து கொடுக்க, அதில்
எழுதியிருந்தது விக்ரமுக்கும் தெரிந்தது. 'மொழிபெயர்த்தால்
உன் தலை சீவப்படும்' என்று தமிழில் எழுதியிருந்தது.

'துபாஷ், கவலைப்படாதீங்க. நான் உங்களைக் காப்பாத்தறேன்!'

'அதுக்கு முதல்ல உங்களைக் காப்பாத்தணுங்க. அதுவே முடி யாத காரியம். என் தலையா, உன் தலையான்னு பாக்கறப்ப...'

'பரவாயில்லை, பயப்படாத.'

துபாஷ் மொழிபெயர்த்தது என்ன என்று நிரூபிக்கமுடியாத, சரிபார்க்காத நிலையில் விக்ரம் இருந்தான். ஏதோ காமாசோமா என்றுதான் மொழிபெயர்த்ததாக நினைத்தான்.

ராஜா நிஷ்டையில் போலக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, கடைசியில் தொண்டையைக் கனைத்துக்கொண்டு சொன்னார். அதை ஒரு ரைட்டர் போல ஆள் பிரதியெடுத்துக் கொண்டிருக்க கடைசியில் அந்தக் காகிதத்தில் 'கிக்ரீச்' என்று கையெழுத் திட்டது எல்லோருக்கும் கேட்டது. ஒருவன் அதை உரக்கப் படிக்க, துபாஷ் அதை உடனே சரியாக மொழிபெயர்த்தான்.

'நாளைக் காலை அரசின் மைதானத்தில் உனக்கு அளிக்கப் பட்டிருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படும்!'

'பொய்ங்' என்று பெரிய மணி அடிக்க, ராஜா விருட்டென்று புறப்பட்டுச் சென்றார். மதகுரு விக்ரமின் அருகில் வந்து சிரிக்க, 'மொட்டை! உனக்குத் தமிழ் தெரியுமில்லை?' என்றான் விக்ரம். பளீர் என்று கன்னத்தில் அறையைப் பெற்றுக்கொண்டு திருப்பி அடிப்பதற்குள் அநியாயமாக நாலு ஐந்து பேர் சேர்ந்து அவனைக் கோழிக்குஞ்சைப் போல் அழுத்தி இழுத்துச் சென்றார்கள்.

ராத்திரி அவனை அடைத்து வைத்திருந்த இடத்தில் மிகவும் குளிராக இருந்தது. மிகவும் இருட்டாக இருந்தது. தடவிப் பார்த்ததில் சுவர்கள் கரடுமுரடாகவும் ஈரமாகவும் இருந்தன. விக்ரம் முதன் முதலாக நிலைமையின் தீவிரத்துக்குப் பயந்தான். என்னடாது, பைத்தியக்கார தேசத்தில் பைத்தியக்கார சனங் களிடம் மாட்டிக் கொண்டுவிட்டோம்! சொன்னதைக் கேட்க யாருமில்லை. பாஷை புரிந்து கொள்ள ஒரே ஒரு துபாஷ்! மரணம் என்கிறான். தெரியாத்தனமாக அகப்பட்டுக்கொண்டு விட் டோம்! ப்ரீத்தி எங்கே? அவளையும் கைது செய்திருப்பார்கள்! ஒரு வேளை இங்கேயே அடைத்து வைத்திருப்பார்களோ? இருட்டில், 'ப்ரீத்தி! ப்ரீத்தி!' என்று கூப்பிட்டுப் பார்த்தான். எலியோ என்னவோ கிச்சு கிச்சு சப்தம்தான் பதில் கிடைத்தது. உடம்பில் பூச்சிகள் ஊர்ந்தன. கதவு எங்கே என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரே ஒரு சதுர அடிக்குமேலே இரும்புக் கம்பி



போட்ட சன்னலில் நட்சத்திர வெளிச்சம் தெரிந்தது. விக்ரம் மௌனமாக நின்றுகொண்டு முன்னிரவில் கிடைத்த ராக்கெட் தரிசனம், ராஜகுமாரி தரிசனம் எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தான். வானத்தையே பார்த்துக்கொண்டிருக்க அந்த நட்சத்திரங்கள் களையிழந்து கருநீலம் வெளிர் நீலமாக, பட்சிகள் சப்தம் கேட்கும்வரை விழித்துக்கொண்டுதான் இருந்தான்.

என்ன செய்வது என்று எதுவும் தோன்றவில்லை. இதுவரை எல்லாமே கனா அல்லது விளையாட்டுக்கு என்றுதான் நினைத்தான். காவலர்கள் இருவர் வந்து தன் காலிலும் கையிலும் வளையங்கள் பொருத்தப்பட்டு, குறுக்குச் சங்கிலிகள் உடம்பில் பூணூல் போலச் செல்வதைக் கவனித்தபோதுதான் எல்லாம் விளையாட்டில்லை, நிசம் என்று உணர்ந்தான். 'பாவிகளா, பாவிகளா' என்று கத்தினான்.

அவர்கள் அவன்மேல் தண்ணீர் கொட்டினார்கள். சலங் சலங் என்று குலுங்கக் குலுங்க அழைத்துச் சென்று அரசாங்கத்தைச் சேர்ந்த ஓர் ஒட்டக வண்டியில் ஏற்றிப் பிணைத்தார்கள். பப்ளிக்காக அவன் நின்றுகொண்டே வர மௌனமாகத் தலை நகரின் பிரதான தெருக்களின் ஊடே அழைத்துச் செல்லப் பட்டான். நாற்சந்தியில் அவனைச் சுற்றிலும் சனங்கள் சூழ்ந்து கொண்டு விநோதமான பாஷையில் யாரிவன், என்ன குற்றம் செய்தான் என்று ஒருவரை ஒருவர் விசாரித்துக்கொண்டு சற்றுத் தூரத்தில் அவன் வண்டியைத் தொடர, விக்ரமின் கண்கள் அலைந்தன. உதவி இல்லாமல் தப்புவது முடியவே முடியாது. ராஜகுமாரியால்தான் இத்தகைய சங்கடம். அவள் என்னைக் காப்பாற்ற முடியுமா இந்த ஆண்கள் உலகத்தில்? காட்டுத்தன மான பழக்கங்கள், சட்டங்கள் கொண்ட இந்த ராச்சியத்தில்?

ராஜகுமாரி விக்ரமுக்கு நிகழ்ந்தது அத்தனையும் தெரியாமல் படுக்கையில் உறங்கிக்கொண்டிருந்தாள். வெளி ஆரவாரம், இவள் அறையில் லேசாகத்தான் கேட்டது. விக்ரமை நடுத் தெருவில் தரதரவென்று இழுத்துச் செல்வதை அவள் பார்த் திருக்க முடியாது. வேகு வேகென்று ஓடிவந்து ரமாதேவிதான் எழுப்பினாள்.

'என்ன?' என்று கேட்டாள் கண்ணைத் திறந்ததும்.

'உடனே வா. ஒரு காட்சியை நீ பார்த்தே ஆகவேண்டும்' என்று அவளை தூக்கம் விலகாத கண்களுடன் தரதரவென்று இழுத்துச்

சென்று நீண்ட காரிடாரைக் கடந்து ஒரு அல்லறைக்கு அழைத்துச் சென்று காட்டினாள். ரமாதேவிக்கு அவ்வளவாக சுவாமி பாவை வராதுதான். இத்தனை நாள் ராஜாவின் வாயத்தில் வாழ்ந்தாலும் அவளுக்கு இந்த பாஷை சரியாகப் பிடிபடவில்லை. ஏதோ சைகையும் சுவாமியும் கலந்துகட்டியாக ராஜகுமாரியிடம் சொன்னாள்.

'இதோ பார். அந்த இளைஞனுக்கு மரணதண்டனை கொடுக்கப் போகிறார்கள்... எல்லாம் உன்னால்தான்.'

'அப்படியா?'

'ஆம். உன் அந்தரங்கத்துக்கு அவன் வந்திருந்தான்தான் ராஜாவுக்குக் கோபம் வந்து...'

'அய்யோ! இப்போது என்ன செய்வது?' என்று ராஜகுமாரி கையை உதறிப் பதறினாள்.

'என்ன செய்வாயோ. அவனை விடுதலை பண்ணவேண்டியது உன் கடமை, பொறுப்பு.'

ராஜகுமாரி யோசித்தாள். 'ஒன்று செய்' என்று அறைக்குப் போய் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்து, 'இதைக் கொண்டுபோய் காளிக்கோவிலுக்கு எதிரே உள்ள தெருவில் இரண்டாவது வீட்டில் வசிக்கும் என் மெய்க்காப்புப் படைத்தலைவனிடம் கொடு உடனே!'

ரமாதேவி அதை எடுத்துக்கொண்டு ஓட, ராஜகுமாரி சட்டென்று உடை மாற்றிக்கொண்டாள்.

அவளுக்கும் வேலையிருந்தது.

விக்ரம் அந்த நடு மைதானத்தை நெருங்க நெருங்க, கூட்டம் அதிகரிக்க, அவர்கள் மிகுந்த ஆரவாரத்துடன் அவனருகே வந்து தொட்டுப் பார்த்தார்கள். விக்ரமுக்கு மயிர்க் கணுக்கள் எல்லாம் சிலிர்த்துக்கொண்டன. சற்று உயரமான ஒரு மேடையில் சின்னதாக ஒரு பீடம் இருந்தது. அதனருகே கைகட்டி ஒருத்தன் காத்திருக்க அவனருகே சுமார் இரண்டு இரண்டரை அடி நீளத்துக்குக் கூர்மையாக ஒரு வெட்டரிவாள் காத்திருந்தது.

விக்ரம் காத்திருக்க, அவனுக்கு முன்னால் மற்றொரு குற்றவாளியைக் கொண்டுவந்தார்கள். அவனுக்கும் இன்று மரண



தண்டனை என்று தெரிந்தது. மதகுரு குற்றவாளியின் அருகில் வந்து அவன்மேல் புனிதமாக எதையோ தூவி நெற்றியில் பொட்டிட்டார். அவர்களது மந்திரங்களிலிருந்து எதையோ ஓதினார். வெட்டரிவாள்காரன் தயாராக இருக்க, விக்ரம் பின்னங் கைகள் முதுகுக்குப்பின் பிணைக்கப்பட்டான். மண்டியிடுமாறு சொல்லி தலையைப் பத்திரமாக நிதானமாக அந்தப் பலிபீடத்தின் மேல் வைத்தார்கள்.

சட்டென்று அந்த இடத்தில் குழுமியிருந்த ஆயிரம் பேரும் மௌனமாக ராஜாவின் திசையைப் பார்க்க விக்ரமும் நோக்கினான்.

ராஜாவின் அருகில் ராஜகுமாரி நின்றுகொண்டிருந்தாள்.

ராஜா சைகை செய்ய,

'சக்!'

இந்தச் சப்தத்தை விக்ரம் தன் வாழ்நாளிலேயே இதுவரை கேட்டதில்லை. சுத்தமான ஒரே வெட்டில் தலை உருண்டது. குபுக் கென்று ரத்தம் பொங்க விக்ரம் தன் பின்னங்கழுத்தைத் தடவிக் கொண்டான். அந்த உடல் சற்று அசைவதைக் கவனித்தான்.

'விக்ரோம்!'

மேடைக்கு அவன் அழைத்துச் செல்லப்பட்டான்.

# 17

விக்ரமுக்கு நிஜமாகவே இப்போது என்ன செய்வது என்று புரிய வில்லை. ராஜகுமாரி ஏதாவது ஏற்பாடு செய்திருக்கத்தான் வேண்டும். என்ன ஏற்பாடு? இந்தக் காட்டுக் கும்பல் தன் ரத்தத்தைப் பார்க்கப் பிடிவாதமாகக் காத்திருக்க, சங்கிலிகளை எல்லாம் உடைத்துப் பிரிட்டு வெளியேற அவன் ஒன்றும் சாம்சன் இல்லை.

மதகுரு அவன் அருகில் வந்து வெற்றாகப் புன்னகைத்தார். அருகில் வந்து மந்திரம் ஓதுவதற்குப் பதில் 'என்டா பேய், என்னை மொட்டையடிச்சியில்ல? பாரு, வெட்டு என்னமா விழப் போவுது. சும்மா வாழைக்கா சீவறாப்பல! ரத்தம் அதிகம் வராது. அதுக்குள்ள செத்துப் போயிடுவ. நல்ல தேச சேவை! சொர்க்கத் தில் போயி தேவர்களுக்கெல்லாம் கலாட்டா செய்து காட்டு' என்று துக்கிரித்தனமாகச் சிரித்தான். நெற்றியில் பொட்டு இட்டு, கையிலிருந்து புனித சாமான்களை ஊதி விலகுமுன் விக்ரமின் அருகில் குனிய, அவன் கொத்தாக அவன் முகத்தில் எச்சில் உமிழ்ந்தான். குரு துப்பாக்கிக் கையைச் சொடுக்க, வெட்டரி வாள்காரன் தன் மரணாயுதத்தைத் தூக்க, கிடைத்த சூரிய ஒளியில் அது மின்னியது. விக்ரமின் மயிர் விலக்கப்பட்டுத் தலை பீடத் தின் மேல் வைக்கப்பட்டது.

விக்ரம் கண்ணை மூடிக்கொண்டான்.

அரிவாள் உயர்ந்தது. ஒரே...

அதற்குச் சற்று முன்பே அந்தச் சலசலப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அந்த நாற்சந்திக்கு அந்தக் கூட்டம் அதிகம்தான்.



சாலுள் ஒரு சிறுத்தைப்புலி உள்ளே புகுந்துவிட்டால்? இட்டு என்று சற்றுமுன் வாசகர்களுக்கு அறிமுகமான சிறுத்தைப் புலி இப்போது கண்ட மேனிக்குக் கூட்டத்தின் ஊடே செல்ல, கூட்டம் கட்டுக்கடங்காததாகி, பல பேர் கிலியில் உடனே கிடைத்த பாதுகாப்புஸ்தலமாகிய பலிபீடத்துக்கு மேல் ஏறிக்கொள்ள, புலி இருமலுக்கும் 'கிர்ர்... கிர்ர்ர்' என்று மீசை உறும, விக்ரமை வெட்டவேண்டியவன் வெட்டரிவாளுடன் தள்ளப்பட்டான். விக்ரம் அதே சமயம் இரு காவலர்கள் தன் கைப்பிணைப்புகளை களேபரத்தின் இடையில் விடுவிப்பதைக் கவனித்தான். 'தாங்ஸ்ப்பா' என்று சொல்லி, 'கொஞ்சம் லேட்டு, பரவா யில்லை' என்றான்.

கூட்டத்துக்குள் தாவிச் சரசரவென்று கோட்டை வாசலை நோக்கிச் செல்லும் அவனை ஒருவிதமாகத் தள்ளித் தள்ளிக் கூட்டத்தின் விளிம்புக்கு யாரோ அழைத்துச் செல்வதை உணர்ந் தான். 'கிரேட்! ராஜகுமாரி என்ன மாயவி! தாங்க்ஸ்! ப்ரீத்தி எங்கே? என்னை எங்கே இழுத்துச் செல்கிறார்கள்?'

துவாரத்தைக் கடந்ததும் ஒரு தெருவின் இறுதியில் ஓர் ஒட்டகம் காத்திருந்தது. அதன் முதுகில் ஜமக்காளம் எல்லாம் அமைக்கப்பட்டு வாட்டர் பாட்டில், ஆகார வஸ்துக்கள் எல்லாம் வைத்துச் சுமார் ஒருவார பிக்னிக்குக்குத் தயாராக இருந்தது. விக்ரமை ஏற்றிக்கொள்ள மண்டி போட்டுக்கொண்டிருந்தது. அவன் ஏறிக்கொண்டதும் இரண்டாய் நிமிர்ந்தது. விக்ரமுக்கு அதை எப்படி ஓட்டுவது என்று ஐடியாவே இல்லை. ஆனால் இந்தப் பைத்தியக்கார தேசத்தைக் குதிரைகளாலோ, மோட்டார் காராலோ கடக்க முடியாது. இதுதான் சௌகரியம் என்று தெரிந்து ஏதோ குதிரை சவாரி ஞானத்தில் அதை இடது பக்கத்தில் காலால் தூண்டிப் பார்த்தான். சுமாரான ஸ்பீடில் கிளம்பியது. எதிரே பார்த்து மலைத்தான். பூரா பூரா மணல் பாலைவனம்! இதுவரை யாருமே அடி எடுத்து வைக்காதது போல் வெள்ளை மணல் சல்லா!

ஒட்டகம்தான் சரி. வேற எதுவும் இங்கே உதவாது. விக்ரம் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு உதவிய காவலர்கள் சலாமியா பாணியில் டாட்டா காட்டிக்கொண்டிருந்தார்கள்.

'நன்றி நண்பர்களே. எப்போதாவது சந்திக்கலாம்' என்று இரண்டு கையையும் ஒட்டவைத்து உயர்த்திக் காட்டினான். அவர்களும்

அப்படியே செய்தார்கள். ராஜகுமாரியின் அந்தரங்கக் காவ...
களாக இருக்கவேண்டும். அவன்தான் அனுப்பியிரு...
வேண்டும். அவள் உடல் ஸ்பரிசம் ஞாபகம் வந்தது. உட...
ப்ரீத்தியின் ஞாபகம் வந்தது. ப்ரீத்தி எங்கே? அவளை எங்...
எப்படி என்ன செய்யப் போகிறார்களோ? ப்ரீத்தியைவி...
முக்கியம் நான் பிழைத்து ராவுக்கு அவசரத் தகவல் கொடுப்ப...

சூரியன் காலை எட்டரை மணிக் கோணத்திலேயே இத்தனை
சூடாக இருந்தது. அந்த ஒட்டகம் மந்தகதியில்தான் சென்றது.
நாலாபுறமும் மணல், மணல். காம்பஸ் இல்லாமல் எங்கே
போவது? ஒட்டகத்துக்குத் தெரியுமா? உள்ளே உள்ளே மணலி...
அதன் பாதம் அதுங்க, அதுங்க பலக் பலக் என்று விநோதமா...
சப்தம் வரச் சென்றது. சென்றது. எங்கே எந்தத் திசை? சூரியனை
நேர் எதிரே வைத்துக்கொண்டு சொல்லலாம்! நேர் கிழக்கு.

'டிய்யூங்!'

சப்தம் கேட்கத் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் ஒரு கறுப்பு
குழப்பமாக நான்கைந்து ஒட்டகங்கள் தெரிந்தன. விக்ரம் தன்
இரண்டு கால்களாலும் உந்தினான். அது சப்தத்துக்கோ அல்ல
உந்தலுக்கோ பயந்துகொண்டு சற்று வேகமாக ஓட ஆரம்பித்தது.
வேகமாக என்றால் அப்படி ஒன்றும் குதிரைபோல இல்லை.
விக்ரமுக்கு அது ஓடும் வேகம் போதாது என்று புரிந்தது.
பின்னால் உள்ளவர்கள் குதிரையா ஒட்டகமா தெரியவில்லை.
ஒட்டகமாகத்தான் இருக்கவேண்டும். குதிரை இந்த மணலில்
கொண்டி போட்டு விடும்.

'யோவ் ஒட்டகண்ணா! கொஞ்சம் வேகமாப் போயேன்!'

பின்னால் வந்த நான்கு பேர் கதிர்ராஜாவும் மதகுருவும் இரண்டு
முகமூடிக் காவலர்களும். அவர்களில் ஒருவன் சலாமியி...
பேசினான்.

'மொட்டை, அவன் என்னடா சொல்றான்?' என்றான்.

'புடிக்க முடியாதுங்கறான்! ஆனா அவனால தப்பிக்க முடியாதுங்
கறான்!'

'சும்மா பேசாதீங்கடா. ரைஃபிளை எடுத்து வெக்கச் சுடுங்கடா
சோமாறிங்களா. கொடுரா ரைஃபிளை, குறிபார்த்து ரொம்ப
நாளாச்சு!'



ரைஃபிளின் டெலஸ்கோப் மூலம் விக்ரம் தெளிவில்லாமல் ஒரு
மாதிரி ஒட்டகத்துடன் குண்டலாகத் தெரிய, 'டிய்யூங்.'

ஒட்டகம் தடுமாறி ஓடுவது தெரிய, கதிர்ராஜா, சிரித்துக்
கொண்டான். 'பட்டுருச்சு! ப்ராக்டிஸ் இருக்குது வாத்யாரே! குரு!
மதகுரு! யாரு? அவனைக் கழுத்தை வெட்டிப் பாதி பாதியா
பண்றதுக்குள்ளே, யாரு அவனுக்கு உதவி செய்திருப்பாங்கறே?
உள்ளுக்குள்ள புலியை விட்டுட்டு கலாட்டா பண்ணி?'

'அந்த ராஜகுமாரிதான் அண்ணே.'

'என்னவாம்? காதலா? இந்தக் காதல் படுத்தற பாடு என்னங்கறே!
குரு, இனிமே பைத்தியக்கார ராஜா, அவன் பொண்டாட்டிங்க,
தங்கச்சிங்க எல்லாம் போதும்! திரும்பப் போயி பேசாம
ராச்சியத்தை மடக்கிர வேண்டியதுதான்! எனக்கு அந்த இடம்,
பாக்டரி வெக்க சலாமியா வேணும். யுரேனியம் கிடைக்குது!
பாக்கெட் சைஸ்ல ராக்கெட் பண்ணி வித்துக் காசாக்கணும்!
சும்மா பொட்டைக் காட்டில ஒண்டியாளை கேவத்தனமாத்
துரத்திக்கிட்டு இருக்கவேண்டாம்!

'இந்தப் பாலைவனத்தில் உள்ள போனவங்க இதுவரைக்கும்
வெளிய வந்ததில்லையாம் அண்ணே! ஏன்னா கொஞ்ச நேரம்
கழிச்சு வெயில் ஏறிச்சுன்னா பித்துப் புடிச்சுத் திரும்பத் திரும்ப
ஒரே வட்டத்துலேயே போயிக்கிட்டு இருப்பாங்களாம்! உச்சி
வெயில்லயாம்!'

கீழே காய்ந்த ரத்தம் மணலில் தெரிந்தது.

'பட்டுருச்சு! நான் சுட்டது பட்டுருச்சு! பைனாகுலரில் கதிர் பார்க்க,
அந்த மணல் சமுத்திரத்தில் ஏற்ற இறக்கத்தில் யாரையுமே
காணோம்.

'தேடிப் பார்க்கலாமா விட்டுரலாமா?'

ஒரு காவலன் கீழே இறங்கி ரத்தம் கலந்த மணலைக் காட்டினான்.

'சமாதி! உயிரோட இருந்தாலும் இந்தப் பட்டை உரியற
வெயில்ல மூணு மணி நேரம் தாங்க மாட்டான். வா, அவசரமா
சோலி இருக்கு. அந்தப் பயலை அப்புறம் கழுகுகள்லாம் கொண்
டாந்து போடும்! இதப் பார் பறக்குது!'

அந்த இடத்திலிருந்து இப்போது விக்ரம் ஒரு மைல் தூரத்தில் இருந்தான். உண்மையாகவே கழுகுக் கூட்டங்கள் அவன் மண்டைக்கு நேர்மேலே பறக்க ஆரம்பித்தன. நிச்சயம் ஆள் காலி என்று எதிர்பார்த்தன. ஒட்டகத்தின் காலில் பட்ட அடியால் அது விந்தி விந்தி ரத்த ரத்தமாக நடந்து வந்து ஓர் இடத்தில் நின்று நாலு சுற்றுச் சுற்றிச் செத்து வைத்தது. விக்ரம் அதன் முதுகிலிருந்து இறங்கினான். நடுப்பகல்! வெண் கோபாராஜனாகச் சூரியன்! தன் தண்ணீர்ப் பையை எடுக்கும்போது கைகள் நடுங்கின. சுற்றுமுற்றும் பார்த்ததில் கிழக்கு, மேற்கு, தெற்கு வடக்கெல்லாம் பாலைவனம்தான்! சூரியன் மண்டை மேலே! எது கிழக்கு? தண்ணீரை எடுத்து வாயில் ஊற்றிக்கொள்ளும் போது திராணியில்லாத கரங்களால் நழுவி அத்தனை தண்ணீர் கொட்டிப் போய் உடனே உடனே காய்ந்துவிட்டது!

'மை காட்! ஓ மை காட்!' விக்ரம் அவசர அவசரமாக அந்தத் தண்ணீரை அள்ள முயன்றான். தண்ணீர் இல்லை என்று தெரிந்ததும் தாகம் அதிகரித்தது. சற்றுத் தள்ளிக் கிடந்த ஒட்டகத்தைக் கொத்திப் பகிர்ந்துகொள்ள, அந்த ராஜாளிக் கழுகுகள் கீழே டைவ் அடித்து உட்கார்ந்து முன்னுரையாகச் செத்த ஒட்டகத்தின் வயிற்றுப் பாகத்தில் ஒரு கொத்து கொத்திக் குடலைத் தேடின. உனக்கு இன்னும் எத்தனை நிமிஷம் என்று கேட்பது போல விக்ரமின் மேலும் ஒரு பறவை பறந்தது. விக்ரம் சுற்றிலும் பார்த்தான். அந்த மணல் பிரதேசத்தில் அடையாளங்களே இல்லை. தூரத்தில் ஜலம் மிதந்தது. கானல் நீர் என்று தெரியும். இந்தப்புறம் அது என்ன ஒரு மைலா நூறு மைலா? ஒரு பனை மரமும் நிழலும் தென்பட்டன. அதன் கீழும் சர நடனம்? இது நிச்சயம் நீராக இருக்க வேண்டும்!

விக்ரம் தன்னை அங்கே கஷ்டப்பட்டு இழுத்துக்கொண்டு சென்றான். நாவெல்லாம் வறண்டு பற்களுக்குள் மணல் தெரிந்தது. தலையை மூடிக்கொள்ள வேண்டும். முகத்தை மூடிக் கொள்ள வேண்டும். எங்கேயோ படித்த ஞாபகம் இருந்தது. பாலைவனங்களை இதுவரை வால்ட் டிஸ்னியிலும் புத்தகங்களிலும்தான் சந்தித்திருக்கிறான். இப்போது முழுசாகப் பாலை! நிசப் பாலை! லேசாக விசிறிய மணல் நடனம் அந்த உக்கிரமான வேளையிலும் வசீகரமாகத்தான் இருந்தது. தூரத்தில் பனை மரமோ, ஈச்ச மரமோ என்னவோ! அதை அடைந்தால்தான் பிழைக்க முடியும். அதன் மடியில் கொஞ்சம் நிழல். கொஞ்சம்



தண்ணீர்! நிச்சயம் இருக்கும்! விக்ரம், உன் பலம் உனக்குத் தெரியாது! சாகாதே! சாகாதே! இன்னும் முன்னூறு அடி! மெல்ல மெல்ல விக்ரம் விக்ரம் என்று பலர் அழைப்பதுபோல இருந்தது. காதுக்குள் காற்று சுழித்தது. ஊளையிட்டது. நடையின் ஒவ்வோர் அடியும் பிரம்மப் பிரயத்தனமாக இருந்தது.

அந்த மரமும் மரநிழலும் நிஜம்தான்! நிழலில் மினி நீரூற்று! அதிகம் ஆழமில்லாவிட்டாலும் தெளிவாக இருந்தது. விக்ரம் அதனருகில் தடுக்கித் தடுக்கித் தடுமாறிச் சென்று படுத்துக் கொண்டு விளிம்பில் உதட்டை வைத்து உறிஞ்சத் தொடங்கும் போது அருகே மூச்சுவிடும் சப்தம் கேட்டது. 'யாரு?' என்று திரும்பினான். யாருமில்லை! முதல் நீர்த்திவலைகளில் நாக்கு பதியும்போது அந்த புஸ்ஸ"டன் ஏதோ ஒரு கிலுகிலுப்பைபோல சப்தம் கேட்க விக்ரம் தன் சகல நரம்புகளும் உயிர் பெற்றுப் புரண்டு திரும்ப,

அந்தப் பாம்பு வகையை விக்ரம் தன் வாழ்நாளில் பார்த்ததில்லை. ஒரு மாதிரி கட்டு விரியன் போல மணலில் சைடு வாக்கில் கோடு போட்டுக்கொண்டு வந்தது. அதே சமயம் தன் வாலைச் சிலிர்த்துக்கொண்டு அதன் மூலம் கிடைத்த கிலுகிலுப்பை சப்தத்தின் ஊடே மூச்சு விட்டுக்கொண்டு...

'மணி! இங்கேயே வந்திட்டியா?' என்றான் விக்ரம். அவனுக்கு மெட்ராஸில் வளர்த்த வி.கே. மணி என்ற பெயர் கொண்ட பாம்புதான் சலாமியாவுக்கு வந்திருக்கிறது என்ற வெயில் குழப்பம் ஏற்பட்டுவிட, அதை எடுத்து முத்தம் கொடுத்தபோது, அது அவனைச் சிக்கனமாகக் கையில் கடித்துவிட்டது!

# 18

பாம்பு தீண்டிய மயக்கத்தில் விக்ரமுக்கு, தான் இருக்கிறோமா இல்லையா, இது சலாமியாவா, சென்னையா, இப்போது காலையா மாலையா போன்ற விஷயங்களில் எல்லாம் குழப்பம் ஏற்பட்டு உலகம் பூராவும் சல்லாத் துணியால் பண்ணியது போலத் திரித்திரியாக நினைவு சுழன்றது. நாக்கு உலர்ந்து வெளிர வாயோரத்தில் ரத்தக் கட்டிகள் தெரிந்தன. இதுதான் செத்துப் போவது என்பதா?

அவனுள் வனிதாமணி என்று அவன் மனைவியுடன் பாடின ராகம் ஒலித்தது. டுமீல் என்று துப்பாக்கி அவன் நெற்றியில் ஒலித்தது. கம்ப்யூட்டர்கள் பச்சைத்திரையில் எழுத்துகள் எழுதி சிலிக்கன் நடனமிட்டன. ராக்கெட்டின் கவுண்ட் டவுன் கேட்டது. டென், நைன், எய்ட், ஏழு, ஆறு, அஞ்சு, நாலு, மூணு, ரெண்.

திடீர் என்று எதுவும் கவலை தரவில்லை. வெல்வெட் ஒளிரும் ஒரு விண்வெளியில் நழுவி நழுவிச் சரிய மெல்ல மிக மெல்ல...

'விக்ரம்!'

'யா.'

'ஒண்ணுமில்லை, உன் பேரைக் கூப்பிடணும் போல இருந்தது.'

'விக்ரம்!'



யாரோ அவன் கையில் பாம்பு கடித்த இடத்தில் ஜில்லென்று உறிஞ்சி உறிஞ்சித் துப்ப மெல்லக் கண் திறந்தான். இது இது மீராவா? இல்லை ப்ரீத்தியா? இல்லை ராஜகுமாரியா? அந்தச் செம்பட்டைக் கூந்தல் தொகுப்பு நிமிர்ந்து விக்ரம் உறிஞ்சி விஷத்தைத் துப்பிவிட.

ராஜகுமாரி 'விக்ரோம்' என்று சிரித்தாள்.

'இது யார் கனவு? உங்கள் கனவா, என் கனவா? நம்மிருவரில் யார் உயிருடன் இருக்கிறோம்?'

ராஜகுமாரி 'ஸ்ஸ்' என்று உதட்டில் விரல் வைத்து, 'பேசாதே' என்றாள். மெல்ல, 'விக்ரம்! மகிழ்ச்சி!' என்றாள்.

'பார்டன் மி?'

அவள் தன் ஏராளமான உடைகளிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தாள். 'முப்பது நாட்களில் தமிழ்!'

விக்ரம் தன்னைச் சுற்றிலும் பார்த்தான். கரடு முரடாக காட்டுத்தனமாக இருந்தது. ஒதுக்குப்புறமாகக் குகை போல இருந்தது. பாலைவன விளிம்பு தெரிந்தது. சலசலப்பு கேட்க அருகே துல்லியமான நீர் நிலை தெரிந்தது. அதனருகே ஓரிரு குதிரைகள் கட்டியிருக்க, காவலர்கள் இருந்தனர்.

'முன்ன பின்ன குதிரை ஏறினதில்லையா, ஒவ்வொரு எலும்பும் தனித்தனியா வலிக்குது!'

'யோவ் உனக்கு அதிர்ஷ்டம்யா. உன்னைக் கழுகெல்லாம் கொத்தி வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயி சாப்பிட்டிருக்கும். தக்க சமயத்தில வந்து உன்னைக் காப்பாத்தினாங்க.'

'நன்றின்னு... சொல்லுங்க துபாஷ்.'

'நீ அவங்களை காப்பாத்தினதுக்கு அவங்களும் காப்பாத்திட்டாங்க.'

'அவங்க கிட்டச் சொல்லுங்க. மதகுரு ராஜகுடும்பத்தைச் சக்கையா ஏமாத்திக்கிட்டு இருக்கான்னு. இந்தியாவிலிருந்து ஒரு ராக்கெட்டைத் திருடிக் கொண்டுவந்து கோயில்ல வெச்சிருக்கான்னு சொல்லுங்க.'

'சொல்றேன், சொல்றேன், நீங்க படுத்துக்கங்க!'

'இந்தம்மா பிரதர்கிட்ட உடனே போய்ச் சொல்லணும்னு சொல்லுங்க. ராஜா தெரியாம இருக்காரு.'

ராஜகுமாரி அவன் பேசுவதைக் கண்கொட்டாமல் பார்த்திருந்து விட்டு லேசாய்க் கைகொடுக்க துபாஷ், 'படுத்துக்கய்யா. தொந்தரவு பண்ணாதேங்கறாங்க. படுத்து இன்னம் கொஞ்சம் தூங்கு.'

விக்ரமுக்குக் களைப்பாக இருந்தாலும் ராக்கெட், அக்னி புத்திரன், மதகுரு என்றுதான் சொல்லிக்கொண்டிருந்தான். ராஜகுமாரி அவன் உதடுகளின்மேல் தன் நளின விரல்களை வைத்துத் தடவினாள். விக்ரமின் கண்களை மூடினாள். மறுபடி அவனை ஒருவிதமான அரைத்தூக்கம் ஆக்கிரமிக்க அவ்வப் போது விழித்தபோது ராஜகுமாரி கலர் கலராகத் தெரிந்தாள்.

விக்ரம் ஏதோ ஒரு ரோமாபுரி வீரன் போல் உடை அணிந்திருந் தான். விடுவிடுவென கம்பீரமாக நடப்பதில் அவனுக்குச் சிரமமே இல்லை. ஏழெட்டு பாங்கியர் அவனுடன் நடந்துவந்து அவனை எங்கோ அழைத்துச் சென்றனர். வெள்ளைச் சலவைக் கல் அரண்மனை நடுவே சிங்கத்தின் வாயிலிருந்து கொட்டும் தண்ணீர், நீச்சல் குளம், அதோ தூரத்தில் குங்கும நிற உடல் பூரா உடையில் ராஜகுமாரி அவனையே பார்த்துக்கொண்டிருக்க இப்போது அவர்கள் கானத்தில் மொழிப் பிரச்னை இல்லை. அந்தப் பெண்கள் அவனுக்கு எண்ணெய் தேய்த்து உடலை உருவிவிட அவனுக்கு மற்றொரு கோஷ்டிப் பெண்கள் சிசுருஷை செய்தார்கள்.

விக்ரமின் அங்கி கழற்றப்பட்டது. அவன் மேலாடை நீக்கப் பட்டது. நகைகள் நீக்கப்பட்டன. இருவரும் அருகருகே வர அந்தப் பணிப் பெண்கள் விலக, லேசாக மிக லேசாக ஒரு குழந்தைத் தென்றல் மலர் மொக்கை முத்தமிடுவது போல அவர்கள் முத்தமிட்டுக்கொள்ள, இருவரும் அந்த நீரலைகளுக் குள் சரிய, அந்த நீல மயக்கத்தில் ஒருவருடன் ஒருவர் பின்னிப் பிணைந்துகொள்ள தம்சக் தம்சக் என்று அவர்கள் இதயங்களின் துடிப்பு பெரிதாகக் கேட்க, 'மீண்டும் மீண்டும் வா' என்றாள் ராஜகுமாரி. 'வேண்டும் வேண்டும் தா' என்றான் விக்ரம்.



பிஹீர்ர்ர் குதிரை சிரிப்பது கேட்டுக் கண் விழித்தான். முதுகில் சலாமியா பால சூரியன் சுட, அவன் அருகே ராஜகுமாரி மற் றொரு குதிரையில் வர துபாஷ் சற்றுப் பின்தங்கி வந்தான்.

'ராஜகுமாரிகிட்ட எல்லாம் சொன்னியா துபாஷ்?'

'சொன்னங்க. நம்பமாட்டேங்கறாங்க. மதகுரு அப்டியெல்லாம் செய்யமாட்டாராம்.'

'முதல்ல ராஜாகிட்ட போயி நடந்ததெல்லாம் சொல்லணும். கோயில்ல எந்த இடத்தில ஒளிச்சு வெச்சிருக்காங்கன்னு சொல்லிடு. சாமி மாதிரி ஒரு பொம்மை இருக்குதே, அதன் அடியில் பாதாளம். அதில இருக்குது! ஒரு பாக்டரியே வெச்சிருக் கான். சுகிர்தராஜான்னு ஒரு ஆளு. அவன் தம்பிதான் மதகுரு. நல்லா தமிழ் பேசறான். போலி அவன்! எல்லாம் சொல்லு துபாஷ்.'

'இப்ப நேரா அங்கதானே போறோம். எல்லாத்தையும் புட்டுப் புட்டு வெச்சரலாம். அம்மா உன்னை மட்டும் நம்பறாங்க. நம்பறதோட மட்டுமில்லை. என்னவோ உன்னை அப்படிப் புடிச்சுப் போயி அங்குலம் அங்குலமா விரும்பறாங்க. எங்களை எல்லாம் வெளியே போகச் சொல்லிட்டு, மூணு மணி நேரம் உன்னையே, நீ தூங்கறதையே பார்த்துக்கிட்டு இருந்தாங்கய்யா!'

விக்ரம் அவளைப் பார்த்தான். கண்களால் ஒரு முறை சிரித்தாள். பக்கத்துக் குதிரையிலிருந்து கை நீட்டி விக்ரமை ஒரு முறை தொட்டுக்கொண்டாள். 'விக்ரம்' என்றாள்.

'ஊருக்குப் போன உடனே கல்யாணம்னு தோணுது. அரச குடும்பத்துக்கு உன்னை மாத்திடுவாங்க. என்னய்யா மதம் நீ?'

குதிரைகள் மந்த கதியில் செல்ல விக்ரம் இங்குமங்கும் நோக்கி னான். ஒரு கிராமம் போல இருந்தது. 'துபாஷ், இது என்ன கிராமம்? யாருமே இல்லியே ஊர்லே?'

'அதான நானும் பார்க்கறேன்! வாத்யாரே ஏதாவது சந்தையா?'

'துபாஷ் அங்க பாரு!'

விக்ரம் காட்டிய திசையில் ஒரு நெடுக்கிடல் இருந்தது. மரக்கிளையில் ஒருவன் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தான்.

ராஜகுமாரி சற்று மிரண்டு விக்ரமின் அருகே வந்து கூவினாள். மற்றொரு மரத்தில், மற்றொருவன் தொங்கிக்கொண்டிருந்தான். மற்றொரு மரத்தில் மற்றொருவன். சீஸனில் காய்த்ததுபோல மரத்துக்கு மரம் உடல்கள்!

ஒரு உடலின் கால்கள் தாழ்வாகத் தொங்க, காட்டு நரிகள்... வேண்டாம்! 'ஸ்டிங் ராங்! துபாஷ் வாங்க. தலைநகருக்கு வேகமாப் போகணும்னு சொல்லுங்க.'

ராஜகுமாரியும் குதிரையைக் கால்களால் இடர அது துடிப்புடன் புறப்பட கிராமத்தைக் கடந்தனர்.

தலைநகரில் வேலை நிறுத்தமா? அர்த்தாலா? எல்லா வீடுகளும் கடைகளும் மூடியிருக்க அவர்கள் வீதிகளின் ஊடே பீதியுடன் பிரயாணம் செய்து அரண்மனை வாசலுக்கு வந்தார்கள். காவலில் முகமூடிக் காவலர்கள் காத்திருக்க இவர்களைக் கண்டதும் வழிவிட்டார்கள்.

ராஜகுமாரி குதித்து இறங்கி தர்பார் ஹாலுக்கு நேராக ராஜாவைப் பார்க்கச் சென்றாள். விக்ரம், 'காட்! இட் ஸ் டூ லேட்!' என்றான்.

ராஜசபையில் ராஜ பீடத்தில் மதகுரு அமர்ந்திருக்க, பக்கத்தில் கதிர்ராஜா சிகரெட் குடித்துக்கொண்டு சாமரம் வீசும் பெண்களைப் பார்த்தான்.

'எல்லாக் குட்டிகளையும் மாத்திப் புதுசு போட்டிருணும். அதுங்களுக்கு டயர்டயரா கதை. கொண்டாய்யா ராஜாவை. கோர்ட்டுல தீர்ப்புக் கொடுத்துரலாம். பயப்படாத!'

ராஜகுமாரியும் விக்ரமும் வருவதைப் பார்த்து, 'வாய்யா! ஜேம்ஸ்?! உனக்குச் சாவே கிடையாதா? கரப்பாம் பூச்சியா நீ? வந்து சேந்துட்டே பார்த்தியா!'

'ராஜா எங்கே?'

'இதோ ராஜ மரியாதையோட வராரு! புடிடா இவனை!'



விக்ரம் சுற்றிலும் பார்த்தான். எல்லா வாயில்களிலும் காவலர்கள் இருக்க, 'எப்படி சௌகரியம்? கொஞ்சம் டிஷ்யூம் டிஷ்யூம் சண்டை போட்டுட்டு மாட்டிக்கிறதா உத்தேசமா இல்லை, உடம்பை அலட்டிக்காம மாட்டிக்க உத்தேசமா? பாரு! எல்லாம் ஆயிருச்சி. ஆட்சி மாறிருச்சு! சாமியா இப்ப என் பாக்கெட்டில! மொட்டைதான் ராஜா! என் தம்பி! அமிர்தராஜா!'

விக்ரம் தன்னருகில் மூன்று பேர் வந்து பாதுகாப்பாக நிற்பதையும் ராஜகுமாரி இங்குமங்கும் பார்த்து விழிப்பதையும் கவனித்தான். அவளுக்குச் சங்கிலி பிணைக்க வந்தார்கள். கதிர்ராஜா 'ச்சச், லேடிஸ் எல்லாம் நல்லா நடத்த வேண்டாமாப்பா? பொம்பளைக்கு போய்ச் சங்கிலியா?'

கதிர் அவள் முகத்தை தன் மூக்கால் வருட அவள் துப்பினாள்.

'சினிமா பாத்துப் பாத்து வில்லன் முகத்தில் துப்பற பழக்கம் ஜாஸ்தியாயிருச்சு! பாரு உன்னைக் கற்பழிக்க எத்தனை நேரமாகும்?'

மதகுரு, 'அண்ணே! அதுக்கு நேரமில்லை. தீர்ப்பு சொல்லிருங்க. நான் மொழிபெயர்த்து ராஜாவுக்குச் சொல்லிர்றேன்' என்று கைதட்ட, ராஜா சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டார். ராஜகுமாரி 'அய்க்கா!' (அண்ணா) என்றாள்.

'அய்க்காவுமில்லை, பொய்க்காவுமில்லை. அங்கேயே நில்லு. கேளு ராஜா, உன் நாடு இனிமே உன்னுது இல்லை. என்னுது. மொழி பெயர்றா மொட்டை.' என்றான் கதிர்ராஜா.

'ப்ர்ர்ர்' என்றார் ராஜா.

'பதிலா, உறுமலா?'

'உறுமறான் அண்ணே.'

'பாரு, உனக்குன்னு உன் உள்நாட்டில போனாப் போவுதுன்னு ஒரு ஜாகிர் கொடுக்கறேன். பேசாம விவசாயம் பார்த்துக்கிட்டு லஸ்ஸி கொடுத்துக்கிட்டு இருந்துரு. உன் தேசம் எனக்கு வேணும்! ராக்கெட் பாக்டரி வெக்கணும். உன் நாட்டில யுரேனியம் கிடைக்குது!'

மதகுரு அதை மொழிபெயர்க்க, ராஜா உணர்ச்சிவசப்பட்டு, அங்கே சபையோரிடம் இருந்து தமிழ் ராணியை விளித்து மொழிபெயர்க்கச் சொல்லிவிட்டு சலாமியா பாஷையில் வீர வசனம் பேசினார்.

மொழி பெயர்த்த தமிழ் ராணி, 'வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, உனக்கேன் கிஸ்தி!' என்றாள்.

'த பாரு வெத்து குண்டு! எதுக்காக இந்த உடம்பைப் போட்டுக்கிட்டு இந்த இரைச்சல் இரையறே! விக்ரம், எங்கூட வா! ராஜா நீயும்தான். வா, உன் மூக்கடியிலேயே எப்பேர்ப்பட்ட பாக்டரி, பிரம்மாண்டமான பாக்டரி வெச்சிருக்கேன்னு காட்டறேன் பாரு



# 19

கவிர்தராஜா தன்னுடைய தொழிற்சாலையைப் பார்க்க அழைத்துச் சென்றதன் காரணம் விக்ரமுக்குப் புரியவில்லை. பேசாமல் தன்னைக் கொன்று போட்டுவிட்டு மேற்கொண்டு காரியங்களைப் பார்க்காமல் எதற்காக இப்படிச் சுற்றி வளைக்கிறான் என்பது சற்று நேரத்தில் அவன் கேட்ட கேள்விகளிலிருந்து புரிந்தது.

விக்ரம் அவ்வளவு பெரிய பாக்டரி அங்கே இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனான். எலிக்கோயிலின் அரவணைப்பில் மறைந்திருந்த இடத்தில், மற்றொரு நாட்டில் ராஜாவுக்கே தெரியாமல் மதத்தை வைத்து மறைத்து ஒரு நவீன ராக்கெட் தொழிற்சாலை! கெமிக்கல்கள், ராக்கெட்டின் ரப்பர் போன்ற எரிபொருள் ஆகியவற்றைத் தயாரிக்க இயந்திரங்களும், ராக்கெட்டின் மேற்புறக் கூட்டைத் தரிக்க ஒரு பெரிய ஹாங்கரில் வசதிகளும் இருந்தன. அங்கே தரை துடைக்கும் பாட்டரி வண்டியின் முன்பகுதியில் விக்ரமை உட்கார வைத்து, அவன் அருகிலேயே உட்கார்ந்துகொண்டான் கவி. 'ஓட்ரா!' என்றான்.

'உனக்கு என்ன சம்பளம் கொடுக்கறாங்க, இந்திய சர்க்கார்லெ?'

விக்ரம், 'உயிர் வாழப் போதுமான சம்பளம்?' என்றான்.

'நிசமாவா?' அடிக்கடி 'நிசமாவா' என்பது கவியின் பழக்கம் என்று விக்ரம் உணர்ந்தான்.

'உயிர் வாழறது மட்டும் போதுமா? உனக்கு ஒரு அந்தஸ்து, சுகம், சும்மிங் பூல், ரெண்டு குட்டிங்க, புட்டி, எலுமிச்சை போட்ட இதெல்லாம் வேண்டாம்?'

விக்ரம், 'முக்கியமில்லை' என்றான். அவன் கண்கள் அலைந்து பாக்டரியின் அத்தனை விஸ்தாரங்களையும் மனத்தில் வாங்கிக் கொண்டன.

'எதுதான் முக்யம் உனக்கு?'

'தேசம்!'

'தேசம்? உன் தேசம் நாசம்யா. உன் தேசம் உனக்காக என்ன செய்யுது? உயிர் போனாப் போவுதுன்னுதானே உன்னை அனுப்பிச்சிருக்காங்க? நான் அமைக்கிறேன் பாரு தேசம். இந்த சலாமியாவில என் தேசம்! பேர் கூட ரெடி. சுகிர்தாலயா. கொடிஎ ஒரு பாதி ஒட்டகம், ஒரு பாதி இட்லரு! மன்னன்யா அவன்! நான் அமைக்கிற தேசத்தில் தினத்துக்கு 25 மணிநேரம் சுபிட்சம்! சனங்கள் மொத்தமே எட்டு லட்சம்! அதுக்கு மேல காயடிச்சர்றது இதப் பாரு, எவ்வளவு பெரிய பாக்டரி அமைச்சிருக்கேன்! உன்னோட அக்னி புத்திரன் மாதிரி வருஷத்துக்கு நூறு செய்து விக்கப் போறேன். தலைமை முறைல ஆட்டம் பாம்! அதுக்குத் தான் உன்மாதிரி துடியான ஆசாமிகள் தேவைப்படுது. நீயும் நானும் ஏறக்குறைய ஒண்ணு! எதுக்கு சும்மா சண்டை போட்டுக் கிட்டு மொட்டு மொட்டுன்னு கட்டுக்கிட்டு? என்னோட சேர்ந்துரு. உன் காலடில உலகத்தையே கொண்டாந்து வெக்க றேன். கூட ஒரு இலவச இணைப்பு, என்ன வேணும் கேளு.'

விக்ரம், 'அக்னி புத்திரனை மரியாதையாத் திருப்பிக் கொடுத்துரு!' என்றான்.

'விடமாட்டப்பா நீ! வேற எதாவது கேளு!'

'உன் உயிர் வேணும்' என்றான் விக்ரம்.

'புடிவாதம்! பைத்தியக்காரப் பயப்பா நீ!' அப்போது ஒரு கண்ணாடிக் கூண்டுபோல இருந்த லிஃப்டின் அருகே நின்றார் கள். 'வா, கண்ட்ரோல் ரூம் போலாம். பாரு, என்ன பளபளன்னு வெச்சிருக்கேன்.'

அப்போது ராஜாவை நடத்தி, அழைத்து வந்தார்கள். ராஜா, சலாமியில் 'என்னை இப்படி நடத்தி அழைத்து வரலாமா? நான் எப்பேர்ப்பட்டவன்!' என்பதுபோல சுகிர்தராஜாவிடம் முறை விட, 'குண்டா, உன் பல்லெல்லாம் புடுங்கியாச்சு. இனிமே நான்தான் ராஜா! சுகிர்த ராஜா! இவனைக் கூட்டிட்டுப் போய் பட்னி போடுங்கடா!'

விக்ரம் எப்போது எப்போது என்று அந்தச் சமயத்துக்காக் காத்திருந்தான். தொழிற்சாலை பூரா அங்கேங்கே காவலர்கள். சும்மா வீரம் காட்டி அலறி அடித்துக்கொண்டு ஓடுவதில் அர்த்த மில்லை. அக்னி புத்திரன் எங்கே? இப்போது எங்கே வைத்திருக் கிறான்? அதை சுகிர்தராஜா என்ன செய்யப் போகிறான்? அது முதலில் தெரியவேண்டும். ஒண்டியாள் என்ன செய்ய முடியும்? எப்படிக் காப்பாற்ற முடியும்? இந்திய அரசாங்கத்துக்குத் தகவல் கொடுக்க நமக்குச் சந்தர்ப்பமும் இல்லை. சமயமும் இல்லை. என்ன நடக்கிறது பார்க்கலாம். இதுவரை என்னை உயிருடன் வைத்திருப்பதே பெரிசு...

லிஃப்ட் மார்க்கமாக சுகிர்தராஜாவும் விக்ரமும் அந்த கன்ஸோல் அறைக்குள் நுழைந்தார்கள்.

ஆச்சரியமாக இருந்தது. சுவர் பூரா டெலிவிஷன் திரைகளில் பாக்டரியின் பல்வேறு இடங்களில் கேமரா வைத்து மானிட்டர் செய்யும் காட்சிகள் தெரிந்தன. நட்ட நடுவே கண்ணாடிக் கூண்டு போல இருக்க சுகிர்தராஜா கைகொடுக்க அதுமேலே உயர்ந்தது.

'உங்கூட அழைச்சிட்டு வந்தியே கம்ப்யூட்டர் குட்டி, என்ன பேரு? ப்ரீத்தி! அவ எங்கங்கறே?'

கண்ணாடிக்கூண்டு உயரத்தில், உள்ளே கன்ஸோல் சாதனங்கள் தெரிந்தன. நான்கு மானிட்டர்கள், அவற்றின் திரையில் பற்பல விநோதமான எழுத்துகள், பிம்பங்கள். விக்ரமுக்கு அந்த அமைப்பை உடனே அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. ராக்கெட்டை அனுப்பும் கேந்திரம்! அதன் பாதையைக் கட்டுப்படுத்தும் கேந்திரம்! அதன் கன்ஸோல் ஒன்றின் அருகில் ஓவரால் அணிந்து...

'ப்ரீத்தி!' என்று வியப்புடன் கூப்பிட்டான் விக்ரம். அவள் திரும்பிப் பார்த்து விக்ரமைக் கண்டதும் ஏளனமாகச் சிரித்து, 'வாய்யா காதல் இளவரசா' என்றாள்.

'ப்ரீத்தி! வாட் நான்சென்ஸ் இஸ் திஸ்! எழுந்து வா!'

'என்மேல் இனிமே உனக்கு அதிகாரம் கிடையாது! சொல்லுங்க கலி சார்!'

கலி, 'ஆ ஆங்! இப்ப அவ என் கட்சி' என்றான்.

'ப்ரீத்தி! திஸ் இஸ் ட்ரீஸன். நாப்பது வருஷம் ஆர் ஐ கிடைக்கும்!'

'யாரய்யா இந்தக் குட்டிய விடப்போறாங்க? என்னம்மா? நம்ம கட்சி பரவாயில்லையா?'

'சூப்பர் கலி!'

'கட்சி மாத்தறதே தனி இன்பம்தாம்பா! உங்க ஊர் ராக்கெட்டை உங்க ஊர்மேலேயே விடப்போறேன்! அதுக்கு உங்க ஊர் பொம்பளையையே ப்ரோக்ராம் பண்ண வெச்சிருக்கேன்' என்று ப்ரீத்தியை முகர்ந்து பார்த்து, 'வாசனையா இரு! என்ன சோப்பு?' என்றான்.

விக்ரம் ப்ரீத்தியை முறைத்துப் பார்த்தான். அவள் இன்னும் சந்தோஷமாகச் சிரித்துக்கொண்டிருந்தாள்.

'ப்ரீத்தி, எதுக்காக இந்தத் துரோகம்? ஏன்?'

'நீ எனக்குச் செய்த துரோகம்! ராஜகுமாரி கட்சில சேர்ந்து ஆடிப் பாடி, படுத்துக்கிட்டு, என்னையெல்லாம் எனக்கு முன்னாலயே செஞ்சா? ஆமய்யா, பொறாமைதான்யா எனக்கு!'

'ப்ரீத்தி, அதெல்லாம் நடிப்பு!'

'கலி சார், என் மனசு எப்படி நொந்தது தெரியுமா?'

'எனக்கா தெரியாது? மனசு நோகடிக்கிறதில் ஸ்பெஷலிஸ்ட் நான்! இந்த விக்ரம் பேச்சையெல்லாம் கேக்காதே! ஆட்டம் குளோஸ் இந்த ஆளு! எல்லாம் சரியாத்தானே இருக்குது?' என்று மானிட்டரைப் பார்த்தான். ப்ரீத்தி அந்தக் கீபோர்டில் கவனமாக, 'ஆல் செட் இன்னும் 10 நிமிஷத்தில் ராக்கெட் புறப்பட்டுடும்.'

கலி கையால் ராக்கெட் டேக் ஆஃப் போல காட்டி, 'விர்ர்ர்ரூம்! டில்லி!' என்றான்.

'யூ மஸ்ட் பி ஜோக்கிங்.'



'நோ, ஐம் நாட்!' விக்ரம் கம்ப்யூட்டரின் கீபோர்டை இயக்கி அதன் மைக்கில் பேசினான். 'டில்லிக்கு இலக்கு வைத்திருக்கிறது நிசமா?'

கம்ப்யூட்டரின் மெஷின்தனமான குரலில், 'நிசமே நிசமே!' என்றது.

'மை காட்! ஆர் யூ மேட்?' ப்ரீத்தியின்மேல் பாய்ந்து அவள் கழுத்தை நெரிக்கையில் 'கலி சார்!' என்று அவள் அலறினாள்.

கலியின் ஆட்கள் வந்து அவனை விடுவிக்க விக்ரம் மூர்க்கமாகப் பிரிக்கப்பட்டான். அதற்குள் ப்ரீத்தி விக்ரமின் கையில் ஒரு காகிதத்தை அழுத்தியிருந்தாள். தன் மூடின முஷ்டிக்குள் அதை உணர்ந்தான்.

'பொம்பளைகிட்ட காட்டுறியா வீரத்தை! பதினைஞ்சி நிமிஷம் இருக்குது. அதுக்குள்ள ராயருக்குத் தகவல் சொல்லணும்னா ஏற்பாடு செய்யலாம். எல்லாம் தோத்தாச்சு! மிஷன் பெயிலியர்னு சொல்லி அனுப்பு. அந்த ஆட்களை விடுதலை பண்ணிட்டாப் போதும். பணம் கூட பாங்கு திறந்தப்புறம் கொடுக்கலாம்! ராக்கெட் டில்லிக்குக் குறிபார்த்து சித்தமா இருக்குது. பின் பக்கமா எண்ணிக்கிட்டு இருக்கு. செகண்டுகள் கழியுது! சொல்லு என்ன!'

விக்ரம், தன் கையில் அவள் என்ன வைத்திருக்கிறாள் என்பதை ஆராய வேண்டும்; அதற்குச் சமயம் வேண்டும். பதினைந்து நிமிஷங்களில் எவ்வளவோ சாதிக்கலாம். எவ்வளவோ!

விக்ரம் சுற்றுமுற்றும் பார்த்தான். திடுதிப்பென்று தன்னைக் கட்டிப்பிடித்திருக்கும் காவலாளைத் தள்ளிக்கொண்டு எதிரே தெரிந்த வாசலில் நுழைந்து ஓடினான். அவனைத் தொடர்ந்து காவலர்கள் ஓடுவதை கலிராஜா தடுத்து நிறுத்தினான்.

'ஓடட்டும்! எங்க ஓடறான்? இங்கிருந்து டிவி வழியா எல்லா துவாரங்களும் தெரியுது. எங்க போறான்? பார்க்கலாமே? கொஞ்சம் ஓட விட்டுட்டு எதாவது ஒரு இடத்தில கதவு போட்டுட்டாப் போவுது. ரிமோட் கண்ட்ரோல் பூரா இங்க இருக்கு! உங்க வேலையைப் பாருங்க. ரேடியோவில் செய்தி சொல்லியிருக்கு இல்லை?'

விக்ரமுக்குத் தன்னை யாரும் பின்தொடராமல் இருப்பது விநோதமாக இருந்தது. ஒரு இடத்தில் ஒருவிதமான சுரங்க வாசல் போல இருந்தது. சுற்றும் முற்றும் மேலும் கீழும் பார்த்தான். டிவி கேமரா எதும் தென்படவில்லை. ப்ரீத்தி தன் கையில் திணித்த காகிதத்தைப் பிரித்துப் பார்த்தான். எபி3, ஏ5, 00 என்றெல்லாம் எழுதியிருந்தது. ராக்கெட்டின் உள்ளே பதித்திருக்கும் குட்டி கம்ப்யூட்டரின் சங்கேதக் குறிப்புகள் ஆணைத் தொடர்! இந்தக் குறிப்புகளை அதில் மாற்றி எழுத வேண்டும் என்று தோன்றியது. அதற்கு அக்னி புத்திரன் எங்கே என்று தெரியவேண்டும்.

அந்தச் சுரங்க வாசலின் இறுதியிலிருந்து அவன் வெளி வருவதை கதிர்ராஜா மானிட்டரில் பார்த்தான்.

'ஓடட்டும். எங்க போறான் பார்க்கலாம். விட்டுப் புடிக்கணும்! அதிலதான் த்ரில்.'

'கொன்னுரலாம் அய்யா!' என்றான் காவலன்.

'நாட் எட்! இன்னும் இல்லை. ஹீரோ அய்யா குடுத்த காசுக்குக் கொஞ்சம் வேலைத்தனம் காட்ட வேண்டாம்?'

விக்ரம் அந்த பிரம்மாண்டமான ஹாலுக்குள் வந்தான். கறுப்பு உடை அணிந்த காவலர்கள் சுறுசுறுப்பாக இருக்க, ஒரு மிஷினின் பின்னால் ஒளிந்துகொண்டான். இந்தக் காவலர்களில் ஒருவனைச் சட்டென்று பின்னாலிருந்து கட்டிப்பிடித்து இழுத்தான். சற்று நேரத்தில் விக்ரம் உடை மாற்றிக்கொண்டு மற்ற காவலர்களுடன் வெளிப்பட்டான். பெரிய ஹாங்கருக்கு வந்தபோது மற்றப் பேர் மேலே பார்த்துக்கொண்டிருப்பதைக் கவனித்தான். திமிர்ந்து பார்த்ததில் அக்னி புத்திரன் மேலே அந்தரத்தில் தொங்கிக்கொண்டு மெல்ல மிஷின் இயக்கத்தால் நகர்ந்துகொண்டிருந்தது.

'எங்கய்யா அவன்?' என்று கதிர்ராஜா அத்தனை டிவி திரைகளிலும் தேடினான். விக்ரம் இப்போது கீழேயிருந்து பார்த்தால் மற்றவர்களுக்குத் தெரியாமல் அக்னி புத்திரனின் மேல் பாகத்தில் பல்லி மாதிரி தொற்றிக்கொண்டிருந்தான். தன் கையில் கசங்கியிருந்த காகிதத்தைப் பிரித்தான். ராக்கெட்டின் மேற்பகுதியில் ஒரு சின்ன மூடிபோல் இருந்ததைத் திறந்தான். உள்ளே எலக்ட்ரானிக் சமாசாரங்களின் இடையில் அந்த ராக்கெட்டின்



போக்கைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு கம்ப்யூட்டர் சிப் இருந்தது. அதில் இருந்த சிறிய கீ போர்டில் விக்ரம் ப்ரீத்தி எழுதிக்கொடுத்த காகிதத்திலிருந்த மாற்று ப்ரோக்ராமின் எண்களை அமைத்தான்!

'எங்கய்யா அவன்?' மாற்று ப்ரோக்ராம் பாதி அமைத்துக்கொண்டிருக்கும்போது அந்தக் காகிதம் விக்ரமின் கைகளிலிருந்து நழுவிக் கீழே பறந்தது. விக்ரம் அதைப் பிடிப்பதற்குள் வழுக்கிச் சரிந்து கீழே விழுந்தான், காவலர்கள் மத்தியில்!

## 20

நழுவி விழுந்தவன் கழுத்தருகே, முகத்தருகே, மார்பில் என்று தேவைக்கதிகமாகத் துப்பாக்கி முனைகள் பதிக்கப்பட்டு விக்ரம் படுத்தவாறே இரண்டு கைகளையும் உயர்த்த, அவன் கைகள் முதுகுப்பக்கம் மடக்கப்பட்டு மறுபடி கதிர்ராஜாவின் கண்ட்ரோல் ரூமுக்கு அழைத்துச் செல்லப்பட்டான். கொஞ்சம் அசட்டுத்தனமாக உணர்ந்தான்.

கதிர்ராஜா டி.வி. மானிட்டர்கள் மூலம் அவன் பிடிபடுவதையும் கைது செய்யப்படுவதையும் அழைத்து வரப்படுவதையும் பார்த்து மகிழ்ந்துபோய், 'எங்கே போறான்? மாட்டிக்கிட்டானா இல்லையா பாரு. ப்ரீத்திக் குட்டி' என்று அவனைக் கண்ணடித்தான்.

ப்ரீத்தி கலவரப்பட்டான்.

கதி மைக்கில், 'கொண்டாய்யா அந்தாளை, ராக்கெட் டேக் ஆப் ஆகறதைக் கண் குளிரப் பார்க்கட்டும். எல்லாம் சரியாத்தானே இருக்குது?' என்று ப்ரீத்தியைக் கேட்டான்.

ப்ரீத்தி, 'எல்லாம் சரிதான்.' என்றான் பயத்துடன். 'அவர்... அவர்... வந்துட்டாரோ?'

கதி கைகளைத் துடைத்துக்கொண்டு, 'இனி தாமதிக்க வேண்டாம். சொன்ன பேச்சைக் கேக்கல இல்லை? லெட் மி டு இட்! லெட் மி டு இட்!' எதிரே கன்ஸோலில் சிவப்பு விளக்குகள் பளிச்சென்று ஒளிர, கதிர்ராஜா ஒரு சிவப்பு ஸ்விட்சை மிகையாக அழுத்தினான். பின்னால் விக்ரம் கொண்டுவரப்பட்டான்.



திரும்பி அவனைப் பார்த்து, 'வாங்கய்யா, எங்க எலி மாதிரி புகக்கு புகக்குன்னு ஓடினே? பாரு. என்ன ஆயிருக்கு பாரு?'

அப்போது மிஷின் குரலில் கம்ப்யூட்டரிடமிருந்து, 'ராக்கெட் ஆர்ம்ட் கவுண்ட்டவுன் ஸ்டார்ட் 59, 58, 57...'

'பார்த்தியாய்யா? எங்கிருந்து எங்க கொண்டாந்துட்டேன் பாரு! என் பேச்சைக் கேக்காதவங்களுக்கு என்ன ஆகும்னு பார்த்துக்கிலே. இதோ ஜோரா டில்லி! இருபது நிமிஷத்தில ராஷ்டிரபதி பவன், நார்த் ப்ளாக்கு எல்லாம் தூள் தூளா வெடிச்சுரும்! கதிர்ராஜா விரல் நுனியில் எத்தனை பவர்!'

விக்ரம் நிதானமாக, 'அது டில்லிக்கும் போகாது. நெல்லைக்கும் போகாது' என்றான்.

கதி அவனைச் சந்தேகத்துடன் பார்த்து, 'என்ன சொல்ற? விளையாட்டா? இந்த வேளையில ஜோக்கா?'

'இப்பத்தான் ராக்கெட்டுல இருக்கிற ப்ரொக்ராமை மாத்திட்டு வர்றேன். பத்திரமா கடல்ல போய் விழும்படியா!'

'என்னது! நிசமாவா?'

கம்ப்யூட்டர், 'நிசமா நிசமா' என்றது.

'ஷட்டப்' என்றான் கதி.

ப்ரீத்தி விக்ரமை ஆர்வத்துடன் அணுகி, 'மாத்திட்டியா? கை குடு!'

கதி அவனைச் சந்தேகத்துடன் பார்த்து, 'ஏய், ஏய்! என்ன நீ? யார் கட்சி?'

ப்ரீத்தி, 'கட்சி மாறிட்டேன்' என்றான்.

விக்ரம், 'கதிர்ராஜா! உனக்குச் சாகறதில ஆசையில்லைதானே?' என்றான் நகத்தைப் பார்த்துக்கொண்டு.

'என்ன பைத்தாரக் கேள்வி! எனக்கு அந்த ஆசை கெடையவே கெடையாது!'

விக்ரம் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து, 'இன்னும் பத்து நிமிஷத்தில இந்தக் கட்டடம் வெடிக்கப் போறது. டைனமைட் வெச்சாச்சு!'

கதிர்தராஜா தெர்வலாகச் சிரித்து, 'பொய்! பொய் சொல்ற தானே?' என்றான்.

'வேணும்னா வெய்ட் பண்ணிப் பாரு.'

'சரி, எங்க வெச்சிருக்கு? சொல்லிடு கண்ணு.'

'அதை ஏன் சொல்றேன்! எனக்கு என்ன குடுமியா?'

அருகில் இருக்கிறவர்கள் அவன் சொல்வதைக் கேட்டுச் சற்று நழுவத் தொடங்கினார்கள்.

'ஏய், இருங்கடா! ஏய்! இவன்தான் பொய் சொல்றான்னா... கொல்லுங்கடா இவனை! கொல்லுடா, கொன்னுர்றா.' சுகிர்த ராஜா இப்போது குழப்ப நிலையில் இருந்தான். எத்தனையோ பேரை என்னென்னவோ தண்டிக்கவேண்டும். அவகாசம் இல்லை. அவன் சொல்வது பொய்யா, நிசமா? எப்படிக் கண்டு பிடிப்பது?

'என்னைக் கொன்னுட்டா எந்த இடத்தில் வெடி வெச்சிருக் கேன்னு யாருக்கும் தெரியாமப் போயி அதை அணைக்கிறது கஷ்டமாயிரும்.'

சுகி மறுபடி சிரித்து, 'பொய் சொல்ற பாத்தியா? வெடி வெச்சா நீயும்தானே என்கூடச் சாவ?'

'எனக்குச் செத்தா பரவாயில்ல, உனக்கு?'

'என்னடா போட்டுக் குழப்புறே? நிசமவா?'

கம்ப்யூட்டர், 'நிசமா நிசமா' என்றது.

'கம்மார்றா கம்ப்யூட்டர் கம்மனாட்டி! சொல்லிரு. எங்க வெச்சிருக்கே. சொல்லிரு விக்கி, விக்கு, விக்கோபா!'

'நான் சொன்னாலும் இப்ப டிஃப்யூஸ் பண்ண நேரமிருக்காது.'

சுகி கலவரத்துடன், 'அய்யோ, எத்தனை நிமிஷம் இருக்கு?'

'ஆறு நிமிஷம்.'

'கொஞ்சம் தங்கம் எடுத்துட்டுப் போகலாமா?'

'அஞ்சு நிமிஷம் அம்பத்தஞ்சு செகண்டு!'



நிசமாவே தியாகம் பண்ணுவியா? தேசம் அவ்வளவு ஒஸ்தி யாடா உனக்கு?'

'நாப்பது.'

'நான் என்ன செய்யணும்... என்ன செய்யணும் சொல்லித் தொலைரா!'

'நத்திங்! ட்ராப் டெட்! அவ்வளவ்தான்! நான், நீ எல்லாரும் டெட். விஷ்க்! தி ஷோ இஸ் ஓவர். சுகிர்தராஜா, ஓடு! ரன்! ஓடுரா செம்மனாட்டி!'

சுகி சற்றுச் சந்தேகமாகவே ஓடினான். மற்றவர்கள் யாவரும் அதற்குள், 'வெடிக்கப் போவது! வெடிக்கப்போவுது!' என்று கத்திக்கொண்டு ஓட, விக்ரம் ஒரு துப்பாக்கியை உருவி சுகிர்த ராஜாவின் மேல் குறிவைத்தவன், 'எதுக்குச் சுடணும்? கொஞ்ச நேரத்தில வெடிச்சுச் சாவப் போறியே!' என்றான்.

அப்போது கண்ணாடிக்கு வெளியே கலவரத்தைக் கவனித்தான். சுகிர்தராஜா அமைத்த பாக்டரியின் பெரிய கதவுகள் திறக்கப் பட்டு, குதிரை வீரர்கள் உள்ளே விரைவது தெரிந்தது. ராஜகுமாரி இனிமாலி ஒரு குதிரைமேல் அந்தப் புரட்சிப் படையை அழைத்துக்கொண்டு துடிப்புடன் வருவது தெரிந்தது.

'கமான்டோஸ்!' என்றான் விக்ரம்.

'விக்ரம், அந்தப் ப்ரொக்ராமை மாற்றிவிட்டாயா?'

'ஆம்.'

'பாம் வைத்திருப்பதாகச் சொன்னது பொய்தானே.'

'இல்லை. நிசமாகவே வெச்சிருக்கேன். இன்னம் ஒரு நிமிஷம் நாப்பது செகண்டில ஓடலைன்னா நாமும் காலி!'

கம்ப்யூட்டர், 'நிசமா நிசமா' என்றது மறுபடியும்.

விக்ரம் அதன் முகத்தில் குத்தினான். கண்ணாடிகள் சிதறி, பல்லாய்க் என்று புகை வந்தது. 'கம்ப்யூட்டர்களையே ஒழித்துக் கட்டணும். வா ஓடலாம்.'

ப்ரீத்தி, 'வெய்ட்!' என்று அவனுடன் ஓடினாள். இமே மெயின் பாக்டரியில் ஒரே குழப்பம். ராஜகுமாரி சகட்டுமேனிக்கு

ஜாக்கிரதையாக இங்கும் அங்கும் வாள் வீசிக் குத்திக் கொண்டிருந்தான். மதகுரு தன் வேஷ்டி நழுவினது தெரியாமல் ஓட அவனைப் பத்து பேர் தூக்கிப் பிடித்து ராஜாவிடம் கொண்டு போனார்கள். சுகிர்தராஜா இதனிடையில் இங்கே அங்கே என்று பார்த்து இரும்புப் படிகளில் அவசரமாக இறங்கி, நிறுத்தியிருந்த ஹாங்கர் வாசலை அணுகினான். ராஜகுமாரிக்கு எதிர்வரும் வெடியைப் பற்றி எச்சரிக்க வேண்டியது அவசர காரியமாகிவிட, விக்ரம், 'ஆல் ஆஃப் யூ கெட் அவுட். இந்த இடம் வெடிக்கப் போகிறது!' என்று இரைச்சலிட்டான்.

துபாஷ் அதை மொழிபெயர்த்துக் கத்த, தமிழ் ராணியும் தடுமாறி மொழிபெயர்க்க, அவர்களுக்கு உதயமாவதற்குள் கீழே கிடந்த ஒரு குத்தீட்டியால் ராஜா ஒரே செங்குத்தில் மதகுருவைக் கொன்று அவன்மேல் துப்பினார்.

விக்ரம் அவர்களை, 'ஓடு ஓடு' என்று எச்சரிக்க, சுகிர்தராஜா முதலில் நழுவ இருந்தவன் தன்னை நோக்கிக் கோபத்துடன் வரும் சலாமியாக்காரர்களைக் கவனிக்க, எப்படித் தப்புவது என்று தவித்தான்.

அப்போது அந்தப் பக்கம், 'விக்ரம், விக்ரம்!' என்று கூப்பிட்டுக் கொண்டு ஓடிவந்த ப்ரீத்தியைப் பார்த்து, 'நல்லவேளை, ஆப்பட்டம்மா நீ!' என்று அவளை இழுத்துக்கொள்ள, விக்ரம் அவன்மேல் வைத்த குறியை விலக்க வேண்டியிருந்தது. மேலும் நேரமில்லை! ப்ரீத்தியைத் தனக்குக் கவசமாக வைத்துக்கொண்டு சுகிர்தராஜா அந்த ஹாங்கரின் மேற்பகுதிக்கு ஓடினான். தாக்குகிறவர்கள் தத்தம் பத்திரத்துக்கு ஓட வேண்டியிருந்தது. ஹாங்கரில் இரண்டு பேர் பிரயாணம் செய்யக் கூடியதாக ஒரு குட்டி வெள்ளை பிளேன் காத்திருந்தது.

ப்ரீத்தியைத் தாறுமாறாக இழுத்துக்கொண்டு சுகிர்தராஜா அந்த விமானத்தின் கதவைத் திறந்து அதன் இடது பக்க சீட்டில் ப்ரீத்தியைத் திணித்து வலது பக்கத்தில் ஏறிக்கொண்டான். ஒரு சில செகண்டுகளில் அதை ஸ்டார்ட் செய்து ஹாங்கருக்கு வெளியே டாக்ஸி செய்தான். விக்ரம் இதை எதிர்பார்க்கவில்லை. அவனைத் தூக்கிக்கொண்டு ஓடினான்.

விமானம் கச்சா முச்சா என்று குதித்துக் குதித்து ஹாங்கருக்கு வெளியே வந்து அதன் முன்னே இருந்த சற்றுச் சமமான



பிரதேசத்தில் வேகம் பிடித்தது. விக்ரம் ஓட முடியாது என்று தீர்மானித்து அருகே கிடைத்த ஒரு குதிரை வீரனிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டு சட்டென்று குதிரை ஏறி அந்த விமானத்தைத் தொடர்ந்தான்.

அந்த வெள்ளையின் த்ராட்டில் அதிகமாகவே, சுகிர்தராஜா சிரித்துக்கொண்டே கண்ட்ரோல் காலத்தைப் பின்வாங்க, அது தத்தி, கொஞ்சம் உயரம் பெற, விக்ரம் இரண்டு முறை முயன்று அதன் சக்கரத்தைத் தொட முடிந்தது. அடுத்த முறை பற்ற முடிந்தது. விமானம் இப்போது பத்துப் பதினைந்து அடி உயரம் பெற்று மேலே ஏறத் தொடங்க, விக்ரம் குதிரையைப் புறக்கணித்து விமானத்தின் சக்கரத்தில் தொற்றிக்கொண்டான்.

சுகி களிப்புடன், 'பாத்தியா, நான் ஜராசந்தன் மாதிரி. என்னைக் கொல்ல முடியுமா? ஹை... ஆ' என்று உற்சாகத்துடன் ப்ளேனின் கண்ட்ரோல் காலத்தை இன்னும் பின்னால் சரிக்க, அது ஜிவ்வோ ஜிவ்வென்று உயரம் பெற்றது. ப்ரீத்திக்குக் குலை நடுங்கியது.

சுகிர்தராஜா ஜன்னல் வழியாகக் கீழே பார்க்க காலிக் குதிரைதான் தெரிந்தது. 'ஆள் அவுட்டுன்னு நினைக்கிறேன்.'

கீழே ஹாங்கரிலிருந்து ராஜாவும் ராஜகுமாரியும் மற்ற குதிரை வீரர்களும் வெளியே வர, டிடும் என்று சப்தத்துடன் பெரிதாக வெடித்து, ஒரு நெருப்புப் பிழம்பு சுழன்று சுழன்று வானம் நோக்கிச் சென்றது. அதை விக்ரமும் பார்த்தான்.

சுகிர்தராஜா வலது பக்கம் திரும்பியபோது விக்ரம் வெளியே யிருந்து எட்டிப் பார்த்து, 'ஹாய் சுகி!' என்றான்.

# 21

வானத்தில் எவ்விச் சென்ற முக்கியர்களை அந்தரத்தில் விட்டு விட்டு அவர்கள் விட்டுச் சென்ற சலாமியாவில் என்ன ஆயிற்று என்பதைப் பார்க்கலாம். மதகுருவை எல்லாரும் போட்டு மிதித்துக் கீமா பண்ணிவிட்டார்கள். ராஜாவுக்கு அவன் இத்தனை நாள் தட்டில் துப்பினது ஆத்திரம். அதனால் அந்த உடலின்மேல் (உடலா அது? ரத்தக் கடல்!) தூ என்று ஒரு மஹா துப்பல் துப்பிவிட்டு ஒரு குதிரைமேல் ஏறிக்கொண்டு தெருவெல்லாம் கொடிகட்டிப் பறந்தார். ராஜகுமாரி இனியாளி ஹபாபி தன் பங்குக்கு ஒரு குதிரைமேல் ஏறிக்கொண்டு விசுவாசமுள்ள கமாண்டோ வீரர்களுடன் துடிப்புடன் வீதிவலம் வர எல்லாருக்கும் மதகுருவின் பிடிப்பிலிருந்து விடுதலை கிடைத்த மகிழ்ச்சியால் திருவிழாத்தனமாக வீதியில் கண்டபடி ஓடினார்கள். வானத்தை நோக்கி வணங்கினார்கள். அரச குடும்பத்துக்கு மட்டும் என்றிருந்த கோயிலில் எல்லோரும் உள்ளே நுழைந்தார்கள். அதன் பின்பக்கத்தில் கதிர்ராஜா ரகசியமாகக் கட்டியிருந்த ராக்கெட் தொழிற்சாலை, விக்ரம் வைத்த குண்டின் வெடிப்பின் விளைவாகப் பிளந்து தூள்தூளாகியிருக்க, சலாமியா முழுவதும் பொதுவாகவே உற்சாகம் பரவி எல்லோரும் தெருவில் இலியா! இலியா! (விடுதலை! விடுதலை!) என்று கூவிக்கொண்டு நடனமாடினார்கள்.

ராஜகுமாரி, விக்ரம் சென்ற திசையை நோக்கி மேலே பார்த்தாள். நீலவானில் அந்த விமானம் மறைவதைக் கவனித்தாள். அவள் கண்களில் கண்ணீர் உருண்டது.



அதே சமயம் இந்தியாவின் தென்னாட்டுக் கடற்கரையில் பெயர் சொல்ல முடியாத ஓர் இடத்தில் இருந்த ட்ராக்கிங் ஸ்டேஷனில் ஒருவிதமான எச்சரிக்கை நிலை ஏற்பட்டது. அதில் இருந்து பெரிய ரேடார் நிலையத்தின் உன்னிப்பான கண்களுக்கு ஒரு புதிய எக்கோ கிடைத்தது. அதை இனம் கண்டுகொள்ளச் சற்றுத் திணறியதால் ஆட்டோமாடிக்காக பீப் பீப் என்று அலர்ட் எச்சரிக்கை நிலைக்குச் சென்றது.

அங்கே ட்யூட்டியில் இருந்தவர் திரையைக் கவனித்து டெலிபோனை எடுத்தார்.

'சார்! அடையாளம் கண்டுபிடிக்க முடியாத நிலையில் ஒரு பிரதிபலிப்பு' என்றார்.

'எங்கிருந்து வருகிறது?' என்றது மறுமுனைக் குரல் (ஜிவி ராவ்.)

'சலாமியா!'

'ஓ மை காட்! புட் இட் ஆன் மானிட்டர்!'

'எங்கே போகிறது?'

'சார்! இப்போதைக்கு அது புது டில்லியை நோக்கிப் போவதாகத் தெரிகிறது.'

'மை காட்! அக்னி புத்திரனாகத்தான் இருக்கவேண்டும். இந்த விக்ரம் என்ன செய்கிறான்?'

அந்த இருண்ட அறையில் ஜிவி ராவ் அவசரமாகக் கூப்பிட்ட ராணுவ, கடற்படை, விமான அதிகாரிகள் அந்த மானிட்டர் திரையையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதில் கிராபிக்ஸில் ஒரு இந்திய தேசப்படம் வரையப்பட்டு சலாமியாவின் திசையிலிருந்து ஒரு ராக்கெட் வடிவம் மெல்ல மெல்ல புறப்பட்டு பீப் பீப் என்று ஒவ்வொரு பீப்புக்கும் ஒரு எவ்வளவாக முன்னேறியது. கம்ப்யூட்டர் அதன் சமீப எதிர்காலப் பாதையை வரைந்து காட்டியதில் அது செங்குறியாக டில்லியில் போய் இறங்கியது!

என்ன செய்வது? இன்னும் இருபது நிமிஷத்தில் ராக்கெட் டில்லியை அடைந்துவிடுமே?

'அய்யோ, எப்படி அது சாத்தியம்? அதை டில்லிக்குச் செலுத்துவதற்கு ப்ரொக்ராம் பண்ணவேண்டுமே?'

'ப்ரோக்ராம் பண்ணியிருக்கிறார்கள். கதிர்தாராஜா எப்படியோ அதன் பாதையை நிர்ணயிக்கும் வித்தையைக் கற்றுக் கொண்டு விட்டான் போலிருக்கிறது!'

என்ன செய்யலாம் என்று கையைப் பிசைந்தார் ராய்.

தேவி ஆள் வழக்கம் போல், 'மிஸ்டர் ராய்! என்ன செய்வது? உடனே தகவல் தெரிவிக்க வேண்டியதுதான். முக்கியஸ்தர்களை வது விலகட்டும். என்ன தயக்கம்? எடுங்கள் வெப்பு போனை!'

'ஒரு நிமிஷம் பார்க்கலாமே!'

'வாட் நான்சென்ஸ். ஒரு நிமிஷமாவது, ஒவ்வொரு நிமிஷமும் முக்கியம் இப்போது. ராய், டோண்ட் பி ஸில்லி. உங்கள் விக்ரமை அனுப்பியது தப்பு என்று அப்போதே அடித்துக்கொண்டேன், கொட்டுவாயில் வைத்து...'

'என்னால் நம்பவே முடியவில்லை. விக்ரம் தோல்வி அடைந்திருக்கவே முடியாது.'

'உஷாதீர்! தோல்விக்கு முழுச் சாட்சியாகத் திரையில் தெரிகிறது! எனக்கு அந்த டெலிபோனைத் தொட அதிகாரம் இல்லை. இல்லையெனில்...'

ராய் இப்பவும்கூட நம்பிக்கையில்லாமல் திரையைப் பார்த்தார். பீப் பீப் என்றது. மேலே எழுத்துக்கள். 'டார்கெட் நியூ டெல்லி லாட்டிட்யூட் லான்ஜிட்யூட் ரெட் அலர்ட்!' என்றது.

'நாசம்! எல்லாமே நாசம்!'

விமானப் படைக்காரர், 'ராய் உடனே சொல்லுங்கள். விமானப் படையை அனுப்பி வைக்க எனக்கு அந்த நிமிஷமாவது சமயம் வேண்டும்!'

'ஜெண்டில்மென், கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம்!'

'ராய், உனக்குப் பைத்தியமா என்ன? இனி என்ன தாமதம்? ராக்கெட் டில்லியை நோக்கி வருகிறது. எதற்காக, யாருக்காகக் காத்திருக்க வேண்டும்?'

'விக்ரம் இவ்வளவு மோசமாகத் தோல்வி அடைந்திருப்பான் என்று தோன்றவில்லை. ஸம்திங் மஸ்ட் ஹாவ் ஹாப்பண்ட்.'



'உங்கள் விக்ரம் இப்போது உயிரோடு இல்லை என நினைக்கிறேன்!'

உயிரோடுதான் இருந்தான். ஆனால் ஒரு மாதிரி ஊசலாடிக் கொண்டிருந்தான். அந்த லெஸ்னா விமானத்தின் அண்டர் கேரேஜைப் பிடித்துக்கொண்டு இங்கும் அங்கும் அதன் இறக்கை அலைக்கழிப்பைச் சமாளிக்க, கதிர்தாராஜா அவனை விமானத்திலிருந்து உதிர்க்கப் படுபிரயத்தனம் செய்து கொண்டிருந்தான். விக்ரம் உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு தொங்கத் தொங்க, 'ஏண்டா டேய், கரப்பாம்பூச்சி! ஷார்ட் கட்டில வீட்டுக்குப் போயேண்டா!' என்று கண்ட்ரோல் காலத்தை இடம் வலமாக ஆட்டினான். ஆட்டத்திலும் நடுக்கத்திலும் ப்ரீத்திக்கு லேசாக மயக்கம் வந்தது. கதிர்தாராஜா என்னதான் முயன்றும் விக்ரம் விடுபவனாக இல்லை. விமானம் கள்ளு குடித்ததுபோல இங்குமங்கும் மேலும் கீழும் கிடைத்த திசையெல்லாம் பறந்துகொண்டிருந்தது. அதன் இஞ்சின் சிங்கம்போல உறும, நீல வானத்தில் சர்க்கஸ் பண்ணியது. கதிர்தாராஜா யோசித்தான். தன் சீட்டுக்குக் கீழே இருந்த பாராசூட்டை எடுத்தான். அதன் சுலபமான வார்ப் பட்டைகளை முதுகில் இழுத்து அமைத்துக் கொண்டான். அதன் ரிப் கார்டைப் பார்த்துக்கொண்டான். சட்டென்று கதவைத் திறந்தான். காற்று அலையடிக்க, 'கதாநாயகனும் நாயகியும் ஒண்ணா மோட்சத்துக்குப் போங்க' என்று சொல்லிவிட்டு, 'குட் பை விக்ரம்! ரொம்ப முயற்சி பண்ணிப் பார்த்துட்ட. மறுபடி சந்திக்க வேண்டாம்' என்று கதவைத் திறந்துகொண்டு தொபக் என்று குதித்துவிட்டான். உருண்டு உருண்டு அவன் கீழே விழ, பத்திரமான சமயத்தில் பாராசூட்டின் ரிப் கார்டை விடுவித்தான்.

விக்ரம் தன் காதுகளின் இரைச்சலில், குளிரில், வேகத்தில் நடந்தது என்ன என்று புரிவதற்கே சில செகண்டுகள் ஆயின.

கதிர்தாராஜா விமானத்தைப் புறக்கணித்துவிட்டுப் பாராசூட்டுடன் குதித்துவிட்டான் என்பது புரிவதற்குமுன் மாலுமி இல்லாததால் விமானம் கன்னாபின்னா என்று மூக்கை பூமி நோக்கி ஒரே பாய்ச்சலாக விழுவதைக் கவனித்தான். ப்ரீத்திக்கு பிரக்ஞை வந்து அலறியது அந்த இஞ்சின் சப்தத்தையும் மீறிக் கேட்க, விக்ரம் மண்டையில் ரத்தம் பாய, கீழே செல்வதற்குள் என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்காமல் உள்ளுணர்வு சொல்லும் செயல்களைச் செய்தான். கதவைத் திறந்தான். விமானத்தின்

உயரம் ஆயிரம் ஆயிரமாகச் சரிய ப்ரீத்தியை விடுவித்து அவனைக் கட்டிக்கொண்டான். விழுந்தால் இரண்டு பேரும் விழலாம் என்று.

சுகிர்தராஜா அவர்களுக்கு முன்பே பாய்ந்தவன் பாராசூட் திறந்து விழும் வேகம் தடைப்பட்டு மெல்ல மெல்ல மிதக்க ஆரம்பிக்க, அவன் முன்னே குதித்ததின் லாபம் விக்ரம் பின்னே பாய்ந்து வேகமாக விழுந்ததற்குச் சரியாக இருக்க, சுகிர்தராஜாவின் பாராசூட் குடையை விக்ரமால் மேலேயிருந்து பார்க்க முடிகிறது. கையைக் காலை ஆட்டி, தன் இருவரையும் அவன்பால் செலுத்திக்கொண்டான்.

சுகிர்தராஜாவுக்கு இப்போது குஷியாகவே இருந்திருக்க வேண்டும்.

'முத்து முத்துச் சேலைக்காரி
முத்துப் பொன்னு ஓலைக்காரி
தண்டைச் சிலம்புக்காரி
தலைவாசல் வீட்டுக்காரி
அவளைத் தேடுவானேன்
கவலைப் படுவானேன்
கச்சேரிக்குப் போவானேன்
கைகட்டி நிற்பானேன்?'

என்று பாடிக்கொண்டே வந்தான். 'ஒழிஞ்சாண்டா விக்ரமாதித்தன்! என்ன ஒரு நெஞ்சழுத்தம், திறமை, விளையாட்டு, ச்ச்ச்! எல்லாம் சர்க்காருக்குக் கொடுத்து என் மாளணும்? எங்கிட்டே சேர்ந்திருந்தாக்க சிமோனா வளர்த்திருப்பேனே. ப்ளேன்லேருந்து விழுந்து சாவுன்னு சாதகத்தில் எழுதியிருந்தா யாரால என்ன பண்ண முடியும் சொல்லு?'

விக்ரமைக் கட்டிக்கொண்டு தாறு மாறு அடிகளாகச் சரிந்து கொண்டிருந்த ப்ரீத்தி அவனை வானத்தில் அத்தனை கிட்டத்தில் பார்த்து, 'உனக்கு மூக்கில மச்சம்' என்றாள்.

'விழுந்ததும் கவனிக்கலாம்.'

'விக்ரம்! ராக்கெட் என்ன ஆச்சு? நான் கொடுத்த ப்ரொக்ராமை அதில் மாத்திட்டியா?'



'நான் கொடுத்த காகிதத்திலே இருந்த... ஊ ஆய்!'

'கீழ பார்க்காதே.'

'நீ கொடுத்த காகிதம் பாதில பறந்து போச்சு!'

'அய்யோ! அப்ப மாத்தலை?'

'ஆச்சு.'

'எப்படி?'

'இங்கருந்து அங்க, ராக்கெட்டை நோக்கிப் போறப்பவே நெட்டுருப் பண்ணிட்டேன். ஸி3 ஏ5 ஸெவன்ஸி.'

'விக்ரம், யூ ஆர் கிரேட்! அப்ப நாம எங்க போயிட்டிருக்கோம்.'

'ஸாம்பியாவுக்குக் கொஞ்சம் வேகமாப் போயிட்டிருக்கோம்!'

'ஆஆஆஆ...'

கீழே விரித்திருந்த குடையை அப்போதுதான் பார்த்தான். மெல்ல மெல்ல மிதந்துகொண்டிருந்த சுகிர்தராஜா தற்செயலாக மேலே பார்க்க அந்த இரண்டு பேரும் வானில் உருண்டு அவனை நோக்கிப் பாய்ந்து வருவதை உணர்ந்துகொள்ளுமுன் பாராசூட்டின் வலுவான கயிறுகளை விக்ரம் பற்றிக்கொண்டு, 'ஹலோ சுகி! மறுபடி சந்திக்கிறோம் இல்லை?' என்றான்.

## 22

அந்தரத்தில் தொங்கிய பாராசூட்டின் கயிறுகளை பிடித்துக் கொண்டு விக்ரமும் அவன் மேல் பல்லிபோல் ஒட்டிக்கொண்டு ப்ரீத்தியும் தெரிய, கலிர்தாராஜா அதிர்ந்துபோய் அவர்களை எப்படி விலக்குவது என்று தெரியாமல் விழித்தான். தன் பத்திரமும் முக்கியமானதாக இருக்க, விக்ரம் மிகுந்த சிரமத்துடன் தன் கைப்பிடியை விடாமல் இரட்டைப் பனுவைச் சமாளித்து கலிர்தாராஜாவின் தோள்பட்டையில் பொருத்தியிருந்த ஹார்னஸ்ஸை விடுவிக்க முயற்சி செய்தான். மூவரின் பளுவில் அந்த பாராசூட் வேக வேகமாகச் சரியத் தொடங்க, விக்ரம் கீழே ஸ்டாம்ப் ஒட்டினாற்போல அங்கங்கே பச்சையும் மனை மனையும் தெரிய ப்ரீத்திக்கு தலை சுற்ற விக்ரம் கலிர்தாராஜாவின் கோட்டைப் பிடித்தான்.

'எதுக்கு வம்பு? கீழே இறங்கினதும் உனக்கு என்ன வேணுமோ தர்றேன். விட்டுரு... இந்தக் குட்டியைக் கைவிட்டுரு. ரெண்டு பேரும் சமாளித்து இறங்கிரலாம். ரெண்டு பேர் லோடு தாங்கும். விட்டுரு விக்ரம்.'

விக்ரம் அவன் சொன்னதைக் கவனியாது தன் காரியத்தில் கண்ணாயிருந்தான். அது கலிர்தாராஜாவின் பாராசூட் பிணைப்பைத் துண்டிப்பது!

'வேண்டாம் வேண்டாம்! நீயும் விழுந்துருவ! எல்லாரும் போயிருவம்!'

'பரவாயில்லை கலி!'



சொன்னதைக் கேளு விக்ரம்!' இப்போது அவன் குரலில் கெஞ்சல் மிஞ்சியது.

விக்ரம் இப்போது கலிர்தாராஜாவின் பக்கிள் போன்றிருந்த சாதனத்தை விடுவித்துவிட, குபுக் என்று அவன் சரிய, கடைசிக் கடைசியாக விக்ரமின் இடுப்பைப் பிடித்துக்கொண்டான்.

மறுபடி வானில் வேகமாக மிதந்த பாராசூட் அதன் புவி ஈர்ப்புத் தனம் அவ்வப்போது கலைய, காற்றின் எதிர்ப்புச் சக்திகளும் குலைய, இங்குமங்கும் ஆடியது. விக்ரமின் பார்வையில் கலிர்தாராஜா மெல்ல மெல்ல விழிபிதுங்க பாண்டின் ஜிப்பைத் தளர்த்த, சரக்கென்று கலி வரிந்து கால்களுக்கு வந்துவிட்டான்.

நடனமாடிய பாராசூட் மேலில் விக்ரம், விக்ரமோடு பாச்சை போல ஒட்டிக்கொண்டு ப்ரீத்தி. அவன் காலடியில் தொங்கிக் கொண்டு கலிர்தாராஜா.

கலி அப்போது கீழே பார்க்க விருப்பமின்றி, 'ஆழம் அதிகமாக இருக்குது! விக்ரி விக்ரி! விக்கோபா! நானும் தமிழு. நீயும் தமிழு. நமக்குள்ள என்ன சண்டை? விட்டுரு!'

'இவளும்தான் தமிழு!'

'மலையாளக் குட்டின்னு நினைச்சேன். சரி, நானும் ஆம்பிளை, நீயும் ஆம்பிளை!'

'இது என்ன ஷூ! கொஞ்ச நேரத்தில் கழண்டுக்கும் கலி! உனக்கு சான்ஸே இல்லை!'

அவன் சொன்னதைப் போல விக்ரமின் காலணி கழல, அதைப் பற்றுக்கோலாக வைத்திருந்த கலி விக்ரமின் கால் சதைகள் வழண்டுபோகும் அளவுக்கு வழுக்கி, 'விக்ரம் என்னை விட்டுராதே! விக்ரம்! பாஸ்! பாஸ்! விட்டுராதே பாஆஆஆஆஸ்...'

அலறல் மெல்ல மெல்லக் காற்றால் கலைக்கப்பட்டு கலிர்தாராஜா வேகமாகக் கீழே விழ அவன் வடிவம் பர்ஸ்பெக்டிவ் உபயத்துடன் சுருங்க, கலி இங்கிருந்து ஒரு சிறிய, மிகச் சிறிய புள்ளியாகிப் போனான். அவன் குரலும் கரைந்து போயிற்று.

'இப்ப என் முதுகுச் சதையை அள்ளிப் பிடிச்சிக்கிட்டு இருக்கியே அதை விட்டா கொஞ்சம் ரத்த ஓட்டம் இயல்பா ஆகும். இப்ப நிறையவே இடம் இருக்குது பாராசூட்ல!'

ஒரு மகத்தான காட்டு மலர்போல பாரசூட் இப்போது சுதாரித்துக் கொண்டு ஆடி ஆடி இறங்கியது.

இந்தச் சமயம் ப்ரா அலுவலகத்தில் ஜீவி ராவும் மற்ற அதிகாரிகளும் அந்தப் பிம்பத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். அது அக்னி புத்திரன் ஃப்ளைட் பாத் என்று சொல்லப்பட்டிருக்கும் பறக்கும் பாதை.

அது மெல்ல மெல்ல டில்லி நோக்கி நகர விமானப் படை அதிகாரி, 'மிஸ்டர் ராவ், இனிமேல் காத்திருக்க முடியாது. நான் தலைமைச் செயலகத்துக்குத் தகவல் கொடுத்தே ஆக வேண்டும்.'

ராவ் பதில் சொல்லாமல் திரையைப் பார்த்தபடியே, வாயினை நோக்கிச் சொன்னார். 'ஏர் கமோடோர் லால்! ஒரு நிமிஷம்!'

'என்ன?'

'வந்து பாருங்கள்.'

அதிகாரி மறுபடி திரைக்கு வந்து பார்க்க இப்போது அக்னி புத்திரன் பிம்பம் திசைமாறியது. தெளிவாக அதன் ஆரம்பகால இலக்கிலிருந்து பிரிந்து வங்காள விரிகுடாவை நோக்கித் திரும்பியது.

'டார்கெட் மாறிவிட்டது.'

'இப்ப நம்மை நோக்கி வர்றது! மை காட்!'

'இருங்க, அவசரப்படாதீங்க. இப்ப நிச்சயம் புரிஞ்சு போயிருக்க, விக்ரம் பாதையைத் திசை திருப்பிட்டாங்கறது!'

'மெட்ராஸ்! மெட்ராஸ்தான் வருது! நம்ம தலைல விழப் போவுதா?'

'இல்லய்யா! கடலை நோக்கிப் போவுது. சரியாப் பாரும்.'

'மிஸ்டர் ராவ், நிசந்தானே?'

'நீயேதான் பார்க்கறியே. கொஞ்சம் இரு. கம்ப்யூட்டரையே கேட்டுரலாம்!'

இப்போது அதன் பாதையைக் கம்ப்யூட்டர் கணக்கிட்டுச் சொல்ல, பத்திரமாக இங்கிருந்து அந்தமான் செல்லும் திசையில் தள்ளிப்போய், பத்திரமான இடத்தில் விழும் என்று தெரிந்தது.



'டில்லியில் யாரையும் எச்சரித்து இப்போது பயப்படுத்த வேண்டாம். சும்மாயிரு. எல்லாம் முடிந்தபின் தகவல் சொல்லிக் கொள்ளலாம்.'

'என்ன சொல்வீர்கள்?'

'அக்னிபுத்ரன் மீட்கப்பட்டுவிட்டது என்று.'

'மிஸ்டர் ராவ், அதன் மூக்கில் இருக்கும் அணு ஆயுத வெடிகுண்டு என்ன ஆகும்?'

'அது வெடிக்காது. ப்ரொக்ராமை மாற்றி விட்டதால் கடல் ஆழத்துக்குப் போய் கம்மென்று அடங்கிவிடும். ஆரம்ப ஆணைத் தொடரிலேயே அதை ஆர்ம் பண்ணவில்லை.'

'இப்ப எல்லாம் பத்திரம் என்று சொல்லுங்கள்?'

'அப்படித்தான் தோன்றுகிறது.' ராவ் தன் கைக்குட்டையை எடுத்து நெற்றியெல்லாம் நனைந்திருந்த வியர்வையை ஒற்றிக் கொண்டார்.

'கை குடுங்க ராவ்!'

'கை குடுக்கவேண்டியது எனக்கல்ல. விக்ரமுக்கு!'

'அவன் எங்கே இருக்கிறான்?'

விக்ரம் மெல்ல மெல்ல ப்ரீத்தியுடன் மிதந்து இறங்கிக் கொண்டிருந்தான். 'விக்ரம்!'

'யா.'

'இத்தனை நாளா நானும் நீயும் சேர்ந்தாப்பலதானே இருந்திருக்கோம்! கம்ப்யூட்டர் ரூம்ல பார்த்ததிலிருந்து இந்தப் பாரசூட் வரைக்கும் ஒட்டிக்கிட்டுதானே இருந்திருக்கோம்?'

'ஆமா.'

'ஒரு வார்த்தை?'

'என்ன?'

'அய்யா, ஒரு வார்த்தை! எம்மேல அக்கறை காட்டி, 'ப்ரீத்தி, எப்படி இருக்கே? சௌக்கியமா? அப்டின்னா கூடப்போதும். அந்த மாதிரி ஒரு வார்த்தை சொல்லியிருக்கியா?'

'நேரமில்லை.'

'இப்பத்தான் எல்லாம் முடிஞ்சிருச்சே. இப்ப நேரமில்லையா?'

'என்ன சொல்லணும்?'

'சௌக்கியமான்னு.'

விக்ரம் அவளை நிமிர்த்திப் பார்த்தான். 'யோசித்துப் பார்த்தா, உன்னைப் பார்த்து ஐ லவ் யூன்னு கூடச் சொல்லலாமான்னு தோணுது. பரவால்லை. சுமாரா இருக்க!'

'சொல்லு! சொல்லு! மறுபடி சொல்லு!'

'நாம இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்திருச்சு!'

'என்னது?'

'தரை வந்தாச்சு!'

விக்ரமும் ப்ரீத்தியும் அந்தக் கடைசிப் பத்தடிகளை தொபுக்கென்று விழுந்தார்கள். பாரசூட் தோகை அவர்களைத் தொடர்ந்து தரையில் பரவி அருகில் விழுந்தது. விக்ரம் ப்ரீத்தியை விடுவித்து, தன்னையும் விடுவித்துக் கொண்டான். கை கால்களை உதறிக் கொண்டான். சுற்றுமுற்றும் பார்த்தான். அவர்கள் ஒருவிதமான மைதானத்தில் விழுந்திருந்தார்கள். ஓரத்தில் மாந்தோப்பு போலத் தெரிந்தது.

ப்ரீத்தி, 'நான் உயிரோடத்தான் இருக்கனா? இது என்ன இடம், சொர்க்கமா?' என்றாள்.

'சத்தியமா இல்லை! சொர்க்கத்தில இந்த வெயில் இருக்காது. சலாமியாவா, இந்தியாவா தெரியலை.'

அவர்கள் எதிரே தூரத்தில் ஒரு புள்ளி மாதிரி தெரிந்து பெரிதாகிக் கொண்டு வந்தது.

'கபிர்தராஜாவா?' என்றாள் ப்ரீத்தி பயத்துடன்.

'இல்லை. சான்ஸே இல்லை! ஆறாயிரம் அடியிலிருந்து விழுந்து யார் பிழைச்சாலும் அவன் பின்னால போயிரவேண்டியதுதான்! ரொம்ப தாகமா இருக்கு. வாட்டர் கிடைக்குமா?'



'பார்க்கலாம். குதிரைக்காரர் வர்றாரே. அவரைக் கேட்கலாம்!'

அருகே வந்து குதிரை முன்னங்கால்களைத் தூக்கி நிற்க, குதிரைக்காரர் தன் தலைக்கட்டை விலக்கி,

'விக்ரோம்!'

'போச்சுடா! வந்துட்டானா இங்கயும்?'

ராஜகுமாரி இனிமாவளி கீழே குதித்தாள்.

## 23

ராஜகுமாரி இனிமாலி வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தன் நாட்டில் சமீபத்தில் நிகழ்ந்த குழப்பங்களையும் அதன் விளைவுகளையும் அதனால் ஏற்பட்ட பயங்கரச் சண்டைகளையும்விட வானத்தில் மெல்ல மெல்ல மிதந்து வந்த விஸ்தாரமான பிளாஸ்டிக் குடையின் மேல் கவனம் அதிகமிருந்தது.

ஆவல் முழுவதும் அந்த வானத்துப் புஷ்பத்தில் இறங்கி வருவது யார் என்பதில் பதிந்திருந்தது. சுகிர்தராஜாவாக இருந்தால் உடனே குத்திக் கொன்றுவிடுவது என்று தீர்மானித்திருந்தாள். அது விக்ரமாக இருந்தால்?

அவள் குதிரைமேல் உட்கார்ந்து கொண்டு கவனித்துக் கொண்டிருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் அந்த பாரசூட், மைதானத்தின் மேல் கவிய, ராஜகுமாரி அங்கே சென்றாள். விக்ரமும் அந்தப் பெண்ணும் மண்ணைத் தட்டிக்கொண்டு எழுந்திருப்பதைக் கவனித்து மிகுந்த சந்தோஷத்துடன் அருகே சென்றாள்.

'மறுபடியும் வந்துட்டியா? விடமாட்டாய்யா இவ' என்றாள் ப்ரீத்தி.

'விக்ரோம்!' என்றாள் அவனருகே வந்து. அவன்தானா என்று தொட்டுப் பார்த்தாள். கண்களால் அவனை முழுசாகப் பார்த்தாள்.

'பாரு விக்ரம், ஏதாவது இவகூட வம்பு பண்ணே, அவளைக் கல்யாணம் கில்யாணம்னு ஆரம்பிச்சே, எனக்குக் கெட்ட கோபம் வரும்.'



'இரு இரு. இவங்க நாட்டில என்ன வழக்கமோ! எதுக்காக வந்திருக்கான்னு விசாரிக்கலாமே. என்ன மாலி?'

'அய்!' என்றாள்.

'அய்ங்கறா. ஆபத்து! பார்வையே நல்லால்லை. உன்னை அந்தப்புரத்துக்குக் கூப்பிடறா விக்ரம். வந்த வேலை என்ன? திரும்ப நம்ம நாட்டுக்குப் போய்க் காரியம் முடிஞ்சிட்டதுன்னு ரிப்போர்ட் பண்ண வேண்டாமா? என்ன சொல்ற?'

இதற்குப் பொருந்தினாற்போல ராஜகுமாரி சலாமியில் கிச்சு கிச்சு என்ற நாலைந்து வாக்கியம் பேசினாள்.

'என்ன சொல்றா?' என்றாள் ப்ரீத்தி.

'என்னவோ கேக்கறதுக்கு இனிமையா இருக்கு. என்னைக் கூப்பிடறான்னு அர்த்தமா இருக்கலாம். வந்தது வந்துட்டம். போய் ராஜாவெல்லாம் விசாரிச்சுட்டு சாப்பிட்டுட்டு ஆத்துக்குப் போகலாமே' என்றான் விக்ரம்.

'நீ உள்ளே போனா வரமாட்டே.. காரண்ட்டி.'

'ஏன்?'

'அவள் கண்லயே பயங்கர அழைப்பு. அணைப்பு எல்லாம் தெரியுது விக்ரம்! ஒண்ணு செய். என்னை மெட்ராஸ்ல கொண்டு விட்டுட்டுத் திரும்ப வந்து என்ன வேணா செய்துக்க. அம்மா, விக்ரம் சார் அப்றம் வருவார். அப்றம்!' என்று மிகையாகக் கையைப் பின்பக்கம் அபிநயித்துக் காட்டினாள்.

'அய்! அப்றம்?' என்றாள் ராஜகுமாரி. 'விக்ரம்!' என்று அவன் புஜத்தைப் பிடித்து இழுத்தாள்.

'நீ மட்டும் போனே, கெட்ட கோபம் வரும்.' என்றாள் ப்ரீத்தி.

அவனை வலது புறத்தில் பிடித்து இழுக்க, அவன் சட்டை கைப் பகுதி பர்ரென்று கிழிந்தது. இனிமாலி இடது கையைப் பிடித்துக் கொண்டாள்.

'ஹோல்டிட்! ஹோல்டிட்! எனக்கு ஒரு ஐடியா தோணுது!' என்றான் விக்ரம்.

அந்தச் சற்றே நவீனமான, உறுத்தாத கட்டடத்தை நீங்கள் நந்தம்பாக்கம் போகிற வழியில் பார்த்திருக்கலாம். அந்தக் கட்டடத்தில் எட்டாவது மாடியில் ஒரு முட்டை வடிவ மேசையின் தலைமாட்டில் ஜீவி ராய் உட்கார்ந்திருக்க, எதிரே மேசையின் மற்ற நாற்காலிகளில் ராணுவ, கடற்படை, விமானப் படை, போலீஸ் பெரிய அதிகாரிகள் வீற்றிருக்க, மேசையில் ஒரு சிவப்பு டெலிபோனின் மேல் எல்லோரும் கவனமாக இருந்தார்கள்.

ராய் 'க்ரும்' என்று கனைத்துக்கொண்டு கண்களில் உற்சாகத்துடன்... 'ஜெண்டில்மென், நல்ல செய்தி! அக்னி புத்திரன் நம் தலை மேலேயே விழவேண்டிய அபாயத்திலிருந்து நாம் தப்பித்து விட்டோம். விக்ரமும் ப்ரீத்தியும் சேர்ந்து டில்லியை நோக்கிச் சென்ற அதன் பாதையை மாற்றி விரிகுடாவில் விழும்படிச் செய்துவிட்டார்கள். நாளை செய்தித்தாளில் 'மாமூலான ராக்கெட் பரிசோதனை நிறைவேற்றப்பட்டது' என்று ஓரத்திலே ஆரவாரமில்லாது செய்தி வரும்.'

'விக்ரம் என்ன ஆனான்?'

'தப்பித்து விட்டானா?'

'இன்னும் தகவல் தெரியவில்லை. சாட்டிலைட் மூலம் கான்ஸலேட்டுக்கு சானல் கேட்டிருக்கிறேன்.'

'வாங்க மிஸ்டர் இளவழகன். ஜெண்டில்மென், யூ நோ மிஸ்டர் இளவழகன்.'

'என்ன ராய்? பாணம் கெடைச்சிருச்சாமே!' என்று துண்டால் விசிறிக்கொண்டு உட்கார்ந்தார்.

'ஆமாங்க.'

'வெரிகுட் வெரிகுட்? அப்ப செலவு மிச்சமின்னு சொல்லு. எங்கே விக்ரம் பய? தமிழ்காரப் புள்ளையைக் கூப்பிட்டு பொன்னாடை மின்னாடை போத்தி விழா வெக்கலாம்! ஆளு உயிரோடத்தான் இருக்கானா? செத்துட்டான்னா செலை வெக்கலாம்.'

'உயிரோட இருக்கான்னுதான் நம்பிக்கை. அவங்களுக்குத்தான் கால் போட்டு வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கோம்.'



அப்போது டெலிபோன் மணி அடிக்க எல்லோரும் சட்டென்று மௌனமாகிவிட ராய் அதை எடுத்து, 'எஸ்' என்றார்.

'மெட்ராஸ் ப்ரா திருவனங்களா?'

'ஆமாம்.'

'சாட்டிலைட்டில சானல் கேட்டிருந்திங்களா ஸலாமியா கான்ஸலேட்டுக்கு?'

'ஆமாம்.'

'ஸ்பீக் அப்! வீடியோ வேணுமா? இண்டல்ஸாட் வழியா மூணு நிமிஷம் கொடுக்கிறாங்க. எக்ஸ்பெரிமெண்டல்.'

'குடுங்க, ஆளையும் பார்த்தாப்பல இருக்கும்.'

'என்னவாம்?'

'பேசவும் பேசலாம், பார்க்கவும் பார்க்கலாம்.'

பக்கத்தில் சிப்பந்தி கொண்டுவந்து ஒரு சிறிய 12 இன்ச் டிவி மானிட்டரை அமைக்க, டெலிபோனில் 'ஹலோ' என்று நூறு குரல்கள் கேட்டன. கடைசியில், 'திஸ் இஸ் விக்ரம்!'

'ஹலோ விக்ரம், எப்படி இருக்க?' என்று ராய் முகமலர்ந்து கேட்க மற்றவர்கள் கூர்ந்து கவனித்தனர்.

'ஃபைன் சார். எல்லாக் காரியமும் முடிஞ்சிருச்சு. ப்ரீத்தி இஸ் ஓக்கே!'

'ப்ரீத்திக்கு, உனக்கு யாருக்கும் அடிகிடி படலையே?'

'அதிகம் இல்லை.'

'அதிகம் இல்லைன்னா?'

'எனக்குச் சின்னதா ப்ராக்சர். அவளுக்குச் சின்னதா ப்ராக்சர். எனக்கு எலும்பு முறிவு. கண்ல ஒண்ணு பேர்ந்து போய்டுச்சு. இப்பக்கூட கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் பேச முடிகிறது.'

ராய் கவலையுடன், 'அப்படியா?' என்றார்.

அப்போதுதான் விக்ரம் பேசிக்கொண்டிருந்த அறையின் காட்சி அதில் மறைந்திருந்த டெலிவிஷன் கேமரா மூலம் தெரிய ஆரம்பித்தது.

விக்ரம் ஒரு வட்ட வடிவப் படுக்கையில் படுத்திருந்தான். ஏதோ ரோமாபுரி மன்னன்போல ஜோராக உடையணிந்திருக்க, இந்தப் பக்கம் திராட்சை ரசம் ஒருத்தியும் அந்தப் பக்கம் மாதுளை ரசம் இன்னொருத்தியும் தர, அருகே பிறிதொருத்தி பிடித்துவிட, கைதாங்கலாக ஒருகை ராஜகுமாரி மேலும் மற்றொரு கை ப்ரீத்தி மேலும் போட்டுக்கொண்டு கோப்பையைச் சிப்பிக் கொண்டிருந்தான்.

'அப்படியா! இப்ப எப்படி இருக்கே? எங்க இருக்கே?'

'ஆஸ்பத்திரிலே! சவாமிய ஆஸ்பத்திரிலே! நல்ல அடி!'

இளவழகன் ரிஸீவரைப் பற்றிக்கொண்டு, 'எங்கெல்லாம் வலிக்குது?'

'உடம்பு பூராங்க!' அவர்கள் இருவரும் அவன் புஜங்களைப் பிடித்துவிட,

'கை கால் எல்லாம் அமுக்கறாப்பல வலியா?'

'ஆமாங்க. கரெக்டாச் சொன்னீங்க!'

'மருந்து சாப்பிடறியா?'

'ஆமாங்க, இப்பகூடச் சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன்!' என்றான் கோப்பையை நாக்கு நுனியால் நிரடி.

'மாம்பழம், மாதுளை, எலந்தை இப்படிப் பழங்களா நிறையலே சாப்பிடு!'

'அது இந்த ஊர்ல நிறையக் குறுங்குதுங்க. ராவ்கிட்ட சொன்னுங்க. இந்தமாதிரி உடம்பு சரியில்லாததால...'

ராஜகுமாரி எதிரே இருந்த கேமராவைக் காட்டினாள். விக்ரம் அதை உடனே உணர்ந்து, 'மிஸ்டர் ராவ், ஆம் ஐ ஆன் டிவி? மை காட்!'

'ஆமா, வீடியோகூட எடுத்துக்கிட்டு இருக்கோம்.'



'இது ரொம்ப அநியாயம்' என்று இந்தப் பக்கம் அந்தப் பக்கம் பார்த்து ஒரு ஆப்பிள் வெட்டும் கத்தியைத் தேர்ந்தெடுத்துக் கேமராவின் மேல் குறி வைத்து எறிய, ஜிலுங் என்று சப்தம் கேட்டு பிம்பம் கரைந்து போய் மணல் வாரியது.

'முழுக்கக் காட்டாம முடிச்சுப்புட்டானே!' என்று அங்கலாய்த்தார் இளவழகன்.

---